செய்தி இதழாகப் பதிவு பெற்றது.

# சிந்தாமணி

ரூ 2/50

THE MOST INFLUENTIAL TAMIL WEEKLY WITH THE LARGEST CIRCULATION IN SRI LANKA

CHINTAMANI இல. 720 1983 செப்டம்பர் 25 ஞாயிற்றுக்கிழமை ★ ★ சிந்தாமணி

...ERSITY OF JAFFNA ... RECEI...

# மட்டக்களப்பு சிறை உடைப்பு!

## காவலரைக் கட்டி வைத்து கைதிகள் கடத்தப்பட்டனர்

### சிங்கராயர், கோவை, தர்மர், நிர்மலா வெளியேற மறுப்பு

### மொத்தம் 229 பேர் தப்பி விட்டனர்

— சிந்தாமணி மட்டக்களப்பு நிருபர்: பி. ஜோசப் —

மட்டக்களப்பு, செப். 24

**மட்டக்களப்பு சிறைச்சாலை வெள்ளிக்கிழமை இரவு சீருடையில் வந்த ஆயுதபாணிகளான இளைஞர்களால் உடைக்கப்பட்டது. சிறைக் காவலரைக் கட்டி வைத்து 51 அரசியல் கைதிகள் கடத்தப்பட்டனர். மொத்தம் 229 பேர் சிறையிலிருந்து தப்பி விட்டனர்.**

அரசியல் கைதிகளில் வண. சிங்கராயர், கோவை மகேசன், டாக்டர் தர்மலிங்கம், திருமதி நிர்மலா நித்தியானந்தன், தேவராஜா ஆகிய ஐவரும் சிருடை இளைஞர்களுடன் செல்ல மறுத்து விட்டனர் என்று தெரிய வருகிறது.

★ தப்பியவர்களில் 2 மதகுருமார்

வண. சிங்கராயர், கோவை மகேசன், டாக்டர் தர்மலிங்கம் ஆகியோரும் தப்பி விட்டனர் என்று முதல் வந்த செய்திகள் தெரிவித்திருந்தன. இதுபற்றி நேற்றைய தினபதி கொழும்புப் பதிப்பிலும் செய்தி வெளியாகி இருந்தது. ஆனால் இறுதியாக தெரிவிக்கப்பட்ட தகவல்களின்படி இவர்கள் தப்பிச் செல்லவில்லை என்பது ஊர்ஜிதப் படுத்தப்பட்டது.

தப்பியவர்களில் ... எஸ். ஏ. டேவிட், வண ... டாக்டர் ஜெயகுலராஜா, எம். நித்தியானந்தன், தம்பா பிள்ளை மகேஸ்வரன், பி. பரமதேவா ஆகியோர் முக்கியமானவர்கள் ஆவர்.

மட்டக்களப்பில் தொடர்ந்து பதற்ற நிலை நிலவுகிறது. இன்று நண்பகல் வரை நகரில் கடைகள் மூடப்பட்டிருந்தன. வீதியில் செல்வோரையும், வாகனங்களையும் மறித்து பாதுகாப்புப் படையினர் சோதனையிடுகின்றனர்.

**காவலாளிகள் வாய்க்கு பிளாஸ்டிக்**

சிறை உடைப்புச் சம்பவம் பற்றி கிடைத்த தகவல்களின் திரட்டு வருமாறு:—

வெள்ளி இரவு 8.00 மணிக்கும், 8.15 மணிக்கும் இடையில் இராணுவ பாணியில் உடையணிந்த இளைஞர்கள் சிலர் ஆயுதங்களுடன் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு வந்தனர்.

சிறைக் காவலாளியைப் பயமுறுத்தி கதவைத் திறந்தனர்.

அப்போது இன்னுமொரு வாகனத்தில் சீருடை அணிந்த இளைஞர்கள் பலர் அங்கு வந்து நின்றனர்.

சீருடை அணிந்த இளைஞர்கள் சிறைக்குள் புகுந்து ஒரு ஜெயிலர் உட்பட ஒன்பது சிறைச்சாலை உத்தியோகத்தர்களை மடக்கினர். அவர்களின் கைகளைக் கட்டினர், வாய்களை பிளாஸ்டிக்கால் ஒட்டினர்.

★ மேல் மாடியிலிருந்த 37 பேர்

பின்னர் சிறைச்சாலையின் மேல் மாடிக்கு சென்றனர். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்

(2ஆம் பக்கம் பார்க்க)



இளமை தரும் பஞ்சணையில் இளையமுகம் சிவக்கும் — இவள் ஈரஉடல் ரகசியத்தை எழில்பாட்டு மறைக்கும்!
கலகலக்கும் வளைகரத்தை கன்னத்தில் வைத்தே — அந்தக் காமன்கை புத்தகத்தின் கவியாக வந்தாள்!

## தகவலுக்கு ரூ. 50,000

மட்டக்களப்பு சிறையிலிருந்து தப்பி ஓடிய கைதிகள் பற்றிய தகவல்களைத் தெரிவிப்போருக்கு 50 ஆயிரம் ரூபா சன்மானம் வழங்கப்படும்.

பொலிஸ் மா அதிபர் திரு. ருத்திரா இராஜசிங்கம் இது குறித்து அறிவித்துள்ளார்.

சிறையில் இருந்து தப்பிச் சென்றவர்கள் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையங்களில் சரணடைய வேண்டும். பொலிஸாரால் கைது செய்யப்படும் பட்சத்தில் தப்பிச் சென்ற குற்றத்துக்காக அவர்கள் மேலதிகமாக ஐந்து வருட சிறைவாசம் அனுபவிக்க வேண்டிவரும் எனவும் பொலிஸ் மா அதிபர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## கடற்படை உஷார்

மட்டக்களப்பு சிறையிலிருந்து தப்பியோர் கடல் மூலம் இந்தியா புறப்படக்கூடும் என்ற ஊகத்தை அடுத்து பாக்கு நீரிணைப் பகுதியில் இலங்கை தனது கடற்படையை உஷார்படுத்தியுள்ளது.

சிறையில் இருந்து தப்பிச் சென்றவர்களைப் பற்றிய தகவல் தெரிந்தால் பொலிஸாருக்கு அறிவிக்கும்படி பொதுமக்கள் கோரப்பட்டுள்ளனர்.

## சொந்த ஊருக்கு அருகில் இடமாற்றம்

கொழும்பு, செப். 25

பொலிஸ் உத்தியோகத்தர்கள் சொந்த ஊர்களுக்கு அருகிலேயே பெரும்பாலும் இடமாற்றம் செய்யப்படுவார்கள்.

இந்தப் புதிய திட்டம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வரும்.

பொலிஸ் திணைக்களம் இதற்கான முடிவை மேற்கொண்டிருப்பதாக பொலிஸ் மா அதிபர் திரு. ருத்திரா இராஜசிங்கம் சிந்தாமணிக்குத் தெரிவித்தார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் வீட்டுப் பிரச்சினை, வாழ்க்கைச் செலவு உயர்வு, குழந்தைகளின் கல்வி வசதி ஆகியவற்றை கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

இதற்கிடையில் அடுத்த வருடத்துக்கு இடமாற்றம் கோரி சுமார் 1,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் விண்ணப்பித்துள்ளனர் என பொலிஸ் தலைமையக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் சிந்தாமணிக்குத் தெரிவித்தார். (த-மு)

## புலேந்திரன் கொலை: சந்தேக நபர் ஜேர்மனியில் கைது!

வவுனியாவில் ஐக்கிய சேயக் கட்சி அமைப்பாளர் புலேந்திரனின் கொலை தொடர்பாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் ஒருவர் மேற்கு ஜேர்மனியில் கைது செய்யப்பட்டுள்ளார் என இரகசிய பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்கு ஜேர்மனியில் சில இலங்கை இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக சர்வதேச பொலிஸார் (இன்டர்போல்) இலங்கை இரகசியப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

சர்வதேச பொலிஸார் அனுப்பியுள்ள பெயர் பட்டியலில் புலேந்திரனின் கொலை தொடர்பாக தேடப்பட்டு வந்த சந்தேக நபரின் பெயரும் இருப்பதாக இரகசியப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை இலங்கைக்குக் கொண்டு வருவது குறித்து இரகசியப் பொலிஸார் சர்வதேச பொலிஸாருடன் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கின்றனர். (த-மு)

## அப்துல் மஜீத் விலகினார்

### ரங்கநாயகி புதிய மாவட்ட அமைச்சர்

மட்டக்களப்பு, செப் 24

மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் பதவியில் இருந்து ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத் விலகினார். புதிய மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராக திருமதி ரங்கநாயகி பத்மநாதன் நியமிக்கப்பட்டார்.



ரங்கநாயகி

பொத்துவில் இரண்டாவது எம். பி. யான திருமதி ரங்கநாயகி பத்மநாதன் வெள்ளிக்கிழமை மாலை மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றார்.

பதில் தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சரும், சம்மாந்துறை எம். பி. யுமான ஜனாப் அப்துல் மஜீத் மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் பதவியில் இருந்து விலகியதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

திருமதி ரங்கநாயகி பத்மநாதன் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திரு. எம். கனகரத்தினத்தின் சகோதரி. திரு. கனகரத்தினம் காலமானதைத் தொடர்ந்து பொத்துவில் இரண்டாவது எம். பி. யாக நியமனம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. எம். அந்தோனிமுத்து எதிர்வரும் புதன்கிழமை



அப்துல் மஜீத்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கடும் சண்டை

பேரூட், செப். 24

லெபனானின் தென் பகுதியில் நிலை கொண்டுள்ள ஷெல்லாக்களுக்கும் லெபனான் அரச படைகளுக்கும் இடையில் இன்று காலை கடும் யுத்தம் மூண்டதாக அறிவிக்கப்படுகிறது.

சண்டையில் மோட்டார்கள், ராக்கெட்டுக்கள், இயந்திரத் துப்பாக்கிகள் பெருமளவு பயன்படுத்தப்பட்டன.

அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த நால்வர் காயம் அடைந்தனர். (த)

## யாழ். நகரில் சட்டவிரோத மின்சார பாவனை அதிகரிப்பு!

### தாமாகவே முன்வந்து தொடர்பு கொண்டால் கரிசனையுடன் ஆலோசிக்கப்படும் என்கிறார் ஆணையாளர்

யாழ்ப்பாணம், செப். 24

யாழ்ப்பாணத்தில் சட்ட விரோதமாக மின் இணைப்புக்களைப் பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. முறையான வழிகளால் மின் விநியோகத்தை பெற முடியாது என்ற காரணத்தால் மின்சாரத்தை சட்ட விரோதமாகப் பாவிப்போரும் இருந்து வருகின்றனர். இப்படியானவர்கள் தாமாகவே முன் வந்து எம்முடன் தொடர்பு கொள்வார்களானால் அவர்களது விடயத்தில் கரிசனையுடன் ஆலோசிக்கப்படும்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை வருமாறு:—

யாழ். மாநகர எல்லைக்குள், குறிப்பாக குடிசனச் செறிவு மிகுந்த பகுதிகளில், யாழ் மாநகர சபைக்குச் சொந்தமான பிரதான மின்சார மூலக்கம்பிகளிலிருந்து அனுமதி அளிக்கப்படாத மின் இணைப்புகள் பெறப்பட்டு மின்சாரம் திருடப்படுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சன செறிவுள்ள பகுதிகளில், எல்லை மீறி அதிகாரம் அளிக்கப்படாத மின் இணைப்புக்கள் பெறப்படும் போது மிகைப்பட்ட மின் சுமை ஏற்படுகிறது. அதனால் அப்பகுதிக்கு மின்சாரம் வழங்கும் உப மின் நிலையம் பாதிக்கப்படுகிறது. நுகர்வோருக்குக் கிடைக்கும் மின்சார

(2ஆம் பக்கம் பார்க்க)

## இன ஒற்றுமைக்கு நிரந்தர ஆணைக்குழு

### ஜனாதிபதிக்கு லலித் யோசனை

கொழும்பு, செப். 25

இலங்கையில் சகல இன மக்களுக்கும் நியாயம் கிடைக்கும் வகையில் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவும், அதன் மூலம் தேசிய ஒற்றுமையை உறுதிப்படுத்தவும் நிரந்தர ஆணைக்குழு ஒன்றை நியமிக்க ஆலோசிக்கப்படுகிறது.

இப்படி நிரந்தர ஆலோசனைக் குழு நியமிக்க வேண்டும் என்று வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு யோசனை தெரிவித்திருக்கிறார்.

இனவாதத்தைத் தூண்டிவிடுவோருக்கு கடும் தண்டனை வழங்கச் சிபார்சு செய்யும் அதிகாரமும் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சர் தமது யோசனையில் தெரிவித்திருக்கிறார்.

தமிழர், சிங்களவர், முஸ்லிம், பறங்கியர் எவராக இருப்பினும் அவர்களுக்கு உள்ள பிரச்சினைகள், குறைபாடுகள் குறித்து இந்த ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## 800 பேர் பலி

இந்திய மாநிலமான அஸ்ஸாமில் வெள்ளத்துக்கு மேலும் 50 பேர் பலியாகினர்.

இறந்தவர்களின் எண்ணிக்கை 800 ஆக அதிகரித்துள்ளது. (த)

## வீரசிங்க தலைமையிலான குழு மட்டக்களப்பு விரைவு

கொழும்பு, செப் 24

மட்டக்களப்பு சிறை உடைப்பு அம்பவத்தை அடுத்து இரகசியப் பொலிஸ் பகுதியின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. ஹெர்பர்ட் வீரசிங்க தலைமையிலான உயர்மட்ட குழு ஒன்று விமான மூலம் மட்டக்களப்புக்கு விரைந்தது.

இக்குழுவின் சிறைச்சாலை ஆணையாளர் திரு. ஜே. பி. தெல்கொட, அரசாங்க இரசாயன பகுதி உயர் அதிகாரிகள் ஆகியோரும் உள்ளனர்.

சிறை உடைப்பு சம்பவம் தொடர்பாக இரகசியப் பொலிஸாரும், சிறைச்சாலை திணைக்கள அதிகாரிகளும் தனித்தனியே விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (த-மு)

ஆகக் கூடுதலான விற்பனையுள்ள தமிழ் வார இதழ் சிந்தாமணி தான்

## துரத்திப் பிடித்தனர்

யாழ்ப்பாணம், செப். 24
நல்லூர் அரசடியைச் சேர்ந்த திருமதி தங்கம்மா என்பவரின் தங்கச் சங்கிலியை அறுத்த வாலிபர், பொதுமக்களால் துரத்திப் பிடிக்கப்பட்டார்.

ஒரு கத்தியைக் காட்டி, 8,000 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அந்த வாலிபர் பறித்தெடுத்தார்.

திருமதி தங்கம்மா சத்தமிடவே, பொதுமக்கள் அவ்வாலிபரை துரத்திப் பிடித்து, யாழ். பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மேற்படி வாலிபர் மற்றும் பல வழிப்பறிகளில் ஈடுபட்டவர் எனத் தெரியவந்துள்ளது. (க)

## மானிப்பாயில் கொள்ளை

யாழ்ப்பாணம், செப் 24
மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜத்தின் கடை ஒன்றில் ஆயிரம் ரூபா கொள்ளையிடப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று வாலிபர்கள், அக்கடைக்குள் நுழைந்து, முகாமையாளரைப் பயமுறுத்தி, பணத்தைப் பறித்துச் சென்றனர்.

இது தொடர்பாக, யாழ். பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். (க-120)



இலங்கை தோட்டத் துரைமார் சங்க 47 ஆவது வருடாந்த மாநாடு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில் நேற்றுக் காலை கொழும்பு தப்ரபேன் ஹோட்டலில் நடைபெற்றது.

அங்கு சங்க நிர்வாக உறுப்பினர்களை சங்கத் தலைவர் திரு. கே. எம். ஜீ. எம். ஹபுகொட ஜனாதிபதிக்கு அறிமுகம் செய்து வைத்த போது எடுத்த படம். (ப)

# நாடு முழுதும் பொலீஸார் உஷார்

கொழும்பு, செப். 24
மட்டக்களப்பு சிறையில் இருந்து கைதிகள் தப்பிச் சென்றதை அடுத்து நாடு முழுவதும் உள்ள பொலீஸார் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

பொலீஸ் மா அதிபர் திரு. ருத்திரா இராஜசிங்கம் இதற்கான உத்தரவை பிறப்பித்தார்.

கொழும்பு பிராந்தியத்தில் உள்ள பொலீஸாரும் உடனடியாக சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை கடற்படை முகாமில் இருந்து மட்டக்களப்பு பகுதி கடலை கண்காணிப்பதற்கு ரோந்து படகுகள் அங்கு அவசரமாக அனுப்பி வைக்கப்பட்டன.

விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் விமானங்களும் மட்டக்களப்புக்கு விரைந்தன. (த-மு)

# இன ஒற்றுமை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
உதாரணமாக கல்வியில் அல்லது வேலைவாய்ப்பில் எவரும் தமக்கு அநீதி நேர்ந்திருக்கிறது என்று கருதினல் முறைப்பாடு செய்யலாம்.

நிர்வாகத்துக்கான நாடாளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்ஸ்மன்) இருக்கும் அதிகாரங்கள் இந்த ஆணைக்குழுவுக்கு இருக்கும்.

நான்கு சிங்களவர், ஒரு இலங்கைத் தமிழர், ஒரு இந்தியத் தமிழர், ஒரு முஸ்லீம் ஆகிய மொத்தம் ஏழு பேர் இந்த நிரந்தர ஆணைக்குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தமது யோசனையில் தெரிவித்திருக்கிறார். (த-ப)

## கரவெட்டி தபால்அலுவலகம் மீண்டும் திறக்கப்படுகிறது

உடுப்பிட்டி, செப். 24
கடந்த மாதம் நடந்த கொள்ளைச் சம்பவத்தைத் தொடர்ந்து மூடப்பட்டிருந்த கரவெட்டி தபால் அலுவலகம் திங்கட்கிழமை முதல் மீண்டும் திறக்கப்பட இருக்கிறது.

இப்பகுதி மக்கள் விருப்புக் குழு ஒன்றை அமைத்து தபால் அலுவலகத்துக்கு பாதுகாப்பு வழங்க தொண்டர் படை ஒன்றையும் அமைத்திருக்கின்றனர்.

இதற்கிடையில் கரவெட்டி பகுதியில் மூடப்பட்ட மூன்று கள்ளுத் தவறணைகள் இப்போது மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. (அ-ப-303)

# மட்டக்களப்பு....

(2 ஆம் பக்கம் பார்க்க)
கீழ் கைதான 37 அரசியல் கைதிகள் மேல் மாடியில் வைக்கப்பட்டிருந்தனர்.

கொழும்பு வெலிக்கடை சிறையில் குட்டிமணி உட்பட 52 கைதிகள் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து அவர்கள் வெலிக்கடை, நீர்கொழும்பு சிறைச்சாலைகளில் இருந்து பாதுகாப்புக் கருதி அங்கு கொண்டு வரப்பட்டிருந்தனர்.

### ★ ஐவர் தப்ப மறுப்பு

இந்த 37 பேரில் வண. சிங்கராயர், கோவை மகேசன், டாக்டர் தர்மலிங்கம், திருமதி நிர்மலா நித்தியானந்தன், தேவதாஸ் ஆகிய ஐவரும் இளைஞர்களுடன் வர மறுத்தனர் எனத் தெரிகிறது. மற்ற 32 பேரையும் இளைஞர்கள் அங்கிருந்து கடத்திக் கொண்டு சென்றனர்.

இன்னும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த புன்னைக்குடாவைச் சேர்ந்த 11 பேர், மட்டக்களப்பைச் சேர்ந்த 8 பேர் ஆகியோரையும் சிறை இளைஞர்கள் சிறைக் கதவுகளை உடைத்து மீட்டனர்.

பின்னர் அங்கு சாதாரண கைதிகள் வைக்கப்பட்டிருந்த ஏனைய சிறைக் கூடங்களின் கதவுகளையும் துவக்கினால் சுட்டும் வேறு முறைகளிலும் திறந்தனர்.

### ★ வாகனங்களில் ஏற்றினர்

அங்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த வாகனங்களில் அரசியல் கைதிகளை சிறை இளைஞர்கள் ஏற்றிக் கொண்டனர்.

சாதாரண கைதிகளை துவக்கு முனையில் ஓடும்படி விரட்டி விட்டனர்.

பின்னர் சிறை இளைஞர்கள் வாகனங்களை மட்டக்களப்பு வாவி கரைக்கு விரைந்து கொண்டு சென்று, வாவியில் தயாராக நிறுத்தப்பட்டிருந்த படகுகளில் அரசியல் கைதிகளை ஏற்றிக் கொண்டு மறைந்தனர் என்று தெரிகிறது.

### ★ மொத்தம் 241 பேர் கைதிகள்

மட்டக்களப்பு சிறைச்சாலை பதிவேட்டின்படி வெள்ளிக்கிழமை அங்கு 241 கைதிகள் இருந்தனர். அவர்களில் 229 பேர் தப்பியிருக்கின்றனர்.

தப்பியவர்களில் 51 பேர் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள். மற்றைய 178 பேரும் சாதாரண கைதிகள்.

அரசியல் கைதிகள் 5 பேருடன் இன்னும் சாதாரண கைதிகள் 7 பேரும் சிறையை விட்டுச் செல்லவில்லை.

தப்பியவர்களில் காந்தீயம் இயக்கத் தலைவர் எஸ். ஏ. டேவிட், வண. ஜெயதிலகராஜா, அருட்தந்தை சினேதுரை டாக்டர் ஜெயகுலராஜா, வண. சின்னராசா, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் எம். நித்தியானந்தன், பனாகொடை இராணுவ முகாமில் இருந்து முன்னர் தப்பிச் சென்று எனினும் பிடிபட்டிருந்த சி. மகேஸ்வரன், ஏறாவூர் கொள்ளை மற்றும் சம்பவங்கள் பல தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட பி. பரமதேவா, என். வாமதேவன் ஆகியோரும் அடங்குவர்.

### ★ மூவர் கைதாகினர்

தப்பி ஓடிய சாதாரண கைதிகளில் மூவரை இன்று நண்பகல் மட்டக்களப்பு பொலிஸார் கைது செய்தனர்.

இன்னும் நான்கு சாதாரண கைதிகள் பொலீஸாரிடம் சரண் அடைந்தனர்.

வெள்ளி இரவு சிறைச்சாலை உடைப்பு சம்பவம் பற்றிய தகவல் அறிவிக்கப்பட்டதும் அங்கு உடனடியாக ஆயுதப் படையினர் வரவழைக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு பகுதி சுற்றி வளைக்கப்பட்டு பெரும் தேடுதல் வேட்டை ஆரம்பமானது.

வீடு வீடாக சோதனை நடந்தது.

நகரில் அடுத்தடுத்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

இரவு 10.30 மணியிலிருந்து ஊரடங்கு அமுலுக்கு வந்தது.

### ★ ஜீப்பை கடத்த முயற்சி

சிறைச்சாலையில் இருந்து அரசியல் கைதிகளைக் கடத்திச் சென்றவர்கள் அந்த வழியாக வந்த மக்கள் வங்கிக்குச் சொந்தமான ஜீப் ஒன்றையும் கடத்த முயன்றனர். எனினும் அந்த முயற்சி கைகூடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தப்பி ஓடிய கைதிகள் பலர் மட்டக்களப்பு வாவியைக் கடந்து மண்முனை மேற்குப் பகுதிக்குச் சென்றனர் என்று தகவல் கிடைத்திருந்தது. அப்பகுதியில் பொலீஸாரும், இராணுவத்தினரும் சல்லடை போட்டுத் தேடி வருகின்றனர்.

அதேவேளை மட்டக்களப்பு முகத்துவாரம் பகுதியில் ஒரு அலுமினியம் பொடி மோட்டார் வான் கடற்கரை ஓரமாக மணலில் கைவிடப்பட்டிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

மட்டக்களப்பு வாவி ஓரத்தில் ஒரு தோணியில் இரண்டு துப்பாக்கிகளும் சில கைக்குண்டுகளும் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

### ★ துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி

இரவு பொலீஸாரின் தேடுதலின் போது வாவித் தெருவில் ஒருவர் துப்பாக்கிச் சூடுபட்டு மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவரது பெயர், குணம் வெட்பிரசாத். சுமார் 45 வயது. நான்கு குழந்தைகளின் தந்தை. முன்னர் மட்டக்களப்பு கூட்டுறவு வங்கியிலும், வாழைச்சேனை காகித ஆலையிலும் வேலை செய்தவர்.

இவர் வீட்டு வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்த போது சூடு பட்டதென்று தெரிவிக்கப்படுகிறது.

இதைத் தவிர சிறைச்சாலை உடைப்புச் சம்பவத்தின் போது எவரும் இறக்கவில்லை என்று தெரிய வருகிறது.

பொலீஸாரும் முப்படையினரும் தேடுதல் வேட்டை இன்று காலையும் தொடர்ந்தது.

### ★ நகரில் கடை அடைப்பு

காலையில் மட்டக்களப்பில் சகல வாகனங்களும் நிறுத்தி சோதனையிடப்பட்டன. நகருக்கு வரும் சகலரும் பொலீஸாரதும் இராணுவத்தினரதும் சோதனைக்கு உள்ளாகினர்.

மட்டக்களப்பில் சகல பகுதிகளிலும் முப்படையினரும் பொலீஸாரும் ரோந்து சுற்றினர்.

இன்று நண்பகல் வரை நகரில் எந்தவொரு கடையும் திறக்கப்பட்டிருக்கவில்லை. திரைப் படமாளிகைகள் மூடப்பட்டிருந்தன.

காலையில் தளர்த்தப்பட்ட ஊரடங்கு இன்றிரவு 6.00 மணியிலிருந்து மீண்டும் அமுலுக்கு வர இருந்தது.

மட்டக்களப்பில் இராணுவத்தினரின் பலம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அம்பாறையில் இருந்து ஒரு விசேட இராணுவப் பிரிவு இங்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் கல்லடி கிராம அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் தற்காலிகமாக முகாமிட்டிருக்கின்றனர்.

சம்பவத்தின் போது சிறைச்சாலையில் இருந்த அரசியல் கைதிகள் 37 பேரும் வருமாறு:

வண. ஜெயதிலகராஜா, வண. சிங்கராயர், வண. சின்னராசா, டாக்டர் ஜெயகுலராஜா, கோவை மகேசன், டாக்டர் தர்மலிங்கம், எம். நித்தியானந்தன், திருமதி நிர்மலா நித்தியானந்தன், எஸ். ஏ. டேவிட், வி. வெகட்பிரமணியம், கே. தேவதாஸ், வி. மகேந்திரன், தங்க மகேந்திரன், ஜி. பத்மநாதன், கே. மயில்வாகனம், கே. சுந்தரலிங்கம், ரி. ரவீந்திரன், ரி. மகேஸ்வரன், சி. பிரேமானந்தன், எம். இராமச்சந்திரன், எஸ். சித்திரவேல், எஸ். இராஜாஜி, எஸ். ஜெயப்பிரகாஷ், எஸ். மகேஸ் சுந்தராசா, என். வாமதேவன், ஏ. நடராஜ பெருமாள், பி. மகேஸ்வரராஜா, ரி. ஜெயதாஸ், எம். ராஜன், ஜி. ஞானசேகரன், ஐ. தட்சணாமூர்த்தி, எம். பவானந்தன், பி. குணவேல், எஸ். பூநிதரன், எஸ். கணேசலிங்கம், கே. அந்தனிப்பிள்ளை, எஸ். இரத்தினசிங்கம். (ம-ஜ- 42)

# யாழ். நகரில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மும் பாதிக்கப்படும், மின் விளக்குகள் ஒளி இழந்து காணப்படும்.

மேலும் இலங்கை மின்சார சபையிடம் இருந்து பணம் செலுத்தி தொகையாக கொள்வனவு செய்யும் மின்சாரத்தையே தனது மின் நுகர்வோருக்கு சபை விநியோகித்து வருகிறது என்பதால் அதிகாரம் அளிக்கப்படாது திருட்டுத் தனமாக நுகரப்படும் மின்சாரத்துக்கும் சேர்த்தே இலங்கை மின்சார சபைக்கான கொடுப்பனவுகளை சபை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

இந்நிலை தொடருமானால் திருட்டுத்தனமாகப் பெறப்படும் மின்சார விரயத்தால் சபைக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்வதற்காக சட்ட முறையாக மின்சாரத்தை உபயோகித்து நேர்மையாகவும் ஒழுங்காகவும் அதற்கான கட்டணங்களைச் செலுத்தி வரும் மின் நுகர்வோர் பாதிக்கப்படும் வகையில் அவர்களது மின்சாரக் கட்டணங்களையே மேலும் மேலும் அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும்.

திருட்டுத்தனமாக மின்சாரம் பெறுவோர் மீது சட்ட முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டு, தவறு இழைத்தோர் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டாலன்றி மின்சாரம் நுகர்வோரின் நலனைப் பாதுகாக்க முடியாது போகும் என்று அஞ்சுகிறோம்.

அத்தகைய நடவடிக்கைகளில் சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஈடுபடும் போது மேற்படி சமூக விரோதிகளால் உத்தியோகபூர்வமான தமது கடமைகளை மேற்கொள்ளவிடாது அவர்கள் தடுக்கப்படுகிறார்கள். ஆகவே பொலீஸாரின் உதவியை நாட வேண்டியுள்ளது.

திருட்டுத்தனமாக மின்சாரம் பெறுவோர் மீது சபையின் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் சட்ட முறையான தமது உத்தியோகபூர்வமான கடமைகளை நிறைவேற்றும் போது சமூக விரோதிகளிடம் இருந்து அவர்களுக்குப் பொது மக்கள் பாதுகாப்பு அளிக்க முன்வர வேண்டுமென வேண்டுகிறோம்.

பொது நலனுக்காக மட்டுமல்ல, உங்கள் தனிப்பட்ட நலனை முன்னிட்டும் அவ்வாறு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

ஆயினும் முறையான வழிமுறைகளால் அதிகாரம் அளிக்கப்பட்ட மின் விநியோகங்களைப் பெற முடியாது என்று கருதி தவறாக இத்தகைய நடவடிக்கைகளில் இறங்கி இருப்பவர்கள் தாமாகவே எம்முடன் தொடர்பு கொள்வார்களானால் அவர்களது விடயத்தில் கரிசனையுடன் ஆலோசிக்கப்படும்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-120)

## அப்துல் மஜீத்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பில் நடக்கும் அமைச்சரவை உப குழுவின் கூட்டம் ஒன்றுக்கு சமூகமளிக்குமாறு அழைக்கப்பட்டுள்ளார். (த-ப-42)

## டெலிவிஷன்

### ரூபவாஹினி

6.02 டோம் பொக்ஸ்
6.30 கார்ட்டூன் சித்திரம்
6.45 எகொலொஜிக்கல் மேட்டர்
7.00 செய்திகள் – தமிழ்
7.15 நெத்சர
8.00 மெடிக்கல் ரிப்போட்
8.15 செய்திகள் – சிங்களம்
8.30 ஈதாவரிவ
9.00 மாரியாஜே
9.30 செய்திகள் – ஆங்கிலம்
9.45 மாரியாஜே தொடர்ச்சி

### ஐ. டி. என்

6.31 பிளேபொக்ஸ்
7.00 செய்திகள் – தமிழ்
7.15 கிங் கிளோட் ஷோ
7.45 கோஸ்ட்-மிஸிஸ் மூவர்
8.15 செய்திகள் – சிங்களம்
8.30 பிரைட் அன்ட் பிரஜீடிஸ்
9.30 செய்திகள் – ஆங்கிலம்
9.45 மஜீஷன் தொடர்

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்

செல்வன்
தரணிதரன் (பிரபு)
19—09—83

கொழும்பு செட்டியார் தெரு ஸ்ரீ முத்துவிநாயகர் தேவஸ்தானம் சிவஸ்ரீ சாம்ப தணிகாசலக் குருக்கள் (ராஜாக் குருக்கள்) ஜெயலக்ஷ்மி தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரபு தனது முதலாவது பிறந்தநாளை 19.09.83 அன்று தெஹிவளையில் சிறப்பாக கொண்டாடினர். இவரை அப்பா, அம்மா, தாத்தாமார், பாட்டிமார், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமன்மார், மாமிமார், ரமணி அண்ணு, லலிதா அக்கா மற்றும் கொழும்பு ஜெயகுமார், சதீஸ்குமார் உற்றார், உறவினர் அனைவரும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்க என வாழ்த்தினர்.

வி. இ: 123214

## பிறந்த நாள் வாழ்த்து



27—9—1983
கனகராஜா தம்பதிகளின் செல்வப் புதல்வன்
அருண் பிரகாஷ்
இல. 33, ஐ. பீ. சீ. ரோட்
கொழும்பு—6.

அருணனவன் நிலையில் புகழ்பெறவும் வேண்டும் — நிதம்
அன்னையுடன் தந்தையடித் தொழவும் வேண்டும்
மண் உலகே மாகம் எனக் கூறுவோரும் — உன்றன்
மலையளவு உயர்வு கண்டு வாழவேண்டும்
பொன்மனதில் பாசமதை தேக்கி வாழ்வில்
பொற்காலம் உருவாக்கி உயரவேண்டும் என்று
கண் என நீ பிறந்துவிட்ட இந்த நாளில் — கன்னித்
தமிழ்க் கவிதை தந்து நினை வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துக் கூறும்:

பெற்றோர் — உற்றார் — உறவினர்கள்
வி. இ. 123337

# சிந்தாமணி சிறுவிளம்பரங்கள்

## இஸ்லாமிய நூல்

ஏ. எம். அபூபக்கர் எழுதிய "இஸ்லாமிய வரலாறு" மூன்றும் பாகம். அப்பாஸியாக்கள் கால வரலாற்றைக் கொண்டது. விலை ரூபா 35/-. முனீரா பப்ளிகேஷன்ஸ், 86, ஒல்ட் ரோட், காத்தான்குடி-2.

வி. இ. 009842

## "விலாசங்கள்"

தமிழில் தொடர்பு கொள்ளக் கூடிய உள்நாட்டு, வெளிநாட்டு பேனு நண்பர்களின் விலாசங்களை, தபாலில் பெற விரும்புவோர் 4/50க்கான முத்திரை அனுப்புக! "PENPALS CLUB" 189, Central Road, Colombo-12.

வி. இ: 123299

## விற்பனைக்கு

36 ஸ்ரீ போர்ட் டிரக்டருடன், பெட்டி, கலப்பை, காற்றுடி, படகு என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். நாராயணசாமி, "மஹேசுரி வாசா", கல்லடி, உப்போடை, மட்டக்களப்பு.

வி. இ. 009483

## வீடு விற்பனை

மாவனல்லை வளவ்வத்தையில் சகல வசதிகளும் கொண்ட 21/1 இல வீடும், காணியும் (பர்ச்சஸ் 21) உடனடி விற்பனைக்கு உண்டு. பஸ் நிலையம், வைத்தியசாலை, வங்கி, பசார், பொலீஸ் நிலையம் யாவும் மிக அண்மையில் உடன் தொடர்பு கொள்க. எஸ். ஏ. எம். சமத், மாறுவ, மாவனல்லை.

வி. இ:123206

## குத்தகைக்கு

மாவனல்லை பசாரில் சிறிய கடை முஸ்லிம்களுக்கு மட்டும் குத்தகைக்கு வழங்கப்படும். விண்ணப்பிக்கவும்— விளம்பர இலக்கம்— 9314 மே/பா சிந்தாமணி விளம்பர பீடம், த. பெ. 1257 கொழும்பு – 12.

## ஆடவர்களுக்கு!

ஆடவர்களே! உங்கள் அந்தரங்கமான உறுப்பில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் நிவர்த்தி செய்து கொள்ள விபரங்களுக்கு சுயவிலாசமிடப்பட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்க. முகவரி— பி. எம். திசாநாயக்கா, அரசாங்க பதிவு பெற்ற குப்த விஞ்ஞான மாந்திரீக நிபுணர், (நான்கு தேவாலய பிரதம தர்மகர்த்தா) 55, மிகுந்து மாவத்தை, கொழும்பு-12.

வி. இ. 009650

## நியூமரலாஜி

நியூமரலாஜி அபிமானிகளின் பேராதரவுடன் எமது சேவையைத் தொடர்கிறோம். தத்தமது பிறந்த திகதிக்கேற்ப பெயரைதும், வாழ்க்கையின் இன்னோரன்ன பல அம்சங்களையும் அதிர்ஷ்டமாக்கிக் கொண்டு – மகிழ்ச்சிகரமாக வாழ விரும்பியோர் எமக்கு எழுதலாம்.
Sulfika Buhary, 86, Horana Road, Eluwila — Panadura.

வி. இ: 044447

## பெண்களுக்கு

பெண்களின் மாதவிடாய் எவ்வளவு தாமதமானாலும் உடன் நிவாரணம் பெறுவதற்கும், பாதுகாப்பான சிகிச்சை பெறுவதற்கும் சந்திப்புகள் பூரண சுகத்தின் பின் பணம் செலுத்தலாம். சிகிச்சை நிலையம் தினசரி திறந்திருக்கும். கிராண் கிளினிக் மாதன் கடலை.

வி. இ. 242362

## கட்டழகு

பெண்கள் கட்டழகுடன் திகழ, தனது உயரத்திற்கும் பருமனுக்கும் ஏற்ற மார்பகங்கள் அல்லாத மெலிந்த, தளர்ந்து போன பெண்களுக்கு அழகான பருமனான மார்பகங்களையும் தோற்றத்தையும் பெற விரும்பினால், சுயவிலாசமிடப்பட்ட முத்திரை கவருடன் தொடர்பு கொள்க. முகவரி: வீரா வதி அத்தனைக்க, 55, மிகுந்து மாவத்தை, கொழும்பு-12.

வி. இ. 009650

## மலையாள மாந்திரீகம்

ஆரம்பக் கல்வி முதல் பட்ட... சட்டப்படிப்பு மாணவர்களின் ஞாபக சக்தி – திறமைச் சித்தி போன்ற அனைத்தும் கைகூட கல்வி ஞானக் கவசம், மற்றும் ஆண், பெண், வசியம், வியாபார விருத்தி யந்திரம் இலவசகளுக்கு 130/- மட்டுமே. இலவசத் தொடர்புகளில்லை. மணியோடருடன் தொடர்பு கொள்க. நேரில்... வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் வருக. சோதிட தத்துவஞானி, பி. கே. சாமி, 33, தினச்சந்தை. – நுவரெலியா.

வி. இ. 242363

## யந்திரம் மந்திரம்

யாருக்கும் தொல்லை முடியாத சொல்லியும் பலன் கிடைக்காத மனக்கஷ்டங்களா, காதலர்களுடைய பாசம் மாறுமல் இருக்க வேண்டுமா; கணவன் மனைவியிடையே உள்ள சச்சரவு வெறுப்பு சந்தேகம் தீர வேண்டுமா, குடும்பத்தில் அன்பும் சமாதானமும் நிலைக்க வேண்டுமா, தேவையானவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டுமா, இவை யாவற்றிற்கும் நிவாரணமளிக்கப்படும். இரகசியங்கள் வெளியிடப்பட மாட்டா. விபரங்களுக்கு சுயவிலாசமிடப்பட்ட முத்திரை கவருடன் தொடர்பு கொள்க முகவரி: பி. எம். திசாநாயக்கா, அரசாங்க பதிவு பெற்ற குப்த விஞ்ஞான மாந்திரீக நிபுணர் (நான்கு தேவாலய பிரதம தர்மகர்த்தா) 55, மிகுந்து மாவத்தை, கொழும்பு – 12. தொலைபேசி. 33955.

வி. இ. 009650

## ஜோதிட கணிப்பு

* பிறந்த – குறுக் குறிப்பு – 25/- * பிறந்த ஜாதகக் குறிப்பு – 55/- (புத்தக வடிவில்) * திருமணப் பொருத்தம் – 30/- * தற்போதைய பலன் அறிய – 15/- * என் ஞானக் குறிப்பேடு – 55/- (நடந்த 4 – நடப்பது 5 வருடம்) இலவச கடிதத் தொடர்போ – வி. பி. பி. ஆடரோ கவனிக்கப்படமாட்டாது. மணியோடருடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சோதிட தத்துவஞானி P. K. சாமி 33, தினச்சந்தை – நுவரெலியா.

வி. இ. 242363

## வெட்டினாலும் இறவாத மீன்

கடலில் நட்சத்திர மீன் என அழைக்கப்படும் ஒரு வகை மீன் இனம் இருக்கின்றது. துண்டு துண்டாக வெட்டினாலும் அது சாக மாட்டாது. மாறாக ஒவ்வொரு துண்டும் ஒரு புதிய நட்சத்திர மீனாக மாறும். (ர)

## இன்றைய திரைகளில்

**கெப்பிட்டல்** (கொழும்பு) 2.00, 6.00, 9.30
**ஈரோஸ்** (பாமன்கடை) 2.00, 6.00, 9.30
**லிடோ** (யாழ்நகர்) 2.00, 6.00
**நியூநிவோலி** (நுவரெலியா) 2.30, 6.00, 9.30
**விஜயா** (மட்டுநகர்) 2.30, 6.00, 9.30
பாக்கியராஜ், சத்தியகலா சுராட்டிமணி, அனிதா நடித்த
**விடியும் வரை காத்திரு**
(கலர்)
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

**சமந்தா** 2.30, 6.00
**சிஹாரா** (திருமலை) 2.30, 6.00
**ஜுப்பிட்டர்** (குருநாகல்) 10.30, 2.30, 6.00, 9.00
கமல்ஹாசன் ஸ்ரீதேவி நடித்த
**வாழ்வே மாயம்**
(கலர்)

**கிங்ஸ்லி** 2.00, 6.00
**ஹரன்** (யாழ்நகர்) 10.30, 2.00
சிவாஜிகணேசன் சரிதா நடித்த
**துணை**
(கலர்)

**ஜெஸீமா** 2.00, 6.00
**ராணி** (யாழ்நகர்) 10.30, 2.00
**சரஸ்வதி** (திருமலை) 2.00, 6.00
**நியூ சினிமா** (குருநாகல்) 10.00, 2.30, 6.00, 9.00
கமலஹாசன் அம்பிகா நடித்த
**சகலகலா வல்லவன்**
(கலர்)

**முருகன்** (ஜிந்துப்பிட்டி) 2.30, 6.00
**கொன்கோட்** (தெஹிவளை) 2.00, 6.00, 9.30
**ராஜா** (யாழ்நகர்) 10.00, 2.00
**புவனு** (கல்முனை) 2.30, 6.00
**அந்த 7 நாட்கள்**
(கலர்)

● ஆழ்கடலுக்குள் ஹோட்டல்கள் ● அண்டவெளியில் விடுமுறை ● விண்வெளிக்கு காரில் பயணம்

# 14,000 மைல் வேகத்தில் ஓடும் நவீன ரயில்கள்

## 2,000 ஆம் ஆண்டின் புதுமை பற்றி விஞ்ஞானிகள் கருத்து

சரித்திர ஏடுகளைப் புரட்டி கடந்த காலத்தை நாம் அறிந்து கொள்கிறோம். செய்திப் பத்திரிகைகள் நிகழ் காலத்தை எமக்குக் கூறிக் கொண்டிருக்கின்றன. இதே போன்று எதிர்காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதில் மனிதன் இப்போது அதிக கவனம் செலுத்துகிறான்.

நிர்க்கதரிசிகள், ஜோதிடர்கள் எதிர்காலத்தைப் பற்றிக் கூறுகின்றனர். அதே போன்று அறிவியல் மேதைகளும் எதிர்காலத்தில் என்ன என்ன மாற்றங்கள் வரும் என்பதை கணித்து அனுமானித்துச் சொல்கிறார்கள்.

விஞ்ஞானத் துறையில் ஏற்படவிருக்கும் மாற்றங்கள் பற்றி அனேகர் இப்போதே பலவிதமான ஹேஷ்யங்களைக் கூற ஆரம்பித்து விட்டனர்.

அவர்களது கூற்றுப்படி 21ஆம் நூற்றாண்டில் உலகில் பெரும் மாறுதல்கள் ஏற்படும்.

நூதனமான சுற்றுடலுடன் கூடிய அழகிய நகரங்கள் விண்வெளியில் உருவாகும். மக்கள் விண்வெளியில் விடுமுறை நாட்களைக் கழிப்பர்.

2000ஆம் ஆண்டில் லிபியா, கியூபா, லைபீ, ஈரான், நைஜீரியா உட்பட அனேக நாடுகள் அணுகுண்டுகளைத் தயாரிக்கும்.

பண வீக்கத்துடன் போட்டியிட்டுக் கொண்டு மோட்டார் வாகனங்கள் யானை விலை குதிரை விலையில் விற்கும். சில நகரங்களில் 1980ஆம் ஆண்டுக்கு முந்திய மோட்டார் வாகனங்கள் பிரவேசிப்பதற்கு முற்றாகத் தடை விதிக்கப்படும்.

மனித உழைப்பால் இயங்கும் வாகனங்களுக்கு மீண்டும் கிராக்கி ஏற்படும். அவ்வாறான வாகனங்கள் அதிக அளவில் விற்பனையாகும். நெருக்கடி இல்லாத நகர வீதிகளில் சாரதி இல்லாமல் பஸ் வண்டிகள் ஓடும்.

கம்பியூட்டர் முறையில் இயங்கும் இந்த பஸ் வண்டிகளை "ரோபோ" இயந்திர மனிதர்கள் இயக்குவர்.

ஒரு மணித்தியாலத்திற்கு 14 ஆயிரம் மைல்கள் ஓடக் கூடிய ரயில்கள் சேவையில் ஈடுபடும். எனினும் இவற்றுக்கு எரிபொருள் செலவு தற்போதுள்ள செலவுடன் ஒப்பிடும் போது பத்தில் ஒரு பங்கு குறைவாகவே இருக்கும்.

உலகின் ஐந்து கண்டங்களையும் ஒருங்கிணைத்த சேவையில் இந்த ரயில்கள் ஈடுபடுத்தப்படும்.

21ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் விண்வெளிக்கு கார்கள் மூலம் பிரயாணம் செய்யக் கூடியதாக இருக்கும்.

பூமியில் இருந்து சுமார் 22 ஆயிரத்து 300 மைல் உயரத்தில் உள்ள செய்மதி ஒன்றில் இருந்து பூமியை நோக்கி ஒரு கேபிள் நாடா தொங்க விடப்படும். அந்தக் கேபிள் நாடா பூமியில் உள்ள உயர்ந்த மலை ஒன்றில் இணைக்கப்பட்டிருக்கும்.

மின்காந்த முறையில் மோட்டார் கார்கள் இந்தக் கேபிள் மூலம் விண்வெளிக்குச் செல்லும். ஒரு காரில் 30 பிரயாணிகளை அல்லது 100 தொன் பாரமான பொருள்களை ஏற்றிச் செல்லக் கூடியதாக இருக்கும். இவற்றின் வேகம் எவ்வளவாக இருக்கும் தெரியுமா? மணித்தியாலத்திற்கு 3,700 மைல்களாக இருக்கும்.

21ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் அதாவது 2010ஆம் ஆண்டில் விண்வெளியில் விடுமுறைகளைக் கழிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படலாம் என்று அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. இப்போது பூமியில் சுற்றிவரும் உல்லாசப் பிரயாணிகளும் உல்லாசம் தேடி விண்வெளிக்குச் சென்று விடுவார்களாம்.

2030ஆம் ஆண்டளவில் இளம் தம்பதிகள் சந்திரனில் தேன்நிலவைக் கழிப்பார்களாம். சிலர் ஆழ்கடலில் தண்ணீருக்கு அடியில் கட்டப்படும் ஹோட்டல்களில் அந்தச் சுவையை அனுபவிப்பார்களாம்.

இவ்வாறு எதிர்காலத்தைப் பற்றி அறிஞர்கள் கூறியிருப்பதைப் பார்த்தால் விஞ்ஞானத்தின் உச்சநிலை என்று கூறி இன்று நாம் பயன்படுத்தும் பொருள்கள் அப்போது நூதன சாலைகளில் காட்சிக்கு வைக்கப்படலாம் என்று தோன்றுகிறது அல்லவா? (ர-ந)

— எம். ஜே. எம். தாஜுத்தீன் —

## அக்கரைப்பற்று

நவ்ஷாட் டிரேடிங் சென்டர், மெயின் வீதியைச் சேர்ந்த ஜனுப் எம். டி. எம். இஸ்மாயில் அவர்கள் எமது சுயாதீனப் பத்திரிகா சமாசத்தின் அக்கரைப்பற்று ஏஜண்டாக நியமிக்கப்பட்டுள்ளார்.

விநியோக மேலாளர்


நவீன முறைப்படி ஆங்கிலம் பேச

5 மாத பயிற்சி

★ இலக்கண அடிப்படையில்
★ பேசிப் பேசிப் பழகுதல்

சனி — மாலை 5.15–8.15
ஆரம்பம்—அக்டோபர் 1

ஆசிரியர்
வீ. ராமநாராயன

கொழும்பு பௌத்த கல்லூரி (ரியோ சினிமா முன்னால்)
கெம்பனித்தெரு


### கல்வித் திணைக்கள ஊழியர்களின் மட்டுப்படுத்தப்பட்ட கூட்டுறவு, சிக்கன கடனுதவிச் சங்கத்தின் பல்கலைக்கழக புலமைப்பரிசில்

மட்டுப்படுத்தப்பட்ட கல்வித் திணைக்கள ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன கடனுதவிச் சங்கத்தின் ஆயுள் பெற்ற உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு பல்கலைக்கழக புலமைப் பரிசில் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1983/1984 கல்வி ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளவர்கள், புலமைப்பரிசில் திட்டத்திற்கு தெரிவு செய்யப்படுவதற்காக சுயவிலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டிய கவர் ஒன்றை இம்மாதம் முடிவதற்கு அனுப்பி புலமைப்பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இப்படிக்கு
அலெப்பாடி
விக்ரம சேனநாயக்க
செயலாளர்

செயலாளர்,
க. ஊ. கூ. க. ச.
இலக்கம்: 294 காலி வீதி,
கொழும்பு—3.

இ. தொ. கா.வுக்கு அரசில் நம்பிக்கை இல்லை;

## தொண்டமான் மட்டும் அமைச்சராக் இருப்பது எப்படி?

### நாடாளுமன்றத்தில் அனுரா கேள்வி

கொழும்பு, செப். 25

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு இந்த அரசாங்கத்தில் நம்பிக்கை இல்லையென்றால், அதன் தலைவர் திரு. எஸ். தொண்டமான் இந்த அரசாங்கத்தில் தொடர்ந்து அமைச்சராக இருப்பது எப்படி?

இப்படி வியாழனன்று நாடாளுமன்றத்தில் வினவினார் நுவரெலியா - மஸ்கெலியா இரண்



அனுரா

டாவது எம். பி. திரு. அனுரா பண்டாரநாயக்கா. (ஸ்ரீ ல. சு. க)

அவசரகால நிலை நீடிப்பை அங்கீகரிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் அவர் பேசினார்.

அவர் கூறியதாவது:—

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இ. தொ. கா. தலைவர் திரு. தொண்டமான் இந்தச் சபையில் பேசியதற்கு முரணாக காங்கிரஸ் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி இந்தியாவில் பேசியிருக்கிறார். அரசாங்கத்தில் நம்பிக்கை இழந்து விட்டதாக திரு. செல்லச்சாமி கூறியுள்ளார். ஹிந்து பத்திரிகையில் செல்லச்சாமியின் பேச்சு பிரசுரமாகி இருக்கிறது.

திரு. செல்லச்சாமி கூறுவதை ஏற்கவில்லையென திரு. தொண்டமான் சொல்வாரா? அல்லது திரு. தொண்டமான் சொல்வதைத் தான் ஏற்கவில்லை என்று திரு. செல்லச்சாமி சொல்வாரா?

எவ்வாறெனினும், இ. தொ. கா. விரைவில் இந்த அரசாங்கத்துடன் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ளப் போகிறது என்பதுதான் உண்மையா?

அரசமைப்புக்கான ஆறாவது திருத்தத்தின் பின்னரும் வடபகுதி பயங்கரவாதிகள் தங்கள் நடவடிக்கைகளைக் கைவிடவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் உலக நாடுகளில் பிரிவினைக்கு ஆதரவு தேடுகிறார். இதனை ஏன் அரசாங்கம் தடுக்கவில்லை?

இந்தியாவுடனான எமது உறவுகளை நாம் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தியாவின் உதவியையும் ஆலோசனைகளையும் பெறுவதில் தவறில்லை.

ஆனால் எமது பிரச்சினைகளுக்கு எம்மால் தீர்வு காண முடியாது என்றும், இந்தியா தலையிட்டால் தான் முடியும் என்றும் ஒரு நிலையை நாம் ஏற்படுத்திவிடக் கூடாது.

திருமதி இந்திரா காந்தி பிரதமராக இருக்கும் வரை இந்தியா இலங்கை மீது படை எடுக்காது. ஆனால் அவருக்குப் பின்னர் நிலைமை எப்படி இருக்கும் என்று கூற முடியாது.

ஆகையால் அவரது அனுசரணையுடன் எமது பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண அரசு முயற்சிக்க வேண்டும்.

இந்தியாவைக் கண்டித்து நாடாளுமன்றத்தில் பேசுவதாலும், பத்திரிகைகளில் எழுதுவதாலும் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

இப்படி அவர் சொன்னார். (ஐ-ப)

## இரவோடிரவாக செல்வந்தராகிவிட வர்த்தகர் முயலக்கூடாது

### சபாநாயகர் ஈ. எல். கருத்து

தலாஸ்பத்துவ, செப். 24

வர்த்தகர்கள் பாவனைப் பொருள்களை சாதாரண விலைக்கு விற்பனை செய்ய வேண்டும். ஒரு இரவிலேயே இலாபத்தைப் பெற்று பணக்காரர்களாக எத்தனிப்பவர்கள் வர்த்தகத் துறைக்கே இழுக்கைத் தேடித் தருபவர்களாவர்."

இவ்வாறு கூறினார், கண்டி எம். பியும், சபாநாயகருமான திரு. ஈ. எல். சேனநாயக்க.

கண்டி கொட்டுகொடெல்ல வீதியில் மட்பாண்டக் கூட்டுத்தாபன விற்பனைக் கிளை ஒன்றைத் திறந்து வைத்துப் பேசும் பொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஏற்கலவே, திருகோணமலை வீதியில் இயங்கி வந்த மட்பாண்டக் கூட்டுத்தாபன விற்பனை நிலையம் சமீபத்திய கலவரத்தின் போது தீக்கிரையாகியது.

அதற்குப் பதிலாகவே இந்த புதிய விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

திரு. சேனநாயக்க தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"நான் புதிய பதவிக்கு வந்த பின் புதிய கடைகளைத் திறந்து வைக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கப் பெற்றது. கண்டி நகரில் இருந்த நவீன சந்தை தீயினால் முற்றாகச் சாம்பராகியது. அந்தக் குறையைத் தீர்க்க இங்கு மட்பாண்டக் கூட்டுத்தாபனக் கிளை ஒன்றும் நவீன சந்தை ஒன்றும் தற்போது திறந்து வைக்கப்படுகின்றன.



சபாநாயகர்

புதிதாக திறக்கப்படும் விற்பனை நிலையங்களில் கருமம் பார்க்கும் இளைஞர்கள் சாதாரண முறையில் இலாபத்தைப் பெற்று வியாபாரத்தின் மகிமையையும், கௌரவத்தையும் காப்பாற்ற வேண்டும்.

சிலர் ஓர் இரவு கழிவதற்கு இடையில் பெரிய தனவந்தர்களாக ஆக முயல்கின்றனர். இது தொழிலுக்கே இழுக்கான ஒரு செயலாகும்"

இவ்வாறு அவர் கூறினார். (ஐ-105)

## வாக்குரிமையும், தேர்தல்களும் பற்றிய இலங்கைப் பாராளுமன்றத்தின் தெரிகுழு

(I) வாக்குரிமையும் தேர்தல்களும் தொடர்பாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் உள்ள ஏற்பாடுகள்;

(II) 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தற் சட்டம்;

(III) 1981 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சனநிபதித் தேர்தல்கள் சட்டம்;

(IV) 1981 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சனநிபதித் தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்;

(V) 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கப் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்;

(VI) 1981 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க மக்கள் தீர்ப்புச் சட்டம்,

என்பவற்றையும் அவற்றோடுதொடர்புபட்ட ஏனைய விடயங்களையும் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கும் நடைமுறையிலுள்ள சட்டத்தில் அவசியமானவையும் விரும்பத்தக்கவையுமான மாற்றங்கள் பற்றி விதந்துரைப்பதற்குமெனப் பாராளுமன்றத்தின் தெரி குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதற்கான சட்டவரைவைக் குழு வகுப்பதற்கு ஏதுவாகக் கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில் வாக்குரிமையும் தேர்தல்களும் தொடர்பான சட்டங்கள் மீளாயப்பட வேண்டுமெனத் தெரி குழு கருதுகிறது.

குழுவுக்குப் பிரதிநிதித்துவங்களைச் செய்ய விரும்பும் சகல ஆட்களும் தமது பிரதிநிதித்துவங்களுக்கு ஆதரவாகக் குழு முன்னர் வாய் மூலச் சாட்சியமளிக்க விரும்புகிறார்களா என்பதைத் தெரிவித்துத் தமது பிரதிநிதித்துவங்களை எழுத்துமூலமாக

வாக்குரிமையும் தேர்தல்களும் பற்றிய தெரிகுழுவின் செயலாளர்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.

எனும் முகவரிக்கு 1983 ஒக்ரோபர் 25, செவ்வாய்க்கிழமையன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டும். அவர்களது சாட்சியத்தைக் குழு கேட்கவிரும்பின் காலக்கிரமத்தில் அவர்களுக்கு அறிவிக்கப்படும்.

எஸ். என். செனெவிரத்ன,
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
1983, செப்ரெம்பர் 20.

# லெபனானில் அமைதிக்கு வழி என்ன?

லெபனான் யுத்தம் உலக அமைதிக்கே சவாலிவிடுத்துக் கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் வியட்நாம் யுத்தம் எந்த அளவுக்குச் சர்வதேச விவகாரங்களுக்கு எல்லாம் சவாலாக அமைந்ததோ அதை விடப் பல மடங்கு உத்வேகத்துடன் லெபனானில் இரத்த ஆறு பெருகிக் கொண்டிருக்கிறது.

லெபனானின் இராணுவ வீரர்களுக்கும், கெரில்லாக்களுக்கும் இடையில் நடக்கும் யுத்தத்தை உடனடியாக நிறுத்துவதற்கு சவூதி அரேபியாவும், அமெரிக்காவும் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்தன. அதை அடுத்து அங்கு பலத்த சண்டை நடைபெறுகிறது.

லெபனான் கடற்கரையில் நின்று கொண்டிருக்கும் அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் இரண்டு, சுமார் 25 நிமிட நேரம் குண்டுமழைப் பொழிந்தன.

லெபனானின் தென் கிழக்கு நகரமான யார்ஸியில் அமெரிக்கத் தூதரகம் இருக்கிறது. கெரில்லாக்கள் தூதரகத்தைச் சுற்றி வளைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். எவரும் காயமடையவில்லை.

இந்தத் தாக்குதலை முறியடிப்பதற்காகவே அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின என்று கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முப்பதுக்கு மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன. பாப்தாவுக்கு அருகில் மலை அடிவாரத்தில் ஜனாதிபதி மாளிகையைச் சுற்றி சுவாலை விட்டு தீ எரிந்து கொண்டிருந்தது என்று செய்தி அறிக்கைகள் கூறுகின்றன.

பேரூட்டிலிருந்து ஒன்பது மைல் தொலைவில் முக்கியமான



அமின் கெமயில்

மலைப் பகுதி ஒன்றைக் கைப்பற்றுவதற்காக பலஸ்தீன கெரில்லாக்களின் துணையுடன் துருஸ் முஸ்லிம்களும், இடதுசாரித் தீவிரவாதிகளும் அரச படைகளுடன் சண்டையிடுகின்றனர். இவர்களுக்கு சிரியா ஆதரவளித்து வருகிறது.

அமெரிக்க அதிகாரிகளும் சவூதி அரேபிய அதிகாரிகளும் டமாஸ்கஸில் சந்தித்து யுத்த நிறுத்த முயற்சியில் இறங்கினார்கள். அவர்களுடைய முயற்சி தோல்வி அடைந்தது.

அதை அடுத்து சவூதி அரேபியப் பிரதிநிதியான இளவரசர் பந்தர் பின் சுல்தான் எதிர்பாராதவிதமாக டமாஸ்கஸிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

சவூதி அரேபியாவின் சில யோசனைகள் குறித்து சிரியா தெரிவித்த கருத்துகள் பற்றி மன்னர் பஹ்துடன் கலந்துரையாடுவதற்காகவே தாம் புறப்பட்டுச் செல்வதாக அவர் பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்தார்.

லெபனான் ஜனாதிபதி அமின் ஜெமயிலின் பதிலைத் தாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

இது ஒரு புறம் இருக்க சிரியாவில் இருந்து மூன்று மாதங்களுக்கு முன்னர் வெளியேற்றப்பட்ட பின்னர் பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத் தலைவர் யாஸீர் அரபாத் லெபனான் வந்தடைந்தார். சைப்ரஸ் சென்று அங்கிருந்து படகு மூலம் அவர் லெபனான் வந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இஸ்ரவேல் பீரங்கிப் படகுகளின் கண்காணிப்பில் இருந்து அவர் எப்படித் தப்பி வந்தார் என்பது தெரிவிக்கப்படவில்லை.

வட லெபனானின் பலஸ்தீன அகதிகளும், கெரில்லாக்களும் யாஸீர் அரபாத்துக்கு வரவேற்பு கொடுத்தனர்.

லெபனானில் இருந்தும், பின்னர் சிரியாவில் இருந்தும் வெளியேற்றப்பட்ட யாஸீர் அரபாத்தின் பிரதான தளம் தற்பொழுது டுனீஷியாவில் இயங்கி வருவது தெரிந்ததே.

சிரியாவில் இருந்து வெளியேற்றப்படும் முன்னர் அவர் டுனீஷியாவில் இருந்து சிரியா வழியாக லெபனான் சென்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

லெபனானில் உள்ள தனக்கு எதிரான கிளர்ச்சிக்காரர்களுக்கு சிரியா உதவுவதாக அரபாத் குற்றஞ்சாட்டியதை அடுத்து சிரியா அவரை வெளியேற்றியது.

அரபாத் வட லெபனான் வந்தவுடன் ஈதுல் – அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாளின் முதலாவது நாள் காலை பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தார். பிரார்த்தனைக்கு வந்திருந்தவர்களினால் அவருக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. பலஸ்தீனர்களின் சமாதிக்கு அவர் பின்னர் மலர் வளையம் வைத்தார்.

அமெரிக்கா மாத்திரமல்ல பிரிட்டனும் லெபனான் பலப்பரீட்சையில் இறங்கத் தயாராகி விட்டது.

பிரிட்டிஷ் கடற்படைக்குச் சொந்தமான மூன்று விமானம் தாங்கிக் கப்பல்களும் கிழக்கு மத்திய தரைக் கடலை நோக்கி நகர ஆரம்பித்தன.

எனினும் லெபனானில் தற்பொழுது உருவாகி உள்ள நெருக்கடிக்கும் பிரிட்டிஷ் கப்பல்களின் நடமாட்டத்துக்கும் தொடர்பு எதுவும் கிடையாது என்று பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

நேட்டோ நாடுகளின் இராணுவ ஒத்திகை ஒன்றில் கலந்து கொள்ளவே பிரிட்டிஷ் கப்பல்கள் செல்கின்றன என்றும், இந்த ஒத்திகை லெபனான் நெருக்கடிக்கு முன்னரேயே திட்டமிடப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் கிழக்கு மத்திய தரைக் கடலை நோக்கிச் செல்லும் பிரிட்டிஷ் கப்பல்கள் லெபனானை தாக்கக் கூடிய தூரத்திலேயே நிலைகொள்ள உள்ளன என்று பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் லெபனான் யுத்தத்தில் தலையிட்டதுடன் நின்று விடாது தமது அரசையும் பலப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் அமெரிக்க ஜனாதிபதி றேகன்.

பேரூட்டில் இருக்கும் அமெரிக்க வீரர்களைப் பாதுகாப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் தாம் மேற்கொள்வார் என்று ஜனாதிபதி றேகன் உறுதி அளித்து இருக்கிறார்.

"நியூஸ் வீக்" சஞ்சிகைக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு அவர் உறுதி அளித்தார்.

லெபனானில் எவ்வளவு அமெரிக்க இராணுவ பலத்தை உபயோகிக்கப் போகிறீர்கள் என்று பத்திரிகையாளர் கேட்டதற்கு, எமது ஆட்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான அளவு பலத்தைப் பாவிக்கப் போவதாக அவர் தெரிவித்தார்.

லெபனான் அரசாங்கப் படைகளுக்கு எதிராகப் போராடி வரும் பலஸ்தீன கெரில்லாக்கள், துருஸ் முஸ்லிம்கள் ஆகியோரின் இராணுவ நிலைகள் மீது அமெரிக்க கடற்படைகள் தொடர்ந்து குண்டுமாரி பொழிந்து வருகின்றன.

லெபனான் சமாதானப் படையைச் சேர்ந்த 1,200 அமெரிக்க



யாசீர் அரபாத்

கடற்படை வீரர்களின் பாதுகாப்புக்காக பேரூட் கரையில் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்க நாசகாரிக் கப்பல் யு. எஸ். எஸ். ஜோன் றொட்ஜர்ஸ், ஏவுகணைக் கப்பல் யு. எஸ். எஸ். வேர்ஜீனி மற்றும் இரு யுத்தக் கப்பல்கள் ஆகியவையே இத்தாக்குதலை நடத்தி வருகின்றன.

லெபனானின் கேந்திர நகரான சோக் எல் கார்ப்பை பாதுகாப்பதே அமெரிக்க கடற் படையின் நோக்கம் என்று அமெரிக்காவின் 6ஆவது கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் எட்வர்ட் எச் மாட்டின் தெரிவித்தார்.

பேரூட்டின் நுழை வாசலில் உள்ள இந் நகரம் வீழ்ச்சி அடைந்தால் பேரூட்டில் உள்ள அமெரிக்கர்களுக்கு ஆபத்து வரலாம் என்று அமெரிக்கா கருதுகிறது.

பலஸ்தீன கெரில்லாக்கள் துரூஸ் முஸ்லிம்கள் ஆகியோரின் நிலைகள் மீது அமெரிக்க யுத்தக் கப்பல் குண்டு மாரி பொழிந்து கொண்டிருந்த பொழுது, தலைநகரான பேரூட் மற்றும் நகரங்களுக்கு மேலாக அமெரிக்க ஜெட் விமானங்கள் பெரும் இரைச்சலுடன் பறந்து சென்றன.

செப்டம்பர் 4 ஆம் திகதி லெபனானின் மலைப் பகுதியினின்றும் இருந்து தெற்கு நோக்கி இஸ்ர

## பூலோக சஞ்சாரம்

'கதாசி'

வேல் படைகள் வாபஸாகி இருந்தன.

அதன் பின்பே யுத்தம் அங்கு மும்முரம் அடைந்தது. பலஸ்தீன படைகளும் துருஸ் முஸ்லிம்களும் சிரியாவின் ஆதரவுடன் இஸ்ரவேல் வாபஸான பகுதிக்குள் முன்னேற முயன்றன. அதனை தடுத்து நிறுத்தும் முயற்சியில் கிறிஸ்தவ படைகளும், லெபனான் அரச படைகளும் அமெரிக்க உதவியுடன் போராடி வருகின்றன.

நிலைமை இப்படி இருக்கும் போது லெபனானில் அமைதி ஏற்பட வழிதான் என்ன?

### ஆப்கானிஸ்தான்

பாகிஸ்தானில் ஹஜ்ஜுப் பெருநாள் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்த போது ஆப்கானிஸ்தான் விமானங்கள் சில நகரங்களில் குண்டு வீசுத் தாக்குதல்களை நடத்தின. இதனால் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

இந்த எதிர்பாராத திடீர் தாக்குதல் ஏற்கனவே நலிவடைந்திருந்த பாக் — ஆப்கன் உறவுகளை மேலும் மோசமாக்கும் என்று அரசியல் அவதானிகள் அச்சம் தெரிவித்து இருக்கிறார்கள்.

பேஷாவார் மாகாணத்தின் தலைநகரிலிருந்து 90 மைல் தொலைவில் உள்ள பராசினார் நகருக்கு வெளியே உள்ள ஒரு கிராமத்திலேயே குண்டுகள் வீசப்பட்டன.

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட மிக் 21 ரக போர் விமானங்களே குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

### ஈரான்

ஈரானின் பிரதான எண்ணெய்க் கிணறுகளை ஈராக் தாக்குமானால், மத்திய கிழக்கு எண்ணெயை ஏனைய நாடுகளுக்கு எடுத்துச் செல்ல உபயோகிக்கப்படும் ஹூர்முஸ் கால்வாயை மூடி விடுவதாக ஈரான் அச்சுறுத்தி வருகின்றது.

யுத்த நடவடிக்கை காரணமாக இரு நாடுகளுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. இரு தரப்பிலும் அநேகர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் சவூதி அரேபியா, ஓமான், பஹ்ரைன், கட்டார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத் ஆகிய நாடுகள் ஈரான் பாணியிலான இஸ்லாமியப் புரட்சி அபாயம் குறித்து கவலை கொண்டுள்ளன.

### லிபியா

சாட் அரசாங்கப் படைக்கு எதிராக புதிய தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு லிபியப் படைகள் தயாராகிக் கொண்டிருப்பதாக சாட் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாரிஸில் பிரெஞ்சுப் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி அளித்த, சாட்டின் பொது வேலை, சுரங்க, எண்ணெய் வள அமைச்சர் ஹஸன் ஜமோஸ் இதனைத் தெரிவித்தார்.

லிபிய யுத்த விமானங்கள் சாட் எல்லைக்கு மேலாக அத்துமீறிப் பறந்து கொண்டிருப்பது புதிய தாக்குதல் ஒன்றுக்கு லிபியா தயாராகிக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெளிவு படுத்துகின்றது எனவும் அவர் கூறினார்.

### ஈராக்

வளைகுடா யுத்தத்தை உடனடியாக நிறுத்த உதவுமாறு ஐ. நா. பாதுகாப்புச் சபை, உட்பட வல்லரசுகளை ஈராக் கோரி இருக்கிறது.

ஈரான் — ஈராக் யுத்தம் ஆரம்பமாகி நான்கு வருடங்கள் பூர்த்தியானதை அடுத்து ஈராக் இவ்வாறு கோரியது.

ஈராக்கின் ஆளும் பாத் கட்சியின் செய்திப் பத்திரிகையான அல் – தாவ்ரா, வளைகுடா யுத்தத்தைத் தீர்க்கும் முயற்சியில் வாஷிங்டனுடன், மாஸ்கோவும் அசிரத்தை காட்டி வருவதாகக் குற்றம் சாட்டியது.

இரு வல்லரசுகளும் மேற்படி யுத்தம் தங்களுடன் சம்பந்தப்பட்ட விவகாரம் அல்ல என்ற போக்கில் நடந்து கொள்கின்றன என்றும் அது குறிப்பிட்டது.

ஈரானின் மனதை மாற்றி சமாதானத்தின் பக்கமாக அதைத் திசை திருப்பும் பொறுப்பு 101 நாடுகள் அங்கம் வகிக்கும் அணிசேரா இயக்கத்துக்கு உண்டு என்றும் அந்தப் பத்திரிகை வலியுறுத்தி உள்ளது.

### வங்கதேசம்

வங்காளதேச அரசாங்கம் அதன் கடற்படை தளபதி ரியர் அட்மிரல் மஹ்பூப் அலிகானின் பதவிக் காலத்தை மேலும் இரு ஆண்டுகளால் நீடித்துள்ளது. இவர் எதிர் வரும் நவம்பரில் ஓய்வுபெற இருந்தார்.



றேகன்

இராணுவ ஆட்சியாளர் ஹொஸைன் மொகமட் எர்சாடும் தம்முடைய ஆயுதப் படைகளின் தளபதி பதவியை மேலும் இரு ஆண்டுகளால் நீடித்துள்ளார்.

### பிலிப்பைன்ஸ்

பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் பெனிஞோ அக்குனோவைச் சுட்டுக் கொன்ற ரொலண்டோ கல்மனுக்கு விமானப் படை உயர் மட்டத்துடன் நெருங்கிய தொடர்பு இருந்தது என்று "நியூஸ் வீக்" சஞ்சிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஆதலால் எதிர்க்கட்சித் தலைவரின் கொலையில் பிலிப்பைன்ஸ் விமானப் படையும் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்றும் அந்த சஞ்சிகை சுட்டிக் காட்டியது.

ஆகஸ்ட் 21 ஆம் திகதி அக்குனோ மனிலா விமான நிலையத்தில் விமானத்தில் இருந்து இறங்கிக் கொண்டிருந்த போது ரொலண்டோ கல்மன் என்பவரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். கல்மனும் உடனடியாகவே பாதுகாப்பு அதிகாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

### ரஷ்யா

லெபனானின் உள் விவகாரத்தில் தலையிட்டதன் மூலம் லெபனான் கொந்தளிப்பை அமெரிக்கா கூட்டுகிறது வருவதாக ரஷ்யா குற்றஞ் சாட்டியது.

மத்திய கிழக்கில் அமெரிக்க, இஸ்ரவேல் ஆதிக்கத்துக்கு திட்டமிடப்படுவதாகவும் ரஷ்யா எச்சரித்தது.

அரபு உலகின் அமெரிக்கா– இஸ்ரவேல் ஆதிக்கத்தை எதிர்க்கும், சிரியாவை அமெரிக்கா பயமுறுத்துகிறது. அரபு உலகில் இருந்த லெபனானை வெளியே தோன்று வருவதே இந்த இரு நாடுகளின் நோக்கம் ஆகும் என்றும் ரஷ்யா தெரிவித்தது.

(சு)


இலங்கை
துறைமுக
அதிகார சபை

F 1 விற்பனை பண்டசாலை/யார்ட்,
F.1 பண்டசாலை, B.Q. இல. 4 பண்டசாலை/யார்ட்
ஆகியவற்றில் அகற்றப்படாதிருக்கும்
பொருள்களின்

**ஏலவிற்பனை 01-10-1983**

F.1 விற்பனை பண்டசாலை/யார்ட், F.1 பண்டசாலை, B. Q. இல. 4 பண்டசாலை/யார்ட் ஆகியவற்றில் அகற்றப்படாதிருக்கும் கீழ்க் காணும் பொருள்கள் 01.10.1983 அன்று காலை 9.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

பொருள்களை வாங்க விரும்புவோர் 30.9.83 அன்று அவற்றைப் பார்வையிடலாம். விவரப்பட்டியல் வர்த்தக முகாமையாளர் அலுவலகத்தில் கிடைக்கும்.

ஏலவிற்பனை முடிவுற்றதும் கொள்முதல் செய்யும் பொருள்களுக்கான முழுத் தொகையையும் ரொக்கமாகச் செலுத்தி, விற்பனைத் தினத்தன்று மாலை 4.00 மணியளவில் பொருள்களை அப்புறப்படுத்தி விட வேண்டும். பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்ட பின் அவற்றின் நிலை பற்றிய எதுவித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

விலை மனுக்களில் எதனையாவது அல்லது முழுவதையும் நிராகரிப்பதற்கும், பிரஸ்தாப பொருள்களில் எவற்றினதும் விற்பனையை நிறுத்தி வைப்பதற்கான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களிருப்பின் அப்பொருள்களின் விற்பனையை நிறுத்திவைப்பதற்கும் துறைமுக அதிகாரசபைக்கு அதிகாரமுண்டு. வெற்றி பெற்ற விற்பனை மனுதாரரால், விற்பனைத் தினத்தன்று அகற்றி எடுத்துச் செல்லப்படாத பொருள்கள் மீள விற்கப்படுவதுடன், அவற்றுக்காகச் செலுத்தப்பட்ட பணமும் பறிமுதல் செய்யப்படும்.

இந்த ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்புவர்களிடம் நிரந்தர நுழைவு அனுமதிப் பத்திரமோ புகைப்பட ஆள் அடையாளச் சின்னமோ இல்லாதிருப்பின் துறைமுகத்தில் நடைமுறையில் இருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளை அனுசரிக்க வேண்டும். அத்துடன் ஒவ்வொருவரும் தமது தேசிய அடையாள காட்டுக்களையும், விற்பனைத் தினத்தன்று காட்ட வேண்டும்.

வர்த்தக முகாமையாளர்,
இலங்கை துறைமுக அதிகார சபை.

திகதி: 22.09.1983

விற்பனைக்கு இருக்கும் பொருள்களின் விவரம்

கொள்கலன் சரக்கு

| | |
|---|---|
| CATU 2453681 | கண்ணாடி ஜாடிகள் |
| CTIU 2389400 | கண்ணாடி ஜாடிகள் |
| SRIU 3215324 | சீரகம் |
| SRIU 2753568 | அலுமினியம் சுட்டியம் தகடுகள் |
| TPHU 2014570 | டிரெய்லர் கிட் |
| CTIU 3416033 | நூல் |
| QNLU 2005061 — | 01 வைபிரேட்டர்<br>01 வெல்டர் ஜெனரேட்டர் என்ஜின்<br>01 வைபிரேட்டர் ரோலர்<br>02 கொங்கிரீட் மிக்சர்<br>ரெயின் என்ஜின்கள்<br>ஒரு பாகங்கள் |

பண்டசாலை/யார்ட் சரக்கு

| | |
|---|---|
| பீடி இலை பொதி | கார்ட்போட் பேப்பர் சீல்ஸ் |
| இன்டர்சல் மோட்டார் | மோட்டார் பாகங்கள் |
| கிலோ சுத்தியல் | சப்பாத்து பக்கிள்ஸ் |
| ஆயுதங்கள் | பி. வி. சி. கலிப்பு பொதி |
| பருத்தி பொதிகள் | இரசாயனங்கள் |
| கண்ணாடி தம்ளர்கள் | மேற்கத்திய மருந்துகள் டயர்கள். |
| பொக்ஸ்போட் பேப்பர்சீல்ஸ் | சிமெந்து பக்கெட்டுகள் |
| நெருப்பு சிமெந்து | பிளாஸ்க்குகள் |
| டென்டோனேட் பவுடர் பொதி | சுகாதார உபகரணங்கள் |
| பால் பவுடர் பொதி | சைக்கிள் பாகங்கள் |
| மின்சார விசிறிக்கை | டோர்ச் லைட் பல்புகள் |
| ரிஸ்யூ பேப்பர் | இயந்திர பாகங்கள் |
| நெசவு பாகங்கள் | விளம்பர உபகரணங்கள் |
| அலுமினியம் தகடுகள் | ஷீட் இரும்பு பொதி |
| ஏயர் பில்டர்ஸ் | இரும்பு பார் |
| மின்சார பொருள்கள் | "டீ" இரும்பு |
| பான் வெட்டும் மெஷின் | உருக்குத் தகடுகள் |

மற்றும் வர்த்தக பொருள்கள்.



# அறிவித்தல்

1983 ஒக்டோபர் 3ம் திகதி திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை ஒல்கொட் மாவத்தையில் உள்ள பிரதான புத்தக விற்பனை நிலையம் மற்றும் கண்டி, குருநாகல், மாத்தறை, காலி, நீர்கொழும்பு கிளைகள் யாவும் கீழ்க்கண்டவாறு அலுவல்களுக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கும் என்பதை

**எம். டி. குணசேன அன் கம்பனி லிமிட்டெட்**

தமது வாடிக்கையாளர்களுக்கு அறிவித்துக்கொள்ள விரும்புகிறது.

திங்கட்கிழமை முதல் வெள்ளி வரை:
காலை 9.00 மணி — மாலை 5.30 மணி
சனிக்கிழமைகளில் மூடப்பட்டிருக்கும்.

**எம். டி. குணசேன அன் கம்பனி லிமிட்டெட்,**

கொழும்பு, கண்டி, காலி, நீர்கொழும்பு, மாத்தறை, குருநாகல்.





# சிந்தாமணி ஆரம்

இல 720 | CHINTAMANI MAGAZINE SECTION | 25—9—1983


### புதுமையான பூச்சு

டென்னிஸ் விளையாடும் அரங்கிலே பூசுவதற்கு புதிய பூச்சு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. எல்லா தட்பவெப்ப நிலையிலும் அரங்கு தாக்குப் பிடிப்பதற்கு வகை செய்கிறது இந்தப் பூச்சு; அது மட்டுமல்ல இதனைப் பூசி விட்டால் தளம் சறுக்காது. தேயாத பந்தும் நன்றாக எழும்பும். இரண்டு தடவை பூச வேண்டும்.

இந்தப் பூச்சி டென்னிஸ் அரங்குக்கு மட்டுமல்ல பிற நிலத்தில் தரைகளுக்கும் பயன்படுத்தலாம்,

### ஈயை ஒழிக்க புதிய வழி

வீடுகளில் மொய்க்கும் ஈயை ஒழிக்க விஞ்ஞானிகள் புதிய வழியைக் கண்டு பிடித்துள்ளனர். இந்தியாவிலுள்ள கான்பூர் ஆய்வு கூடத்தில் ஒரு வெள்ளை பெயின்ட் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதை திரவமாக்கித் தெளித்தாலோ, அல்லது சுவர்களில், தரையில், பொருள்களில் தடவி விட்டாலோ ஈக்கள் ஒழிந்து விடும்.

இந்தப் பெயின்ட் பல மாதங்களுக்குச் சக்தி உள்ளதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெண்மைக்கு ஏற்றந்தந்த கண்ணகியின் காப்பியம்

## 2000 ஆண்டுகளுக்கு முன்பு இளங்கோ காட்டிய புரட்சி

சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம்

பண்டைத் தமிழகம் மூன்று மண்டலங்களைக் கொண்டதாக விளங்கியது.

சேர மண்டலம், சோழ மண்டலம், பாண்டிய மண்டலம் என்பனவே அவை.

தமிழகம் மும்மண்டலங்களாக இருந்த காலத்தில்தான் சிலப்பதிகார காப்பியம் தோன்றியது. சிலப்பதிகாரம் பாடிய இளங்கோ அடிகளுடைய உள் நோக்கம் மும்மண்டலங்களையும் ஒன்றுபடுத்தி ஒரே தமிழ் நாட்டை அறிமுகப்படுத்துவது தான்.

நாடு மூன்றாக பிரிந்திருந்தது மட்டுமல்ல, சமுதாயம் கூட பல மதங்களாகப் பிரிந்திருந்த காலத்தில் இளங்கோ அடிகள் சிலப்பதிகார காப்பியத்தைப் படைத்தார்.

சமண மதம், பௌத்த மதம், இந்து மதம் அதாவது வேத மதம் என்ற முப்பெரும் பிரிவுகள் தமிழகத்தில், தமிழர் மத்தியில் இருந்தன. வளமாகவும் இருந்தன, காலூன்றி வளர்ந்தோங்கியும் வந்தன.

சனாதன மதம், அல்லது வேத மதம் எனப்படும் இந்துக்கள் இடையிலும் கூட சைவம் என்றும், வைணவம் என்றும் உட்பிரிவுகள் இருந்து வந்தன. இந்த பிரிவுகளை எல்லாம் ஒன்றுபடுத்தினால் ஒழிய, எதிர்கால தமிழ் ஜாதி ஒளி உடையதாக இருக்காது என இளங்கோ அடிகள் கருதினார். அவர் அரசி யல்வாதி ஆதலால், இளவரசர் ஆதலால், தேசத்தின் வருங்காலத்தை செப்பனிட்டுக் கொடுக்கவும் கடமைப்பட்டு இருந்தார்.

அதற்கு அரிய வாய்ப்பு ஒன்று அவருக்குக் கிடைத்தது.

சேர மன்னன் அவையிலே மூத்தவன் செங்குட்டுவனும், இளவல் இளங்கோவும் வலமும் இடமுமாக இருக்க தந்தை நெடுஞ் சேரலாதன் அரியாசனத்தில் வீற்றிருக்கிறான்.

அந்த நேரத்தில் ஒரு நிமித்திகன், அரசவை நிமித்திகன், எழுந்து ஒரு செய்தி கொடுக்கிறான்.

"அரசே, தங்களுக்குப் பின்பு அரியாசனம் ஏற வேண்டியது முறைப்படி மூத்தவனான செங்குட்டுவன் தான் என்றாலும், ஜோதிடக் கூற்றுப்படி இளவல் இளங்கோ தான் அரியாசனம் ஏறுவான்" எனக் கூறினான்.

செங்குட்டுவனுக்கு கண்கள் சிவந்தன. அதைக் கேட்ட இளங்கோ அடிகள், அரசன் மூத்தவன் தான் முடிசூடிக் கொள்ள வேண்டும் என்பது தமிழ் இனத்தின் அரசியல் மரபாக இருக்க, அதை ஒரு பஞ்சாங்கம் அழித்து விட அனுமதிக்கக் கூடாது என எண்ணி, தான் தியாகம் செய்யத் துணிந்தார்.

அரசு அண்ணனுக்கே உரியது என்று தான் சொல்லிக் கொண்டார். தொல்லையவர், ஆண்மீகத்தில் இருந்தாலும் ஆசை துறந்தவரோ என்று எண்ணி அரண்மனை விட்டு வெளியேறி மேற்குத் திசையான குண வாயில் கோட்டத்து, அரசு துறந்து, அங்கு ஒரு மடம் அமைத்து அதிலே அமர்ந்து கொண்டார்.

இந்த நிலை அரசு துறந்தாரே ஒழிய, அரசியலைத் துறக்க வில்லை என்ற நிலையாகும். நாட்டின் வருங்கால அரசியலுக்கு ஆலோசனை கூறுகிற கடமையை அவர் துறக்கவில்லை.

அரசைத் துறந்த பிறகு அவர் சிலப்பதிகார காப்பியத்தை எழுதிப் படைத்தார்.



அந்தக் காப்பியத்திலே ஒரு பெரும் சிறப்பு என்னவென்றால் முதல் வருணமான அந்தண வருணத்தை சார்ந்தவள் அல்லள் கண்ணகி. இரண்டாம் வருணமான க்ஷத்திரிய வருணத்தைச் சேர்ந்தவள் அல்லள் கண்ணகி. மூன்றாம் வருணமான வணிக வருணத்தைச் சார்ந்தவள் என்கிறார்.

மாசாத்துவான் மருமகளாகவும், மாநாய்க்கன் மகளாகவும், கோவலனின் மனைவியாகவும் தோன்றிய கண்ணகி தேவி முதல் இரண்டு வருணங்களைச் சாராத மூன்றாவது வருணமாகத் தோன்றுகிறாள்.

வணிக வருணம் கூட செல்வ செழிப்பு உடையதுதான் என்றாலும், அந்த வணிக வருணத்துக்குரிய செல்வச் செழிப்பிலிருந்து கண்ணகியையும், கோவலனையும் விடுவித்து வாழ்க்கைக்கு வழியின்றி சிலம்பை விற்றுப் பிழைக்கின்ற அளவுக்கு வறுமை எய்தி விட்டவர்களாக மாற்றி, அதன் பின்னரே காப்பியத் தலைவியாக கண்ணகியை வைக்கிறார்.

அந்த அளவில் நாலாவது வருணமான உழைப்பாளி வருணத்துக்கும் உறவு படுத்தி விடுகிறார் கண்ணகிதேவியை என்று நாம் பார்க்கின்றோம். இதன் மூலம் பிரிவினை பெற்றிருந்த நாலு வருணங்களிடையேயும் ஒருமைப்பாடு காண இளங்கோ அடிகள் சிலப்பதிகார காப்பியத்தைப் படைக்கிறார்.

ஏறக்குறைய சிலப்பதிகாரம் படைக்கப்பட்ட காலத்திலே அந்தண, அரச, வணிக, வேளாள வருணங்களிடையே ஏற்றத் தாழ்வும் புகுந்து விடுகிறது. இந்த நாட்டு சரக்காக அல்ல, வடக்கில் இருந்து இறக்குமதியான போக்காக. அந்த நிலையில் இருந்து இளங்கோ அடிகள் தமிழ் இனத்தைக் காக்க விரும்பினார்.

அதனால் மூன்றாவது வருணத்தவளான கண்ணகியை தெய்வமாக்கி அந்தத் தெய்வத்திற்குக் கல் எடுத்து கோவில் சமைக்க இரண்டாவது வருணத்தவனை செங்குட்டுவனைப் படைத்து ஏனைய மன்னர்கள், அன்றைய நாடான இலங்கை மன்னனையும் சேர்த்து, இந்த இந்திய துணைக் கண்டத்தின் மன்னர்களை எல்லாம் கண்ணகி கோவிலில் கொண்டு வந்து நிற்க வைக்கிறார்.

அங்கு முதல் வருணமான அந்தண வருணத்து தேவந்திஐய கண்ணகி கோவில் பூசாரியாக்கி, வருண வேற்றுமையை ஏற்றத் தாழ்வை முடித்துவிட்ட ஒரு புத்தம் புதிய தமிழ் இனத்தை படைக்கிறார். கண்ணகி வழிபாட்டை, கண்ணகி தெய்வத்தை பயன்படுத்திய மாபெரும் புரட்சியை இளங்கோ அடிகள் இங்கு செய்திருக்கிறார் என்று பார்க்கின்றோம்.

இதற்கு மேலேயும் மற்றொரு தன்மை வருகிறது. குடி மக்களிலே சாமான்ய மக்களுக்கு மதிப்பு அளிக்கும் பெருமை தமிழ் காப்பியங்களிலேயே சிலம்பில் பார்ப்பது போன்று நாம் வேறு எங்கும் பார்க்க வில்லை.

கானல் வரி சிலப்பதிகாரத்தின் அகப்பொருள் துறையை காட்டுகின்ற சிறந்த பகுதி யாகும். அந்தக் கானல் வரியிலே கோவலன் பாடுகின்றவன் பாட்டுடைத் தலைவன், மாதவி பாடுபவள் பாட்டுடைத் தலைவி. பாடுபவர் கோவலனும், மாதவியும் தான் என்றாலும் பாட்டு அவர்கள் கருத்து அல்ல. இன்னொரு பாட்டுடைத் தலைவனுக்கு கோவலன் குரல் கொடுக்கிறான். இன்னொரு பாட்டுடைத் தலைவிக்கு மாதவி குரல் கொடுக்கிறாள்.

அந்தப் பாட்டுடைத் தலைவி, சாமான்ய கடற்கரை ஓரத்தில் இருந்த மீனவப் பெண் அவள். எளிய குடியில் பிறந்த மீனவப் பெண்ணை பாட்டுடைத் தலைவியாக்கி பாடுகின்ற தன்மை சிலப்பதிகாரத்தில் உள்ள ஒரு தனித் தன்மை என்பதை நாம் பார்க்கின்றோம்.

சிலப்பதிகாரத்திலே இன்னொரு சிறப்பையும் பார்க்கின்றோம். பிற்காலத்தில் தமிழகத்தில் ஆணுக்குப் பெண் அடிமை என்ற நிலை ஒவ்வொரு துறையிலும் தோன்றியதைப் பார்க்கின்றோம். இளங்கோ அடிகள் இதற்கும் ஒரு முடிவு கட்ட எண்ணி சிலப்பதிகார காப்பியத்தை பெண்களுக்கே ஏகபோகமாக ஆக்கி விடுகிறார்.

சோழ நாட்டில் பிறந்த பூம்புகார் கண்ணகி, காப்பியத்தின் தலைவி ஆகிறாள். மாதவி, அவள் ஆகிய நாட்டின் ஆடற்கு அரசியாக தோன்றுகிறாள். பரத்தையர் குலத்தில் பிறந்தாலும் பத்தினிக்கு அடுத்த நிலையில் ஒழுக்கத்தில் உயர்ந்து நிற்கும் மாதவியையே இளங்கோ அடிகள் நமக்கு அறிமுகப்படுத்துகிறார்.

அதற்கும் மேல் பாண்டி மாதேவி அரசனுடன் சேர்ந்து உயிர் விட்டு கற்பின் வியத்தகு பெருமையை அறிமுகப்படுத்துகின்றார்.

மூன்றாவதாக வருகின்ற வஞ்சிக் காண்டத்திலே சேரன் செங்குட்டுவன், கண்ணகி பற்றிய செய்தியை அறிந்ததுமே, என்னுடைய அரசி வியத்தற்குரியவள் யார்? கணவன் இறந்தவுடனே உயிர் நீத்தாளே அந்த உத்தம கற்பினளோ என் அரசி வியக்கின்றாளா?, கணவன் இறந்த பிறகு கொடுங்கோலை அழித்து என் நாடு வந்தடைந்தாளே அந்த கண்ணகியை வியக்கின்றாளா என்றான்.

அப்போது சேர மாதேவி சொல்கிறாள், பாண்டி மாதேவி உடன் உயிர்நீத்த சிறப்பு, அறக் கற்பு. அதற்குரிய நெறியை அவள் அடைவாள். ஆனால் கணவனை இழந்த பிறகு காவலர் பேரூர் களையறிப்பக்கிய அந்த மாபெரும் பத்தினியான கண்ணகியை நாம் வழிபட வேண்டும் கோவில் எடுத்து என்று சொல்கிறாள்.

அந்த சேர மாதேவி இட்ட ஆணை தான் கல் எடுக்கப் போன இடத்திலே வில் எடுத்த ஆரியரை எதிர்த்துப் போர் புரியும்படி செங்குட்டுவனை வைத்து விட்டது.

அந்த வகையில் மும் மண்டலங்களிலும் பெண்களுக்கே சிறப்பு அளிக்கிறார் இளங்கோ அடிகள், இடையிலே வந்த, வழித்துணையாக வந்த கவுந்தி அடிகள் கண்ணகிக்கும், கோவலனுக்கும் நேர்ந்த இடுக்கணைக் கேட்டு வடக்கிருந்து உயிர் துறக்கின்றாள்.

பெண் ஒருத்தி துறவுக் கோலம் கொள்ளும் செய்தியை முதன் முதலாக சிலப்பதிகாரத்தின் மூலம் தான் காண்கிறோம்.

இதில் இருந்து ஆன்ம ஞான அறிவு என்பது ஆண்களின் ஏக போகம் அல்ல. பெண்ணும் ஆன்ம ஞான சிறப்பை பெற முடியும் என்பதற்கு கவுந்தி அடிகளை நாம் இங்கு அறிமுகப்படுத்தக் காண்கிறோம்.

அதற்கு மேல் இடைக் குல மாதரான, மதுரையில் தோன்றிய எளிய பெண் அடைக்கலம் இழந்தேன் என்று கூறி அடைக்கலம் பெற்ற கண்ணகியைக் காக்கத் தவறியதை குற்றமாகக் கருதி அவள் தீயில் விழுந்து உயிர் விடுகிறாள்

அந்த நிலையிலும், முதலில் இருந்து இறுதி வரை பெண்களுக்கே சிறப்பளிக்கின்ற நிலைமையைப் பார்க்கின்றோம்.

குன்றக் குரவையிலே மலை மீது ஏறி நிற்கிறாள் கண்ணகி. கணவனை இழந்த பிறகு கிழக்கு திசை வாயில் கணவனோடு புகுந்தேன். மேல் திசை வாயில் வறியேன் பெயர்க என்று மனம் உருகக் கூறிவிட்டு 14 நாட்கள் நடந்து சேர நாட்டை அடைந்து செங்குன்றத்தின் மீது ஏறி நிற்கிறாள். அந்த நிலையில் அவள் முத்தி பெறுகின்ற நேரம் வருகின்ற போது அந்த மலை இடுக்கில் உள்ள குன்றக் குறவர்கள் அவளுக்கு கோவில் எடுத்து விழா நடத்துகின்றனர்.

சமுதாயத்தின் அடித்தள மக்களான அந்தக் குறவர்களும் கோவில் எடுத்துக் கும்பிடுகிறார்கள் கண்ணகியை. சமுதாயத்தின் முடித்தலமான மன்னனும் கோவில் எடுக்கிறான் கண்ணகிக்கு, என்று பார்க்கின்ற போது அடியும் முடியுமாக எளியவரும் ஏந்தலுமாக விழா நடத்துகின்ற சிறப்பை கண்ணகியின் மூலம் இளங்கோ அடிகள் காட்டுகின்றார்.



ஜெர்மனியில் கூட இருந்து குடிப்பதற்கு கூட்டாளிகள் இல்லாதவர்கள் தங்கள் தனிமையை உணராமல் இருப்பதற்காக இப்படி ஒரு ஏற்பாட்டை செய்து கொள்கிறார்கள். அங்கு நடக்கும் ஒரு கண்காட்சியில் இந்த செயற்கைக் கைகள் முதன் முதலாகக் காட்சிக்கு வைக்கப்பட்டு இருக்கின்றன.

# வரம்பு மீறிய நிந்தாஸ்துதி

— சோ. பத்மநாதன் —

அப்பொழுதெல்லாம் போக்குவரத்து வசதிகள் குறைவு அரச குடும்பத்தவர், பிரதானிகள், செல்வர்கள் முதலிய வசதிபடைத்தவர்கள் பல்லக்கில் பயணஞ் செய்வார்கள், ஏழைகள் கால் நடந்தான் (பேசுப் பல்லக்கு, தம்பி கால்நடை" என்றொரு பழமொழியே உண்டு.)

ஹோட்டல் முதலியவையும் இல்லை, நெடும் பயணம் செய்பவர்கள் சத்திரங்களில் தங்கிச் சிரம பரிகாரம் செய்து கொள்ளுவார்கள்.

வழி நடையாலும் பசியாலும் களைத்துப் போய், கவிஞர் அல்லூருக்கு வரும்பொழுது பாதி இராத்திரி இருக்கும். ஊரே அடங்கி விட்டது. சத்திரத்தை எப்படித் தேடிக் கண்டு பிடிப்பது? யாரைக் கேட்பது? தெருவில் மனித நடமாட்டம் இருந்தால்தானே!

அதோ தூரத்தில் கேட்பது மேளச் சத்தம் அல்லவா? ஆமாம், தீவட்டி வெளிச்சமும் தெரிகிறது. விரைந்து நடக்கிறார் புலவர். சுவாமி வீதி வலம் புறப்படுகிறார். புலவர் மூளையில் ஒரு மின்னல் பளிச்சிடுகிறது. அவர் சுவாமி காவுபவர்களில் ஒருவராகி விடுகிறார் வீதிவலம் முடிந்துபின் வயிறார, பிரசாதம் கிடைக்கும் அல்லவா?

மேளதாளம் முழங்க, தீவட்டிகள் ஒளிவீச, பஜனை தொடர, சுவாமி [illegible] க்கு வீதியில் மேளகாரன் கொட்டி முழக்குகிறான். புலவருக்கோ தோள் "விண்விண்" என்று வலிக்கிறது! பழக்கமில்லாத வேலை அல்லவா?

நிமிடம் யுகமாகக் கழிகிறது, இந்த வேகத்தில் வீதி வலம் முடிய இன்னும் இரண்டு நாழிகையாவது செல்லும்



போலிருக்கிறதே! அதுவரை தாக்குப் பிடிக்க முடியுமா?

ஆத்திரம் பற்றிக் கொண்டு வருகிறது அவருக்கு! யார் மீது? பாட்டைப் பாருங்கள்

"பாளைமணம் கமழுகின்ற
கயிற்றுத்துப் பெருமானே!
பழிகாரா! கேள்...!"

[illegible] மென்ன தெரியுமா காணும்?

"வேளையென்றால் இவ்வேளை
பதினாறு நாழிகைக்கு
மேலாயிற்று!..."

சுவாமி காவுவது ஒரு திருத்தொண்டு என்பது தெரியாதவரல்லர் அவர். ஆனால் சுவாமியோடு கூட நின்று கைங்கரியம் செய்யும் அருச்சகரையும் அல்லவா சேர்த்துச் சுமந்து அவர் தோள் முறிந்து விட்டது!

"என் தோளை முறித்
ததுமன்றி
நம்பியா னையுங்கூடச்
சுமக்கச் செய்தாய்!

வழி நடந்து களைத்து பசியால் வாடிவந்த ஒருவனை நீர் இந்தப் பாடுபடுத்தினால், நானே [illegible] வருவார்? பூஜை சிறப்போன்றும் இல்லாமல் "சிவனே" என்று இருக்கப் போகிறீர்!

நானே இனி யார்
சுமப்பார்!
உன் கோயில் எந்நாளும்
நாசந்தானே!"

பாட்டை முழுமையாகப் பார்க்கலாம்:

"பாளைமணக் கமழுகின்ற
கயிற்றுத்துப் பெருமானே
பழிகா ராகேள்
வேளையென்றால் இவ்வேளை
பதினாறு நாழிகைக்கு
மேலாயிற்றென்
தோளைமுறித் ததுமன்றி
நம்பியா னையுங்கூடச்
சுமக்கச் செய்தாய்
நாளையினி யார்
சுமப்பார்
உன்கோயில் எந்நாளும்
நாசந்தானே!"

ஒவ்வொரு விதமான கவிதையில் – பொருளில் – வல்லவர்கள் – பெயரெடுத்தவர்கள் இருக்கிறார்கள்.

வெண்பாப் பாடுவதில் புகழேந்தி, விருத்தத்துக்குக் கம்பன், பரணிக்கு ஜயங்கொண்டான், கலம்பகத்துக்கு இரட்டையர்கள் — இப்படிச் சொல்வார்கள்.

மேற்போந்த கவிதையைப் பாடிய காளமேகம் வசை பாடுவதில் ஈடிணையில்லாதவன்; ஆசுகவி – அதாவது விரைந்து பாடும் ஆற்றல் படைத்தவன்.

கவிதை என்னதான் சுவையாக – ஓர் உண்மை அனுபவத்தின் வெளிப்பாடாக –இருந்த போதும் "நாசந்தானே" என்று பாடியிருக்க வேண்டாம் என்றே தோன்றுகிறது!

"நிந்தாஸ் துதி" –அதாவது இகழ்வது போலப் புகழ்தல் – என்ற வரம்பையும் மீறியிருக்கிறது [illegible]


# உங்கள் இறைச்சிக் கறியின் சுவை பெருக உதவுவது யார்?

## அஜி-நொ-மோட்டோவும் நீங்களுமே!

உங்கள் இறைச்சிக் கறியை அடுப்பில் இருந்து இறக்குவதற்கு முன்னர் சிறிதளவு அஜி-நொ-மோட்டோவைப் பாத்திரத்திற்குள் தூவுங்கள். கறியின் சுவை பல மடங்கு பெருகுவதைக் கண்டு பிரமித்துப் போவீர்கள். அஜி-நொ-மோட்டோவை கறி, சோறு, சம்பல், சூப் முதலிய எவ்வகை உணவிலும் சேர்க்கலாம். கரும்பு, பீட்றூட், மரவள்ளி ஆகியவற்றின் இயற்கை மாப்பொருளில் இருந்து பெறப்படும் அஜி-நொ-மோட்டோ உலகெங்கிலும் 80 நாடுகளில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்களால் பயன்படுத்தப்படுகின்றது.

சந்தைப்படுத்துவோர்;
தேவ்ஸ் சந்தைப்படுத்தும் பிரிவு




அஜி-நொ-மோட்டோ

உங்கள் உணவின் சுவையை அதிகரிக்கிறது

## மணிக் கவிதை

### வரதட்சணை

இன்பமும் என்ற
இனிய பூங்காவினுள்
நுழைய எத்தனிக்கும்
பாவைகளை
தவித்து நிறுத்தி
தரிசனத்திற்கு உதவாத
காத்தடைப் பூக்களாக —
மாற்றும்
சீர்கெட்ட சமுதாயத்தின்
சிங்கள்.

★ இ. சிவனேஸ்வரன்

### புலர்வுத்தூது

வெண் பனித்துளிகள்
பசிய இலைகளின் மேல்
மென்மை முத்தமிட்டு
புதியமொழி பேச(க்)
கண்ட தாபத்தால்
சூரியக் காதலனும்
தாமரைக் காதலியை
தழுவிட வேண்டுமென்று
இருட் பகைவனை
புறமுதுகிடச் செய்து
"வெளிச்ச தூது அனுப்புகிறான்"

★ டி. எம். சுபைர்கான்

### எங்கே இருக்கிறான்?

துகிலின்றி சுழல்கின்ற
அகிலக் கன்னியின்
ஆகாச நடனத்தை
கண்டு களிக்கத்தானோ
சந்திர சூரிய ரசிகர்கள்
வந்து போகிறார்கள்.
இந்த
சுந்தர நாட்டியத்தை
அந்தர மேடையில்
நடத்தும்
அந்த
ஆடலாசிரியன்
எங்கே
இருக்கிறான்?

★ க. சி. செல்லத்துரை

### பூவையின் சீதனம்

உந்தன் நினைவுப் பாதங்கள்
எந்தன் நெஞ்சில் பதிந்து
சொந்தம் கொண்டு விட்டது.
உனைத் தொட்ட
விரலில்
ஒரு வாரம்
தேன் ஊறும்.
பிறர் கண்கள்
ஒரு நாம்
உன்னோடு சங்கமித்தால்
இரவில் உறங்க
நித்திரை மாத்திரை
தேவைப்படும்
இமைகள் மூடினால்
கனவுச் சோலையில் மலர — நீ
என் கண்களில் சிரிப்பாய்.
கவனத்துச் சுந்தரியே
களையும் சுகமும்
பூவையின் சீதனம்.

★ நிந்ததாசன்

---

# சாலினி வெளியிட்ட இரகசியம்

**— ஜி. கஸ்தூரி பாய் —**

மணி காலை 10.10

புதுப் பொலிவோடு மின்னிக் கொண்டிருந்த அந்த அலுவலகம் அமைதியாக ஆனால் ரொம்ப சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

அன்றைக்கு வந்த தபால்களைப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் என்னென்ன பதில்கள் அனுப்ப வேண்டும் என்று மதன் சாலினியிடம் டிக்டேட் செய்து கொண்டிருந்தான்.

"அப்பாடா என்ன வெயில்...! அமைதியைக் கிழித்துக் கொண்டு ஜானகிராமன் உள்ளே வந்தார்.

தன்னுடைய அழுக்குப் பையை மேஜை டிராயரில் வைத்து விட்டுப் பொடி டப்பாவை எடுத்து சர்ரென்று உறிஞ்சிவிட்டு, காலிக் கலரிலிருந்த பெரிய கைக்குட்டையை, (கிட்டத்தட்ட சின்ன டவல் அது) எடுத்து மூக்கைத் துடைத்துக் கொண்டார்.

*

மோகன்லால் சௌகார் அவருடைய மருந்துகள் தயாரிக்கும் கம்பெனியைத் துவக்கிய போது ஜானகிராம் அங்கு வேலையில் சேர்ந்தார்.

மோகன்லால், ஜானகிராமனைத் தன்னிடம் வேலை பார்க்கும் ஊழியர் போல நினைத்துப் பழகவில்லை, சகோதரனைப் போல நினைத்துப் பழகினார். இப்போதெல்லாம் ஆபீசில் காலையில் பத்து மணிக்கு வந்தால் டான் என்று ஐந்து மணிக்குக் கிளம்பி விடுகிறார்கள்.

தொழிற்சாலையில் எட்டு மணி நேர ஷிப்டு — நிறைய சம்பளம், போனஸ், ஓவர் டைம் என்று ஆனால் அப்போது மோகன்லால், ஜானகிராம் இன்னும் இரண்டு ஆட்கள் தான். ஆபீஸ், தொழிற்சாலை எல்லாம் ஒரே இடம் தான்.

நேரம் காலம் கிடையாது அவர்களுக்கு. மோகன்லாலும், ஜானகிராமும் அங்கேயே சாப்பிட்டு விட்டு, தூங்கிய நாட்களும் உண்டு.

கணக்குப் பார்த்து அவர் சம்பளம் கொடுத்ததும் கிடையாது. ஜானகிராம் கேட்டதும் கிடையாது.

நல்ல தரமான மருந்துகளைப் பெரிய பிரபலமான கம்பெனிகளிலிருந்து மொத்தமாக வாங்கி, அரசினர் மருத்துவமனைகளுக்கும், நர்சிங்ஹோம்களுக்கும் சப்ளை செய்தார்கள்.

பிறகு தங்கள் கம்பெனியிலேயே சில மருந்துகளைத் தயாரித்தனர். அவர்கள் கம்பெனியின் இரும்புச் சத்து டானிக் ஒன்று ரொம்பப் பிரபலமான அயிட்டம்.

மார்க்கெட்டில் ஒரு நிலையான இடத்தைப் பிடித்துத் தரமான மருந்துகள் தயாரிக்கும் நிறுவனங்களில் ஒன்றென



மோகன்லால் கம்பெனி பெயர் பெறுவதற்கு ஜானகிராமன் ரொம்பவும் பாடுபட்டார்.

இப்போது பல கம்பெனிகள் வந்து விட்டன. வியாபாரத்தில் போட்டி கடுமையாக இருந்தது.

மோகன்லாலுக்கு எழுபது வயதாகி விட்டது. வயதான உடலேயே வியாதிகளும் அதற்கென்றே காத்திருந்தது போல வந்து விடுகின்றனவே! பாரிச வாயுவால் பாதிக்கப்பட்ட மோகன்லால் எழுந்து நடமாட முடியவில்லை. அவருடைய ஒரே மகன் தான் மதன்லால்

பி. எஸ்சி. (கெமிஸ்ட்ரி) பட்டதாரியான மதன் அப்பாவுக்குப் பிறகு நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டான். ரொம்ப நாகரிகமாக எல்லாவற்றையும் நவீனமயமாக்கினான். தனக்கு உதவியாக சாலினியை நியமனம் செய்தான்.

**சிறுகதை**

அவனுக்கு அந்தரங்கச் செயலாளர், ஸ்டெனோ எல்லாம் சாலினிதான். மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளம் அவளுக்கு.

மிஸ் சாலினி — முப்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்தாள். இயற்கையிலேயே அழகியான அவள் பிரமாதமாக டிரஸ் செய்வதிலும், மேக்—அப் பிறகும் பத்து வயதைக் குறைத்து விடுவாள்.

பேச்சிலே மயக்கவும், சிரிப்பாலேயே ஆண்களை வீழ்த்தி விடக் கூடியவள். ரொம்ப சுறுசுறுப்பு, கூர்மையான அறிவு. மதன் அவளை ரொம்பவும் நம்பியிருந்தான். அவ்வளவு திறமையாக [illegible] செய்தான்.

★

"மதன்... ஆயிரம் ரூபா பணம் கொடுடா... என் மகளுக்கு சீமந்தம்!" ஜானகிராமன் படாரென்று கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார்.

மதன், சாலினியுடன் முதல் நாள் பார்த்த ஆங்கிலப் படத்தைப் பற்றி சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்த போது தான் பூஜை வேளையில் கரடி வந்த மாதிரி ஜானகிராமன் உள்ளே வந்து பணம் கேட்டார்.

மதன் திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

"எதுக்கு பணம்? எந்தக் கணக்கிலே பணம் கேட்கறீங்க? உங்களுக்கு நிறையவே பணம் கொடுத்திருக்கேன்." மதனுக்கு எரிச்சலாய் வந்தது, கோபமாகவே சொன்னான்.

"சரி...சரி. நீ கொடுக்க மாட்டே. நான் பெரியவர் கிட்டே கேட்டுக்கறேன். இந்தாடி சாலினி, இங்கே என்ன சதா மதன் ரூமிலே இருக்கே? போய் டைப் அடிக்க வேண்டிய வேலையைப் பாரு..." ஜானகிராமன் அலட்சியமாகச் சொல்லி விட்டு வெளியே போனார்.

சாலினியின் முகம் வாடிவிட்டது. "இந்த ஆளை முதலில் டிஸ்மிஸ் பண்ணி வீட்டுக்கு அனுப்பணும். எங்கப்பாதான் கூடாதுன்னு சொல்கிறார்..." மதன் சாலினியை சமாதானப் படுத்தினான்.

ஜானகிராமனுக்கு இப்போது அறுபது வயதாகிறது. ஆபீசுக்கு அவர் இஷ்டத்துக்கு வருவார், வேலைகளைச் செய்வார், போவார். பொடி போடுவார், வெற்றிலை பாக்கு வாய் நிறையப் போட்டு குதப்பிக் கொண்டிருப்பார்.

வேஷ்டியும் அரைக்கை சட்டையும் தான் போடுவார். அவைகளும் அழுக்காகத்தான் இருக்கும். பேண்ட் போட்டுக் கொண்டு ஆபீசுக்கு வரச் சொல்லி மதன் கேட்டுக் கொண்டும் அவர் தனது பழக்கத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

மதனுக்கு ஜானகிராமனைக் கண்டாலே பிடிக்காது. அந்த பாடர்ன் ஆபீசுக்கே அவர் ஒரு திருஷ்டி பரிகாரமாய் இருந்தார்.

அதுமட்டுமல்ல, மதனை சிறு வயதிலிருந்தே தெரியுமாதலால், அவனைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவார். சாலினியை ஜானகிராமன் நேரடியாகவே கண்டிப்பார். "என்னடி சாலினி"! என்றும், "அந்தக் குட்டி!" என்றும் அவளைக் கூப்பிடுவதை மதன் அடியோடு வெறுத்தான்.

ஒரு வாரமாக ஜானகிராமனுக்கு உடம்பு சரியில்லை என்று ஆபீசுக்கு வரவில்லை. இதையே சாக்காக வைத்து ஜானகிராமனை வீட்டுக்கு அனுப்பி விடலாம் என்று மதன் தன் அப்பாவிடம் சொன்ன போது, மோகன்லால், "ஜானகிராமன் தான் இந்தக் கம்பெனியை உருவாக்கியவர். அவர் இஷ்டப்பட்டு எப்போது ரிடையர் ஆகிறேன் என்று சொல்கிறாரோ அதுவரை அவர் வேலை செய்யட்டும்" என்று சொல்லிவிட்டார்.

அன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள்.

மதன் வீட்டிலிருந்தான்.

மோகன்லால் இப்போது சற்று கை கால்களை அசைக்க முடிந்தது. மதனைக் கூப்பிட்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

---

## என்ன கிழமை பிறந்தீர்கள்?

**★ ஞாயிறு**

ஞாயிற்றுக்கிழமைகளில் பிறந்தவர்களின் கண்கள் சிவப்பு நிறமாக இருக்கும். வேதப் பாடங்களில் விருப்பம் உள்ளவர்களாக இருப்பார்கள். ஆரோக்கியமான உடலமைப்பைப் பெற்றவராக, புகழ் மிக்கவராக, செல்வந்தர்களாக வாழ்வார்கள்.

**★ திங்கள்**

திங்கட்கிழமைகளில் பிறந்தவர்கள், தர்மசாஸ்திர சடங்குகளை கடைப் பிடிப்பவர்களாக இருப்பார்கள். தாராள மனப்பான்மை கொண்டவர்களாகவும், மதிப்புள்ளவர்களாகவும், அதிக பிரசித்தி பெறுபவர்களாகவும் இருப்பார்கள்.

**★ செவ்வாய்**

செவ்வாய்க்கிழமைகளில் பிறந்தவர்கள், உண்மைக்கு விரோதமாக பொய் சொல்லத் தவறமாட்டார்கள். தங்களுடன் வந்து சேரும் சிலரால் ஏமாற்றப்படுவார்கள். ஆடம்பரமாக இருக்கப் பிரியப்படுவார்கள்.

**★ புதன்**

புதன்கிழமைகளில் பிறந்தவர்கள் நியாயத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். காதல் விவகாரத்தில் உணர்ச்சி மிக்கவர்கள். நல்ல காரியங்களை எச்சரிக்கையுடன் முழுமையாகச் செய்து முடிப்பார்கள். ஆழ்ந்த தெய்வ பக்தர்களாக இருப்பார்கள். தங்களது பிறப்பு இறப்புகளைப் பற்றி கவலைப்படவே மாட்டார்கள்.

**★ வியாழன்**

வியாழக்கிழமைகளில் பிறந்தவர்கள், மதச் சடங்குகளில் கட்டுப்பாடு உள்ளவர்கள். உண்மை பேசுபவர்கள் ஏழைகளிடம் இரக்கம் உள்ளவர்கள். ஏழை என்றும் பணக்காரர் என்றும் பேதம் பார்க்காதவர்கள். தங்கள் அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளத் தவறிவிடுவார்கள்.

**★ வெள்ளி**

வெள்ளிக்கிழமைகளில் பிறந்தவர்கள், செல்வமுடையவர்கள். நீதி வழங்குவதில் கண்டிப்பாக இருக்கக் கூடியவர்கள். நல்ல காரியங்களை தாராள மனத்துடன் செய்யக் கூடியவர்கள்.

**★ சனி**

சனிக்கிழமைகளில் பிறந்தவர்கள் மகிழ்ச்சி என்றால் விலை என்ன என்று கேட்கக் கூடியவர்கள். அற்ப மகிழ்ச்சிக்காக அதிகம் செலவு செய்பவர்கள். அடிக்கடி உடல் நோயால் பாதிக்கப்படுவார்கள். கண் மூடித்தனமாக காரியங்களில் இறங்குவார்கள். ரேஸ் பந்தயங்களில் அதிகமாக ஈடுபாடு கொண்டவர்களாக இருப்பார்கள்.

---

# பழிக்குப் பழி!

**சரோஜா விசுவநாதன்**

**சின்னஞ் சிறு கதை**

சங்கமித்ராவின் காதணி விழா, என் குலக்கொழுந்தைக் கொன்று நீத்தவன் வீட்டில் கோலாகலம். என் ஒரே குறிக்கோள் "பழிக்குப் பழி! இரத்தத்திற்கு இரத்தம்"

நன்றாக இருட்டட்டும் என்று காத்திருந்தேன். நெருங்கி சிங்காரிக்க மெதுவாக பதுங்கிப் பதுங்கி பங்களாவிற்குள் நுழைந்தேன்.

கல்யாண அசதி — காலையோட்டமாக எல்லோரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். யாரிடமும் தடுக்கி விழுந்து விடாமல் சப்தம் செய்யாமல் மூச்சைப் பிடித்துக் கொண்டு சங்கமித்ராவின் அறையை நோக்கிச் சென்றேன்.

அன்று மலர்ந்த மலராக கொழு கொழு என்று சங்கமித்ரா தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தாள். குனிந்து அந்த பால் வடியும் முகத்தைப் பார்த்தேன். என்ன இருந்தாலும் நானும் ஒரு தாயல்லவா!

"ஐயோ! இந்தக் குழந்தையையா பழிவாங்கப் போகிறேன்! சீச்சி! என்ன இது



கோழைத்தனம்? ராகுலா! உன் குழந்தையை நான் என்ன செய்கிறேன் பார்!? குழந்தையின் முகத்தருகே குனிந்து அப்படியே... அப்படியே... அதன் கன்னத்தில் ஆழமான கடி கடித்தேன். டிராகுலா கடிக்குமே அதே மாதிரி...?

குழந்தை "வீல் வீல்" என்று அலற — பங்களாவே அல்லோல கல்லோலப்பட்டது. நான் ஓடிப்போய் கதவின் பின்புறம் ஒளிந்து கொண்டேன். அதே கதவிடுக்கில் தான் என் கணவரும் மகனும் கொல்லப்பட்ட போது ஒளிந்திருந்தேன்.

ராகுலும் அவன் மனைவியும் ஓடிவந்து குழந்தையை அணைத்துக் கொண்டனர். இவர்கள் துடித்துப் போய்விட்ட குழந்தையின் கன்னத்தைத் தடவிய படியே தன் மனைவியைப் பார்த்து சீறினான் ராகுல. உன்னிடம் எவ்வளவு தரம் சொல்வது சாயங்காலம் வலையைப் போட்டு அறையில் ஃபிளிட் அடித்து கதவை மூடிவிடு, அப்போதுதான் இந்த கொசுக்கள் உள்ளே வராது என்று!

சொன்னதும் கேட்பாயா கொசு குழந்தையை எப்படிக் கடித்திருக்கிறது பார்"

நீத மூன்றடுக்கு மாளிகைக்கு சொந்தக்காரனை ராகுலைப் பற்றி நான் சொல்வதெல்லாம் சத்தியம்.

சென்ற மாதம் வியாழக் கிழமை பகலில் அவன் செய்த இரட்டைக் கொலைக்கு நானே சாட்சி.

கொலை செய்யப்பட்டவர்கள் என் கணவரும் என் ஒரே மகனும் ஆவர்.

எனக்காக எந்த வக்கீல் பணமின்றி நீதிமன்றத்தில் வழக்காடுவார்?

அன்று அந்தக் கயவன் ராகுவின் பங்களா தீப அலங்காரத்தில் குளித்துக் கொண்டிருந்தது, ராகுவின் ஒரே மகள்

பாதியாய்ல் விட்ட திருப்தியில் வெளியேறினேன்.

---

## சோதிட சிந்தாமணி

சிந்தாமணி சோதிடர்: திரு. ஆர்வி

25—9—1983 தொடக்கம் 1—10—1983 வரையுள்ள பலாபலன்கள்.

### மேஷம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் கால்.

மேஷம்:— இருந்து வந்த சில பிரச்சினைகள் விடுபடும். பொருட் செலவு எதிர்பாராமல் ஏற்படும். நவதானிய வியாபாரிகள் நிறைய நஷ்டமடைவார்கள். அரசாங்க உத்தியோகஸ்தர் ஏற்றம் அடைவர். அதே நேரத்தில் சில சிக்கல்களுக்குள்ளாக வேண்டியும் ஏற்படும். பின்னை ஒன்றினால் மனக் கவலை ஏற்படும். வாரக் கடைசியில் நல்ல செய்தி ஒன்று கிடைக்கும்.

### ரிஷபம்

கார்த்திகை 2, 3, 4-ஆம் கால்கள். ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ஆம் கால்கள்.

ரிஷபம்:— நிம்மதியான சூழ்நிலை உருவாகி வரும். வைபந்துக்கள் ஆறுதல் அளிப்பார்கள். நிலத்தால் ஏற்பட்ட விவகாரம் துரிதமாகச் சீரடையத் தொடங்கும். வியாபாரத்தில் மந்த நிலை காணப்படும். ஆலய வழிபாடும் ஆத்மார்த்த சிந்தனையும் புகழ் ஏற்றமும் உண்டு. தூரப் பிரயாணம் ஒன்றுக்கு அடிகோலப்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி.

### மிதுனம்

மிருகசீரிடம் 3-ஆம், 4-ஆம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ஆம் கால்கள்.

மிதுனம்:— பல விஷயங்களில் சிக்கல்கள் ஏற்படும். சிரமத்தின் பேரிலேயே காரியங்களை நிறைவேற்ற வேண்டும். கணவன் — மனைவி இடையே பிணக்கு ஏற்படும். வாரக் கடைசியில் நிலைமை சீரடையும். இழந்த பொருட்கள் சில மீட்கப்படும். கௌரவம் பாதுகாக்கப்படும். நன்றாக இருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு மேலிட ஆதரவு உண்டு.

### கடகம்

புனர்பூசம் 4-ஆம் கால், பூசம், ஆயிலியம்.

கடகம்:— எதிர்பாராத நன்மைகள் ஏற்படும். இழந்ததாகக் கருதப்பட்ட பொருள், புகழ், அந்தஸ்து எல்லாம் மீண்டும் வரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. கடிதப் போக்கு வரத்து அனுகூலமாக இருக்கும். மனைவி பிள்ளைகள் மகிழ்ச்சி தருவார்கள். இருந்து வரும் கவலை, கஷ்டங்கள் படிப்படியாக குறைய ஆரம்பிக்கும்.

### சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ஆம் கால்.

சிங்கம்:— கௌரவம், பொருளாதாரம் நன்றாக இருக்கும். மனதில் சோர்வு, சஞ்சலமும் அடிக்கடி ஏற்படும். தொழில் சிறக்கும். உறவினர்கள் அன்பும் ஆதரவும் நடந்து கொள்வார்கள். குடும்பத்தில் விருந்து, மகிழ்ச்சி, புனர் நட்பு ஆகியவற்றுக்கு இடமுண்டு. வெளியூரில் இருந்து கிடைக்கும் ஒரு நிருபம் நல்ல செய்தி கொண்டு வரும்.

### கன்னி

உத்தரம் 2, 3, 4-ஆம் கால்கள். அத்தம், சித்திரை 1-ஆம், 2-ஆம் கால்கள்.

கன்னி:— குடும்பத்தில் சில பிணக்குகள் உருவாகும். மனைவி வழி உறவினர் ஒருவர் தொந்தரவு தருவார். தொழிலில் உத்தரவு சாதகமின்மையும் அதிருப்தியும் காணப்படும். மேலதிகாரியுடன் ஜாக்கிரதையுடன் பழகுவது நல்லது. உயர்கல்வி மாணவர்கள் கவலையடைவார்கள், வீடு, நிலம் போன்றவற்றால் செலவு ஏற்படும்.

### துலாம்

சித்திரை 3, 4 ஆம் கால்கள். சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் கால்கள்.

துலாம்:— புகழ், கௌரவம் நன்றாக இருக்கும். தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். பணப் புழக்கம் சுமாராக இருக்கும். கொடுக்கல் வாங்கல் திருப்தியாக நடைபெறும். குடும்பத்தில் ஒருவர் சுகயீனம் அடைவார். பிள்ளைகள் ஆதரவாக இருப்பார்கள். சிறு, சிறு பிரயாணங்கள் ஏற்படும். பிரயாணத்தின் முடிவு பலனுடையதாக இருக்கும்.

### விருச்சிகம்

விசாகம் 4-ஆம் கால் அனுஷம், கேட்டை.

விருச்சிகம்:— உத்தியோகத்தர்களுக்குச் சற்றுச் சிரமமான வாரம் இது. சில பல சிக்கல்கள் ஏற்படும் மேலதிகாரி சீறி விழுவார். அடக்கத்தோடு விழுவார். அடக்கத்தோடும் வது நல்லது. திடீர் எனப் பதவி மாற்றம், இடமாற்றம் ஏற்படக் கூடும். வெளிநாட்டில் இருந்து நல்ல செய்தி கிடைக்கும்.

### தனு

மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் கால்.

தனு:— பணப் புழக்கம் நன்றாக இருக்கும். திடீர்ப் பொருள் வரவுக்கும் இடமுண்டு. வெளியூர்ப் பிரயாணத்தால் புதிய தொழில் முயற்சி ஒன்று உருவாகலாம். பிள்ளைகளால் மன நிம்மதி உண்டு. மாணவரின் படிப்புக்குப் பங்கம் ஏற்படும். கோர்ட் விவகாரங்களில் ஈடுபட வேண்டியிருக்கும். காதலில் மகிழ்ச்சி.

### மகரம்

உத்திராடம் 2, 3, 4-ஆம் கால்கள். திருவோணம், அவிட்டம் 1, 2-ஆம் கால்கள்.

மகரம்:— எதிரிகளால் இடையூறுகள் ஏற்படும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நம்பியவர்கள் ஏமாற்றப் பார்ப்பார்கள். கௌரவம், புகழ் பாதுகாக்கப்படும். எதிர்பாராத செலவினங்கள் ஏற்படும். சில விஷயங்களில் சிக்கல்களும், தொல்லைகளும் உண்டாகும். பணத்தினால் அவைகளைச் சமாளித்துக் கொள்வார்கள்.

### கும்பம்

அவிட்டம் 3, 4-ஆம் கால்கள், பூரட்டாதி, சதயம் 1, 2, 3-ஆம் கால்கள்.

கும்பம்:— கௌரவம், பொருளாதாரம் நன்கு அமையும். செலவினங்கள் அதிகரித்த போதிலும் சமாளித்துக் கொள்ளலாம். தொழில் துறை சிறந்து விளங்கும். பழைய கடன்கள் திரும்பி வரும். நீதிமன்ற வழக்குகளில் வெற்றிச் சூழ்நிலை ஏற்படும். வெளியூர்ப் பிரயாணம் ஒன்று அமையும். மனைவி மக்கள் ஆறுதல் அளிப்பார்கள்.

### மீனம்

பூரட்டாதி 4-ஆம் கால். உத்தரட்டாதி ரேவதி.

மீனம்:— வெளி வட்டாரப் பழக்கங்களினால் புகழ், செல்வாக்கு அதிகரிக்கும். பண வரவு நன்கு அமையும். தாமதமாகக் கிடந்த வியாபார விஷயங்கள் துரிதமாக முன்னேற்றமடைய வழி பிறக்கும் செலவினங்கள் கட்டுக் கடங்கி இருக்கும். பிரயாணத்தில் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. பிள்ளைகளால் கவலை.

# முற்றாக அழிந்த மிருக இனம் மீண்டும் தோன்றி வாழ்கிறதா?

## "டைனுசர்" பற்றி அமெரிக்க நிபுணர் தரும் விந்தை தகவல்

பல கோடி ஆண்டுகளுக்கு முன் பூமியில் வாழ்ந்து முற்றாக அழிந்து விட்டதாகக் கருதப்பட்ட ஒரு ராட்சத மிருக இனம் இப்போதும் உயிர் வாழ்கிறதா?

ஆபிரிக்காவின் அடர்ந்த காடுகளில் ஆய்வு நடத்திய அமெரிக்கர் ஒருவர் வெளியிட்ட தகவல்கள் இந்தச் சந்தேகத்தைக் கிளப்பி உள்ளது.

"டைனுசர்" எனப்படும் ராட்சத மிருக இனம் சுமார் அறரை கோடி ஆண்டுகளுக்கு முன்பே முற்றாக அழிந்து விட்டது என்று தான் அவ்வாளர்கள் நம்பி வந்தார்கள்.

அமெரிக்காவைச் சேர்ந்த பொறியியலாளரான ஹேர்மல் செகல்டர்ஸ் (48 வயது) அண்மையில் ஆபிரிக்காவில், காங்கோ நாட்டில் உள்ள அடர்ந்த காடுகளில் "டைனுசர்" மிருக இனம் சம்பந்தமாக ஆய்வு ஒன்றை நடத்தினர்.

ஹேர்மனுடன் அவருடைய மனைவியும், காங்கோ அதிகாரிகள் சிலரும் சேர்ந்துகொண்டனர்.

"மனித நடமாட்டம் இல்லாத காடுகள் மத்தியில் ஓர் ஏரி. அந்த ஏரியில் அசாதாரண மிருகம் ஒன்றைக் கண்டேன். அது மிகவும் பெரிதாக, டைனுசர் மிருகத்தைப் போல் இருந்தது" என்று அவர் சொன்னர்.

ஆனல் அந்த மிருகம் எந்த இனத்தைச் சேர்ந்தது என்பது தமக்குச் சரியாகத் தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேற்படி ஏரியில் அந்த அதிசய மிருகம் தண்ணீருக்கு மேலே தலையைத் தூக்கியது. ஹேர்மனின் கமெரா மிருகத்தின் தலைப் பகுதியைத் தனக்குள் அடக்கிக்கொண்டது.

இந்த மிருகத்தை தாங்கள் பல தடவைகள் பார்த்ததாகவும், மாலை நேரத்தில் தான் அது தலையை தண்ணீருக்கு மேலே தூக்கியது என்றும் ஹேர்மன் கூறினர்.

ஹேர்மன் ஒரு டேப் ரிகார்டரையும் தம்மோடு கொண்டு போயிருந்தார். அதில் ஒரு வித விசித்திரமான ஒலி பதிவாகியிருக்கிறது.

குழாய் வழியாக காற்று ஊதினல் வரும் ஒலியைப் போல் அது இருக்கிறது. இது தான் அந்த மிருகத்தின் சத்தம் என்று காங்கோரியர்கள் கூறுகிருர்கள்.



அந்த மிருகத்தின் கழுத்து பாம்பு போல் நீண்டிருந்தது. இரண்டு அடி கனமாக இருந்தது. தலை மிகவும் சிறியதாகக் காணப்பட்டது. தோலின் நிறம் பழுப்பு. இப்படி ஹேர்மன் தகவல் தந்தார்.

அந்த ஏரியின் பரப்பு சுமார் 2 சதுர மைல்களாகும், நடுப் பகுதியின் ஆழம் 200 அடி.

அதில் ராட்சத மிருகங்கள் வாழ்வதாக காங்கோரியர்கள் பல நூற்றாண்டுகளாக நம்பி வந்தனர். ஹேர்மன் வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் பிரெஞ்சுக் குழு ஒன்றும் அங்கு ஆய்வுகளை நடத்த உள்ளது.

டைனுசர் என்றும் ராட்சத மிருகங்கள் சுமார் 6 கோடி ஆண்டுகளுக்கு முன்பே முற்றாக அழிந்து விட்டன. அவை அழிந்து போனதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

அண்ட வெளியிலிருந்து பெரிய மலை போன்ற ஒரு சிறிய கிரகம் பூமியில் மோதி நொறுங்கியதால் பல மாதங்களுக்கு பூமியின் மீது தூசுப்படலம் படிந்திருந்தது. ஒரே இருளாகவும் இருந்தது.

அந்த நேரத்தில் டைனுசர் போன்ற பெரிய மிருகங்கள் அழிந்துவிட்டன. சிறிய மிருகங்கள் பள்ளங்களில் பதுங்கி இருந்து உயிர் பிழைத்தன. இப்படி விஞ்ஞானிகள் கூறுகிருர்கள்.

டிப்ளாடாக்கஸ் எனப்படும் மிருகமும் அக்காலத்தில் இருந்தது. டைனுசரின் தம்பியைப் போன்றது அது நீரில் வாழ்ந்தது.

டிப்ளாடாக்கஸ் மிருகங்களில் சில இப்போதும் உயிர் வாழ்கின்றனவா? பிரெஞ்சுக் குழுவினர் இதனைக் குறித்தும் ஆராய் உள்ளனர். (ர)

# அவளுக்கு வயதாகவில்லை

— ஆர். பாலகிருஷ்ணன் —

சின்னஞ் சிறு கதை

ஒரு வயது நிரம்பிய சுஜாவை ஒரு பாடசாலையில் சேர்த்து போய்க் கொண்டிருக்கிறேன். பஸ் வரவேயில்லை. என் அருகில் இருந்த கண்ணடி அணிந்த ஓர் பெண்மணி, "நீங்க எங்கே போகணும்?" என்ருள். இடத்தைச் சொன்னேன்.

"நான் கூட அங்கேதான் போகணும்... பத்து மணிக்குள் போயாகணும்... டாக்ஸியில் போகணுமா...?"

"இப்ப பஸ் வந்துடுமே... ஒரு பத்து நிமிஷம் வருதான்னு பார்க்கலாமே..."

"ஓ..."

"இது என் டாட்டர் சுஜா... ஸ்கூல்ல சேர்க்கணும்... அதுக்காகத்தான் போறேன்."

"எந்த ஸ்கூல்...?"

பாடசாலையின் பெயரைச் சொல்லிவிட்டு பத்து நிமிடங்கள் சுஜாவின் வீர தீரத்தையும், புத்திசாலித்தனத்தையும், அறிவையும் விவரித்தேன். அவள் புன்முறுவலுடன் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். பஸ் வந்து விட்டது.

முண்டியடித்துக் கொண்டு ஏறினேம். அந்தப் பெண்மணி எனக்கு முன்ஸீட்டில் இருந்தாள்.

"டிக்கெட்... டிக்கெட்..." என் மனதில் திடீரென ஓர் எண்ணம். இந்த சுஜாவிற்குப் போய் ஐம்பது சதம் கொடுத்து டிக்கெட் வாங்க வேண்டுமா? வேண்டாம் என்று தீர்மானித்தும் விட்டேன்.

"டிக்கெட்..."

"ஒரு ரூபா டிக்கெட் ஒன்று..."

"பாப்பாவுக்கு?"

"எம்பா... அதுக்கு மூணு வயசு தான் ஆகிறது. வாங்கணுமா...?"

"இதுக்கா மூணு வயசு...?" கேலியாகச் சிரித்தான். "அஞ்சு வயசுக்குறையாம இருக்குமே" என்று திட்டவட்டமாகக் கூறி விட்டான்.

"என்னப்பா நீ... ஜாதகம் எழுதினமாதிரி சொல்றே... இப்படியெல்லாம் சொல்லிட்டா பயந்து வாங்கிடுவேனு... ஐம்பது சதத்துக்காகவா சொல்றேன்... நீதி, நியாயம் எல்லாம் மாறக் கூடாது" - பெரிய லெக்சர் அடித்தேன். பாதி பஸ் எங்கள் வாக்குவாதத்தை வேடிக்கை பார்க்கத் தொடங்கி விட்டது. அந்தப் பெண்மணியும்



மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"அவர்தான் மூணு வயசுன்னு சொல்ருரே... பொய்யா சொல்வார்..." - சிலர் கண்டக்டரை சமாதானப் படுத்தினர்கள். ஒரு வழியாக டிக்கெட் வாங்காமலே சமாளித்து விட்டேன். அதற்குள் இறங்க வேண்டிய இடம் வந்து விட்டது. அந்தப் பெண்மணி அந்தக் கூட்டத்தில் கலந்து மறைந்து விட்டாள்.

சுஜாவிற்குச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன்.

"இதோ பார், அங்க ஒரு டீச்சரம்மா இருப்பாங்க... உள்ளே போனதும், 'குட்மோர்னிங்' சொல்லணும்... ஏதாவது கேட்டா 'டக் டக்'குன்னு ரிப்ளை பண்ணணும்... தெரிஞ்சுதா...?"

பிரின்ஸிபாலின் அறைக்கு வெளியே பலர் காத்திருந்தனர். என் முறை வந்ததும் "குட்மோர்னிங் மேடம்..." என்றேன்.

"வெரி குட்மோர்னிங்" - சிரித்த படியே தலை நிமிர்த்த பிரின்ஸிபாலைப் பார்த்ததும் ஒரு கணம் திடுக்கிட்டேன். ஓ... இவர்... பஸ்ஸில் என்னேடு வந்த பெண்மணி!

"உங்க பொண்ணுக்கு எத்தனை வயசு?"

"வந்து... மூ... மூ— இல்லே. நாலு வயசு..." தடுமாறினேன். "பயப்படாதீங்க... பஸ்ஸில் மூன்று வயசுன்னு அவ்வளவு "ஆர்க்யூ" பண்ணிட்டு இப்ப நாலு வயசு என்கிறீர்களே? ஒரு ஐம்பது சதத்துக்காக பொய் சொல்லியிருக்க மாட்டீங்க. எங்க ஸ்கூலோட கொள்கைப்படி நான் நாலு வயசு ஆன குழந்தைகளைத்தான் சேர்த்துக்கறது... அடுத்த வருஷம் வாங்க... வீட் நீரேன்?" - என் தலை சுழல்றது.

# 70 ஆவது பிறந்தநாள்



ஒரு பாறை மீது முழு நிர்வாணமாக அமர்ந்திருக்கும் இந்தக் கன்னி யார்? யாருக்காக அவள் இந்தக் கோலத்தில் இங்கு காத்திருக்கிருள்? இந்தக் கன்னி ஒரு மாவிடப் பெண் அல்லவள். அவள் ஒரு கடற்கன்னி. டென்மார்க்கில் உள்ள கொபன்ஹேகன் துறைமுகத்துக்கு முன்னல் இந்த அலங்காரச் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது.

உடலின் மேற் பாதம் கன்னியின் தோற்றம், கீழ்ப்பாகம் மீனின் உருவம். உல்லாசப் பிரயாணிகளை இந்தக் கடற்கன்னி வெகுவாக கவர்ந்து இழுக்கிருள்.

எழுபது வருடங்களுக்கு முன் நிறுவப்பட்ட சிலை இது. அண்மையில் இந்தக் கடற்கன்னி தனது பிறந்த தினத்தைக் கொண்டாடினள். தவறு. இவளுடைய பிறந்த தினத்தை மற்றவர்கள் கொண்டாடினர்கள்.

தண்ணீர் நேசிப்பவர்களின் ஆதரவில் இந்தக் கடற்கன்னி மீது அமைதியாகப் பங்கு கொண்டாள். (ர)

# விபசாரிகளை "ஏற்றுமதி" செய்யும் வங்காளம்!

## பிச்சை எடுக்கும் சோம்பேறிகள் ஏஜண்டுகளாகப் பணி புரிகிருர்கள்

கைநிறைய பணம் சம்பாதிப்பதற்காக வங்காள தேசத்திலிருந்து ஏராளமான பெண்கள் வெளிநாடுகளுக்குச் சென்று இருக்கிருர்கள்.

அவர்களில் பலர் செய்யும் தொழில் என்ன தெரியுமா? விபசாரம்.

இவர்களுக்கு ஏஜண்டுகளாக பிச்சைக்கார சோம்பேறிகள் பணிபுரிகிருர்கள்.

வங்காளதேசத்தில் வெளியாகும் நாளிதழ் ஒன்றே இந்த அதிர்ச்சித் தகவலினை வெளியிட்டு உள்ளது.

வங்காள தேசத்தில் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

விபசாரம், களவு, கொள்ளை வழிப்பறி போன்ற குற்றச் செயல்களும் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன.

இந்த இரு அதிகரிப்புகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வங்காளதேசம், உலகின் வறிய நாடுகளில் ஒன்று. மொத்த சனத் தொகை ஒன்பது கோடியே 20 லட்சம்.

தலைநகரான டாக்காவில் மாத்திரம் 25 லட்சம் மக்கள் இருக்கிருர்கள். இவர்களில் 10 சத வீதமானேரும் பிச்சைக்காரர்களே என்று டாக்காவின் மாநகராஜமன்றக் கூட்டுக்காபணம் அதன் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

டாக்காவைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் குற்றச் செயல்கள் அதிகமாக நடப்பதற்கு இந்தப் பிச்சைக்காரர்களே பெரிதும் காரணம் என்று பொலிஸார் நம்புகிருர்கள்.

டாக்காவில் பெரிய அளவில் குற்றச் செயல்களைப் புரிந்து வரும் மோசமாப் பேர்வழிகள் இருக்கிருர்கள். இந்தப் பிச்சைக்காரர்களை அவர்கள் தங்கள் குற்றக் வழிகளுக்குப் பயன்படுத்திக் கொள்கிருர்கள்.

பிச்சைக்காரர்கள் என்ன செய்கிருர்கள் தெரியுமா?

பிச்சை எடுப்பதற்காக அவர்கள் வீடு வீடாகச் செல்லும் போது அந்த வீடுகளை நன்கு நோட்டம் விடுகிருர்கள். பின்னர் அந்த வீடுகள் பற்றி மேற்படி பேர்வழிகளுக்குத் தகவல் கொடுக்கிருர்கள்.

அதன் பிறகு கொள்ளைக்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு கொள்ளை நடத்தப்படுகிறது. கொள்ளையில் கிடைக்கும் ஆதாயத்தை அனுசரித்து பிச்சைக்காரர்களுக்கு கமிஷன் வழங்கப்படுகிறது.

அது மாத்திரமல்ல.

விபசாரத் தொழிலை விருத்தி செய்வதிலும் இந்தப் பிச்சைக்காரர்கள் பெரும் பங்கு வகிக்கிருர்கள். பெண் கடத்தலிலும் இவர்களின் பெருந்துணை பெறப்படுகிறது.

இட்டெபாக் எனப்படும் வங்காளதேச நாளிதழ் ஒன்று அண்மையில் செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது.

வெளிநாட்டுத் தொழில் ஏஜன்சிகள், ஆயிரக்கணக்கான வங்காளதேச இளம் பெண்களை ஏற்கனவே பாகிஸ்தானுக்கு அழைத்துச் சென்று விட்டன.

இந்தப் பெண்கள் அங்கிருந்து பின்னர் மத்திய கிழக்கு, வளைகுடா நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிருர்கள். இப்படி அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தப் பெண் விற்பனையை வங்காளதேச அரசாங்கம் அறிந்து வைத்திருக்கிறது. விற்பனைக்கு ஏற்பாடு செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வங்காளதேசத்தில் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்ததற்கு நிர்வாணமை மாத்திரம் காரணமல்ல, சோம்பேறித்தனமும் ஒரு காரணமாகும்.

இன்று பிச்சைக்காரர்களாக இருப்பவர்கள் எல்லாம் உண்மையில் பிச்சை எடுக்க வேண்டிய நிலையில் உள்ளவர்கள் அல்லர். பிச்சை எடுக்காமல் உழைத்து வாழலாம்.

ஆனல் அவர்கள் எளிதான ஜீவனத்தை நாடுகிருர்கள். அதனால் தான் பிச்சை எடுக்கிருர்கள் என்று மேற்படி அதிகாரிகள் மேலும் தகவல் தருகிருர்கள்.

அவர்கள் பிச்சை எடுப்பதை யாராவது ஆட்சேபித்தால் "எங்களுக்கு ஒரு வேலை தாருங்கள். நாங்கள் பிச்சை எடுப்பதைக் கை விடுகிறோம்" என்று சொல்வார்கள். வேலை பெற்றுக் கொடுத்தால் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று சமூகநல அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் சொல்கிருர். (ர)

# படித்த பெண்ணை மணக்கும் ஆண்களுக்கு மார்பு நோய் அபாயம் அதிகமாம்

குறைந்த கல்வி அறிவுடைய பெண்களை மணந்த ஆண்களை விட, உயர் கல்வி கற்ற பெண்களை மணந்த ஆண்களுக்கு மாரடைப்பு நோய் ஏற்படக் கூடிய வாய்ப்பு அதிகமாம்.

அமெரிக்க விஞ்ஞானிகள் இப்படிச் சொல்கிருர்கள்.

வாஷிங்டனில் அமெரிக்க தேசிய சுகாதார நிறுவகம் என்ற ஓர் அமைப்பு இருக்கிறது. மார்பு, நுரையீரல், இரத்தம் ஆகியவை சம்பந்தமான விஷயங்களை குறித்து ஆராய்ச்சிகளை நடத்துவதற்கென்றே தனியான பிரிவு ஒன்று உள்ளது.

அந்தப் பிரிவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கடந்த பத்து ஆண்டுகளாக ஆய்வு நடத்தி இந்த விஷயத்தைக் கண்டு பிடித்து இருக்கிருர்கள்.

பல்கலைக்கழக கல்வி பெற்ற மனைவிமாரைக் கொண்ட குடும்பங்களையும், ஆரம்ப கல்விமேனம் படிப்பை முடித்துக் கொண்ட மனைவிமாரை உடைய குடும்பங்களையும் அவர்கள் ஆய்வுக்கு உட்படுத்தினர்கள்.

ஆரம்பக் கல்வி கற்ற பெண்களை மணந்தவர்களை விட, பல்கலைக்கழகப் படிப்புப் பெற்ற ஆண்களுக்கு மாரடைப்பு நோய் ஏற்படக் கூடிய வாய்ப்பு மும் மடங்கு அதிகம் என்று அவர்கள் மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரிய வந்தது.

உயர் கல்வி கற்ற பெண்களை மணந்த பதினைந்து ஆண்களில் ஏழு பேருக்கு மாரடைப்பு நோய் ஏற்பட்டிருந்தது.

தங்கள் மனைவியர் அவர்களுடைய வாழ்வில் அடைந்த வெற்றியைக் கண்டு அங்கலாய்ப்பு தான் இதற்குக் காரணம் என்று சொல்ல முடியாது.

படித்த மனைவியர் தொழில் புரியும் போது அவர்களுக்கு ஏற்படும் குழப்பங்களையும் பிரச்சினைகளையும் தங்களால் தீர்க்க முடியாத நிலையில் தாம் அவர்களுக்கு ஏற்படும் குழப்பங்களையும் தங்களால் தீர்க்க முடியாத நிலையில் தாம் இருக்கிருர்களே என்ற அனுதாப அல்லது பரிதாப நிலையும் இவ்வாறான நிலைக்கு உள்ளாவதாம் என்று அந்த விஞ்ஞானிகள் மேலும் கூறுகிருர்கள்.

அவர்கள் இன்னொரு விஷயத்தையும் சுட்டிக்காட்டி இருக்கிருர்கள்.

அதாவது இவ்வாறான மார்பு சம்பந்தமான நோயால் பீடிக்கப்பட்ட கணவர்கள் அவர்கள் மனைவியைப் பற்றியோ மனைவியைப் பற்றியோ எதுவித முறைப்பாட்டையும் தெரிவிக்கவில்லை. தங்கள் மனைவி குடும்பத்துடன் வெகு அன்பாகவே நடந்து கொள்வதாகத் தெரிவித்து இருக்கிருர்கள். (ர)


## ஆண்களுக்கு மாத்திரம்

ஆண்களின் இரகசிய நோய்களான ஆண்மைக் குறைவு, வீரியமின்மை, துரித ஸ்கலிதம், நரம்புத் தளர்ச்சி, இல்லறத்தில் விருப்பமின்மை ஆகிய கோளாறுகளுக்கு 30 வருட அனுபவமுள்ள என்னை நேரில் சந்தியுங்கள் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளுங்கள். இரகசியங்கள் யாவும் பாதுகாக்கப்படும்.

**Dr. ஏ. முகம்மது**

Regd. No. 6345

கொழும்பு மெடிக்கல் சென்டர்,
190, ஜெம்பட்டா வீதி, கொழும்பு — 13.

## ஆஸ்த்மா

என் மனைவிக்கு கடந்த 6 வருடங்களாக இருந்த மார்ச்சளி, இழுப்பு, மார்பில் ஏற்படும் "கர் கர்" என்ற சத்தம் ஆகியனவற்றை டாக்டர் அப்துல்லா முகம்மது அவர்கள் பூரணமாகச் சுகப்படுத்தி விட்டார். என் மனைவியின் நோய்க்கு நான் செய்யாத வைத்தியமில்லை. காணத டாக்டர்கள் இல்லை நன்றி.

திரு. பீ. சாய்ந்தமருதுபிள்ளை
போஸ்ட் மாஸ்டர் கரவெட்டி.

சிறு வயது முதல் எனக்கு தீராது இருந்து வந்த ஆஸ்த்மா நோயை டாக்டர் ஏ. முகம்மது அவர்கள் ஒரே ஒரு மருந்தில் சுகப்படுத்தி விட்டார் என் அன்பு கலந்த நன்றியுடன், பாராட்டுகிறேன்.

ஜனப் ஏ. எம். உவைஸ்
30, பள்ளிவாசல் ரத்தகொடுமாடு அக்குறணை.

எனது மனைவிக்கு பல வருடங்களாக இருந்த ஆஸ்த்மா என்ற மார்ச்சளியை டாக்டர் முகமது அவர்கள் சுகப்படுத்தி விட்டார் நன்றி.

திரு. இ. இராசமாணிக்கம்
8 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

அன்புள்ள டாக்டர் முகம்மது அவர்கட்கு, தங்கள் ஆஸ்த்மா மருந்துகளை நான் விநியோகித்து பல பேர்களுக்கு நல்ல சுகம், நன்றி.

திரு. வி. நடராஜா
மகாஜன கிழக்கு கூட்டுறவுச் சங்கம் அக்கரைப்பற்று.

கடந்த 7 வருடமாக என் அம்மா ஆஸ்த்மா என்ற இழுப்பு நோயால் பட்ட துன்பமும் கஷ்டமும் எழுத்தில் அடங்காது, நாங்கள் செய்யாத வைத்தியம் இல்லை. தங்களின் மருந்துகளைப் பாவித்த பின் இழுப்பு பூரணமாக நின்று – நன்றாகச் சாப்பிட்டு நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறார். கடவுளுக்கு அடுத்தபடியாக உங்களுக்கு என் நன்றி.

ஒப்பம்: திருமதி லலிதா பாமசிங்கம்
லலிதா ஸ்டோர்ஸ் றத்னைபண்டட்டு,
ஹட்டன்.

பூரணமான ஸ்பெஷல் மருந்துகள் சுவாசமாக அல்ஸ்த்மா என்ற மார்ச்சளியை பூரணமாகவும் நிரந்தரமாகவும் குணப்படுத்தப்படுகிறது.

விலை ரூ. 467/-, தபால் 5/-

இன்னும் ஆண்களுக்கான கோளாறுகள் நீரழிவு, இரத்த அழுத்தம், மேலீவு, பலவீனம், மூல வியாதிகள், புண், சொறி, எக்ஸிமா, தோல்வியாதிகள், ஆகிய நோய்களுக்கும் 30 வருட அனுபவமுள்ள டாக்டர் ஏ. முகம்மது அவர்களால் சிகிச்சை அளிக்கப்படும்.

சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு மெடிக்கல் சான்றிதழ் இலவசம்.

**Dr. A. MOHAMED**

Regd. No. 6345

கொழும்பு மெடிக்கல் சென்டர்,
190, ஜெம்பட்டா வீதி, கொழும்பு-13

# காதல் என்றாலே கசக்கிறதாம் இந்த நடிகருக்கு!

இன்றைய இளம் சினிமா நடிகர்களில் ஒருவர் சிவசந்திரன். வாட்ட சாட்டமான லட்சணமான முகத் தோற்றம் கொண்ட இவர் கே. பாலசந்தரின் "பட்டினப் பிரவேசம்" படம் மூலம் சினிமா உலக பயணத்தை தொடங்கியவர்.

சென்னை லயோலா கல்லூரியில் படித்து எம்.ஏ. பட்டம் பெற்றவர். இவருடைய தந்தை மனுவேல் ஓய்வு பெற்ற விற்பனை இலாகா அதிகாரி.

சினிமா நடிகர் ஆகும் முன்பு சிவசந்திரன் பெயர் ஆன்டனி. பெயர் மாற்றியவர் கே. பாலசந்தர். "பஞ்சகல்யாணி" "வண்டிச்சக்கரம்", "ராணித் தேனீ", "சவுந்தர்யமே வருக வருக", "அவந்தராகம்" உட்பட 6 ஆண்டுகளில் இவர் நடித்த படங்கள் 38.

இப்போதும் பல படங்களில் நடிக்கும் சிவசந்திரன் நிருபரிடம் கூறியதாவது:—

பட்டினப் பிரவேசத்தில் ஊமையாக நடித்த என்னை வில்லனாக பல படங்களில் ரசிகர்கள் பார்த்தனர். கதாநாயகனா? வில்லனா? இல்லை என்றால் சில காட்சிகளில் வரும் சிறு வேடமா? என்பதெல்லாம் பிரச்சினை அல்ல! எந்த வேடமானாலும் சரி, ஏற்று நடிக்கும் மனப் பக்குவத்தைப் பெற்று விட்டேன்.

"எனக்கு இந்த வேடமே வேண்டும் என்று கேட்டால் போதும், என்ன இவன் இப்படி கேட்பதா" என்று என்னை விடக் கூடாதே என்று வாயே திறப்பதில்லை.

சில படங்களில் நடிக்க "அட்வான்ஸ்" பெற்ற பின்பு, அதில் நான் நடிக்கவில்லை என்றாகிவிடும். கோபமோ, குமுறலோ கொள்வதில்லை, வாங்கிய "அட்வான்ஸ்" பணத்தை திருப்பி கொடுத்துவிடுவேன்.

சினிமா தொழில் அருமையான தொழில், இங்கே "ராசியுள்ள நடிகன்!" என்ற பெயர் தான் கிடைக்க வேண்டும். திறமை, நிறந்த வேடம் எல்லாம் அதற்கு பின்புதான், ராசி என்ற சொல்லை பெற வேண்டும்.

கதறக் கதறக் கற்பழிக்க முனையும் காட்சிகளில் நடித்தவன் என்பதாலோ என்னவோ சமீபத்தில் ஒரு புது கதாநாயகி என்னைப் பார்த்ததும் "உங்கள் பக்கத்தில் நிற்கவே பயமாக இருக்கிறது!" என்றார். சிரிப்புதான் வந்தது. "என்னைப் பார்த்தால் பயம் ஏன்?" என்று கேட்டேன். "படங்களில் பார்த்து பார்த்து மனதில் நிலைத்து விட்டது" என்றார்.

எனக்கும் எந்த ஒரு நடிகைக்கும் காதல் என்றால் நான் அது பற்றி கவலைப்படுவதில்லை. ஒரு பிரபல நடிகையுடன் இணைத்தே பேசப்பட்டது. எனக்கு எதற்கு சார் காதல்! கீதல்! உண்மையிலேயே சொல்கிறேன் காதல் என்றாலே எனக்குக் கசக்கிறதே தவிர, இனிக்கவில்லை.

இப்படிச் சொல்வதால் எந்த நடிகையையோ காதலித்து கசப்பு அடைந்து விட்டேன் என்று நினைக்க வேண்டாம். என் சகோதரிகளின் திருமணம் நடந்த பின்பே எனக்குத் திருமணம்.

நான் இதுவரை நடித்த படங்களில் சிவகுமாருடன்தான் அதிக படங்களில் நடித்தேன். எந்த ஒரு நடிகரோ, நடிகையோ என்னை வெறுப்பதே கிடையாது. எல்லோரிடமும் நெருங்கிப் பழகுவேன்.

சிவாஜி சார் நடிக்கும் "வெள்ளை ரோஜா" படத்தில் நானும் நடிக்கிறேன். அந்த படப்பிடிப்பில்தான் அவர்களை முதலில் சந்தித்தேன். அவர் என்னை கட்டிப்பிடித்து வாழ்த்தியதை மறக்க மாட்டேன்.

நாடகங்கள் எழுதிய நான் சினிமாவுக்காக கதை எழுதுகிறேன். ரஞ்சித்குமார் டைரக்ட் செய்யும் "அன்பே வா" படத்தின் கதை என்னுடையதே. இன்னும் 2 ஆண்டுகளில் டைரக்ஷன் துறைக்கு செல்ல முடிவு செய்துள்ளேன்.

நான் அழகை ரசிக்கும் ரசிகன், அழகிய பெண்களின் அழகை ரசிப்பேன். அந்த ரசனையை காதலாக உள்ளத்தில் வளர்த்துக் கொள்ள மாட்டேன். இப்படிக் கூறினார் சிவசந்திரன் (ம-10)



ரஜனிகாந்த் திடீர், திடீர் என மாறும் சுபாவம் கொண்டவர். அதனால்தான் அவர் மீது சாய்ந்திருக்கும் வேளையில்கூட பூர்ணிமா ஜெயராம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கிறார் போலும்! "தங்க மகன்" படத்தில் இந்தக் காட்சி. (ம-10)

# ரஜனிகாந்த் ஜோடியாக இந்தி நடிகை ஜீனத் அமன்!

தமிழ்ப் பட உலகின் "ஸ்டைல்" நடிகர் ரஜனிகாந்த். இந்திப் படவுலகில் பிரவேசித்துள்ள ரஜனி இந்தி கவர்ச்சி நடிகை ஜீனத் அமனுடன் ஒரு படத்தில் ஜோடி சேர்ந்து நடிக்கிறார்.

இந்திப் படங்களில் தமிழ் நடிகர், நடிகைகளுக்கு வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. புதிய படம் ஒன்றில் ரஜனிகாந்த் — ஜீனத் அமன் ஜோடியாக நடிக்கிறார்கள்.

ஏற்கனவே முன்பு வைஜயந்திமாலா, பத்மினி, ஹேமமாலினி, ரேகா ஆகிய தமிழ் நடிகைகள் இந்திப் பட உலகில் பிரபலமானது தெரிந்ததே. அடுத்து ரதி பிரபலமானார்.

நடிகர்களைப் பொறுத்தவரை "ஏக் துஜேகேலியே" படம் மூலம் கமலஹாசன் இந்திப் பட உலகில் முன்னணி நடிகராக விளங்கி வருகிறார். அவரை தொடர்ந்து, "அந்தா கானூன்" படம் மூலம் ரஜனிகாந்த் இந்திப் பட உலகில் பிரவேசித்து வெற்றி பெற்றார். இப்போது பல இந்திப் படங்களில் நடித்து வருகிறார்.

அதே போன்று தமிழ்ப் பட டைரக்டர்கள் பாலசந்தர், பாரதிராஜா, துரை, எஸ். ஏ. சந்திரசேகர் உட்பட பலர் இந்தித் திரை உலகில் நுழைந்து உள்ளனர்.

கிருஷ்ண ஆர்ட் பிக்சர்ஸ் சார்பில் டி. என். என். பாபு, கே. சி. என். சந்திரசேகர் ஆகியோர் தயாரிக்கும் புதிய இந்தி படத்தில் ரஜனிகாந்த் கதாநாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக பிரபல இந்தி நடிகை ஜீனத் அமன் நடிக்கிறார்.

ரகு டைரக்ட் செய்யும் இந்த படத்துக்கு பாப்பிலஹிரி இசை அமைக்கிறார். இந்தப் படத்தின் தொடக்க விழா பாடல் பதிவுடன் நடந்தது. (ம-10)

# படப்பிடிப்பில் கதாநாயகன் வில்லன் நடிகர் படுகாயம்!

படப்பிடிப்பின் போது கதாநாயகனும், வில்லனும் படுகாயமுற்ற சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

"மாதுளை முத்துக்கள்" படத்தை அடுத்து பி. எஸ். வீரப்பா, வீரலட்சுமி கம்பைன்ஸ் சார்பில் "சாட்சி" என்ற வண்ணப்படத்தை தயாரித்து வருகிறார்.

இதில் விஜயகாந்த் ஜோடியாக விஜி நடிக்கிறார். சாரதா ஸ்டுடியோவில் படப்பிடிப்பு நடந்தது.

வில்லன் சங்கிலி முருகனுடன் விஜயகாந்த் மோதிய பயங்கர சண்டைக் காட்சிகள் பிரசாத் ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டன.

இந்தக் காட்சிக்காக முற்றிலும் கண்ணாடிகளால் உருவான பெரிய மாளிகை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது!

பெரிய கண்ணாடிச் சுவர் மீது ஜீப்பைத் தானே ஓட்டி மின்னல் வேகத்தில் பாய்ந்தார் விஜயகாந்த்.

அந்த அதிர்ச்சியில் அந்த மாளிகை முழுவதும் அமைக்கப்பட்டிருந்த கண்ணாடிகள் உடைந்து நொருங்கின.

விஜயகாந்தின் வலது கால், முகம் ஆகிய இடங்களில் கண்ணாடி குத்திக் கிழித்து ரத்தம் கொட்டியது. வில்லன் நடிகர் சங்கிலி முருகன் மூக்கில் கண்ணாடி கிழித்தது! உடனடியாக அவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள். டாக்டர்கள் சிகிச்சை அளித்தனர்.

முடிவடையும் தருவாயில் உள்ள இந்தப் படத்தில் "நிழல்கள்" ரவி, அனுராதா, சூரியகாந்த், அம்ஜத்குமார், செஞ்சி கிருஷ்ணன், செந்தில் சூரியகாந்த், வீரராகவன் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

கதையை ஷோபா எழுத திரைக்கதை, வசனம் டைரக்ஷனை எஸ். ஏ. சந்திரசேகர் ஏற்றுள்ளார். ஒளிப்பதிவை விஜய் கவனிக்க சங்கர் - கணேஷ் இசை அமைக்கிறார்கள். தயாரிப்பு பி. எஸ். வி. ஹரிகரன் (ம-10)

## சாமியாராக கராத்தே மணி

பரட்டைத் தலையுடன் பஞ்சைப் பராரியல பைத்தியக்காரன் போல தோற்றம் அளிப்பவர் பெரியசாமியார். இவர் அக்கிரமம் நடைபெறும் இடத்துக்கு எதிர்பாராது சென்று மடக்குவார்.

வீட்டு வேலைக்காரனை இரு பெண்கள் வாயில் இரும்புக் கம்பியை நுழைய வைத்து அடித்து நொறுக்கினர். அங்கு "திடீர்" என்று சென்ற பெரியசாமியார் (கராத்தே நிபுணர் ஆர். வி. டி. மணி) கம்பியை பிடுங்கி ஒரே அடியில் உடைத்து நொறுக்கி வீசினார்.

"கட்" என்றனர். கதை வசனம் எழுதி டைரக்ட் செய்யும் கலைஞானம் – பணை மணியன், இந்தக் காட்சி "அவள் ஒரு மாதிரி" என்ற படத்துக்காக படம் ஆக்கப்பட்டது.

சுரேஷ், எஸ். வி. சேகர், விஜி, அம்பிகா, ராஜகோபால், ஏ. சகுந்தலா, செந்தில் ஆகியோர் இதில் நடிக்கிறார்கள். (யீ–10)



"மனிதன் எந்த மதத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும் அவனுக்கு வெள்ளை மனம் வேண்டும்" என்று தேங்காய் சீனிவாசனிடம் கூறுகிறாரோ சிவாஜி? "வெள்ளை ரோஜா" படத்தில் இவ்விதம் தோன்றுகிறார்கள் அவர்கள். (ம-10)



மல்யுத்தத்தில் இதுவும் ஒரு வகையோ? ஆனால், சைரா பானுவிடம் ரவீந்தர் தோல்வி காணப் போவது என்னவோ நிச்சயம்! போய்க் கால் குதிரை" படத்தில் வரும் காட்சி. (ம-10)

# ராஜீவின் சதித் திட்டத்தை முறியடித்தார் பிரபு

ராஜீவ் தன் தகப்பனாரை ஏமாற்றி அவரது சொத்தைப் பறிக்கத் திட்டமிட்டார். பிரபு உண்மையை அறிந்து சதித் திட்டத்தை முறியடித்தார்.

ராமனுதன் ஒரு கோமகன் வரர். அவருக்கு 2 மகன்கள். இருவரும் ஊதாரித்தனமாகப் பணத்தைச் செலவு செய்தனர்.

மேற்கொண்டு செலவுக்குப் பணம் இல்லாததால் தங்கள் தகப்பனாரை ஏமாற்றி சொத்தை அபகரிக்க முயன்றனர்.

அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக்குத்தான் சொத்து என்று தகப்பனார் கூறி இருந்தார். ஆகவே இருவரும் அவசரமாக திருமணம் செய்து கொண்டனர். வேறு ஒருவருடைய குழந்தையைக் கொண்டு வந்து காட்டி தகப்பனாரை ஏமாற்ற முயன்றனர்.

ஆனால் அவர்களைப் பற்றிய உண்மை அந்த வீட்டு வேலைக்காரனுக்குத் தெரிந்து விட்டது. உண்மை கூறியனை அவன், தன் எஜமானனிடம் சொல்லி விட்டான். அதனால் ராமனுதனின் சொத்தும் காப்பாற்றப்பட்டது. வேலைக்காரன் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கையும் அதிகரித்தது.

இப்படி ஒரு காட்சி குமாரவேல் பிலிம்சாரின் "முத்து எங்கள் சொத்து" படத்தில் இடம் பெறுகிறது.

இதில் கோடீஸ்வரராக பூர்ணம் விசுவநாதனும், அவரது பிள்ளைகளாக ராஜீவ், புதுமுகம் அரவிந்த் ஆகியோரும் நடித்தனர்.

வேலைக்காரனாக பிரபு நடித்தார். இக்காட்சிக்காக ரூபா 4 லட்சம் செலவில் பங்களா அமைக்கப்பட்டது.

பிரபு, ராதா ஜோடியாக நடிக்கும் இப்படத்தில் தங்கவேலு, மனோரமா, சீதா, லலிதா, எஸ். என். பார்வதி, சிவசந்திரன் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

ஜி. என். ரங்கராஜன் டைரக்ட் செய்கிறார். டி. டி- பிரசாத் ஒளிப்பதிவு செய்கிறார். இளையராஜா இசை அமைக்கிறார். (ஜ–10)

## கோடம்பாக்கம் டயரி

சென்னை வேளச்சேரியில் உள்ள விஜயகுமாரின் பங்களாவுக்குள்ளே சென்றதும் கண்களைக் கவர்வது என்ன தெரியுமா? வண்ண வண்ண மீன்கள் நீந்தி விளையாடும் கண்ணாடிப் பேழை. 2,000 ரூபாய் மதிப்புள்ள இந்த கண்ணாடிப் பேழையில் உள்ளவை அனைத்தும் வெளிநாட்டு மீன் வகைகள். இவற்றை "இன்சூர்" செய்து இருக்கிறாராம் விஜயகுமார்.

★

வில்லன் நடிகர்கள் ராதா ரவியும், நாகராஜ சோழனும் சட்டக் கல்வி பட்டம் பெற்ற இளைஞர்கள். ஆனால் அவர்கள் படித்த படிப்பினால் பயன்பெறுவதைவிட சினிமா நடிப்பினால் பெற்று விடவே துடிக்கிறார்கள். இவர்களின் இளமைத் துடிப்புக்கு பலன் கிட்டிடும்.

★

தமிழ்ப்பட உலகிலும் ஒரு ஹேமமாலினி இருக்கிறார். ஆனால் இவர் நடிகை அல்ல, "டப்பிங்" குரல் கொடுப்பதில் வல்லமை பெற்றவர். இந்த மாலினியின் குரல் இரவல் பெறாத பிரபல நடிகைகள் ஒரு சிலரே! இரவல் குரல் பேசுவதால், அந்த நடிகைகளைப் பற்றிய எல்லா விஷயங்களும் இவருக்கு தெள்ளத் தெளிவாகவே தெரியுமாம்.

★

20 ஆண்டுகளாக காலில் செருப்பு அணியாமல் நடந்து கொண்டிருக்கும் சினிமா நடிகரும் இருக்கிறார். அவர்தான் ராஜ்ஜி ரங்கமணி. இவர் ஒரு கருமாரி அம்மன் பக்தர். சோதிடரும் கூட. கடு மணலிலும், குளிர்ந்த மணல் பரப்பில் நடப்பது போல நடக்க கருமாரியின் அருள் கிடைத்து இருக்கிறதாம். (ஜ–10)

## தமிழில் "விதார்த்தா"

"விஸ்வரூபம்", "தியாகி" ஆகிய படங்களை தயாரித்த பத்மாலயம் பட நிறுவனம் அடுத்தும் சிவாஜிகணேசன் நடிக்கும் படம் ஒன்றை தயாரிக்கிறது.

திலீப்குமார், சஞ்சய்தத் நடித்த "விதார்த்தா" என்ற இந்திப் படத்தையே தமிழில் தயாரிக்கிறது பத்மாலயா நிறுவனம். பிரபு-ராதா ஜோடியாக நடிக்க, சுஜாதா,அம்பிகா ஆகியோரும் நடிக்கிறார்கள். (ம-10)



கதாநாயகியாக வலம் வந்த அம்பிகா கவர்ச்சியைக் காட்டி நடித்தாலும் அவருடைய பெருமை மாறப் போவதில்லை! இவ்விதம் அவர் காட்சி தருவது "ராகங்கள் மாறுவதில்லை" படத்திற்காக. (ம-10)



தாமரை பூத்த தடாகத்தில் இந்த அல்லிக் கொடியும் அழகுக் கோலம் காட்டுகிறது. விஜியின் உடலில் ஒட்டிய ஈரம் சேலையினூடாகக் கவர்ச்சியைப் பளிச்சிடும் அழகே அழகு!

(ம–10)

# எம். ஆர். ராதாவின் குரலில் ஒரு பாட்டு

"கவீர்" என்ற குரலில் பேசி நடித்து ஒரு காலத்தில் புரட்சியை ஏற்படுத்தியவர் நடிகர் எம். ஆர். ராதா. அவர் காலமாகி நீண்ட நாட்களாகி விட்ட பின்னரும் அவருடைய குரலுக்கு இருந்த "மவுசு" குறையவே இல்லை.

ஏ. வி. எம். படத்துக்காக எம். ஆர். ராதா குரலில் எஸ். பி. பாலசுப்பிரமணியம் பாடினார்.

ஏ. வி. எம். நிறுவனம் தயாரிக்கும் "தூக்கு கோட்டைச் சிங்கக் குட்டி" என்னும் படத்தில் கதாநாயகனாக பிரபுவும், ஜோடியாக ஜெயக்கு சுமிதாவும் நடித்து வருகிறார்கள்.

படப்பிடிப்பு வேகமாக நடைபெற்று முடிவடையும் நிலையில் உள்ளது.

இந்தப் படத்துக்காக மறைந்த நடிகவேள் எம். ஆர். ராதாவின் குரலில் எஸ். பி. பாலசுப்பிரமணியம் ஒரு பாடல் பாடி இருக்கிறார்.

"அப்பன் பேச்சை கேட்டவன் யாரு — இப்ப இங்கே இருக்குறேன் பாரு — முன்னாலே யாரும் இல்லை — பின்னாலே யாரும் இல்லை — தப்பாம பொறந்தவன் நான்தான்டா" என்று தொடங்கும் அந்தப் பாடலை வாலி எழுத இளையராஜா இசை அமைத்தார்.

இந்தப் படத்துக்கான காட்சி அடையாறு கேட் நட்சத்திர ஹோட்டலில் உள்ள நீச்சல் குளத்தில் படமாக்கப்பட்டது.

வில்லனாக நடிக்கும் எம். ஆர். ராதாரவியைச் சுற்றி நீச்சல் உடையில் 50 இளம் அழகிகள் குளத்துக்குள் மீன் போல் துள்ளித் துள்ளி ஆட ராதாரவி பாட படமாக்கப்பட்டது. ராதாரவி நடிகர் எம். ஆர். ராதாவின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிளுகிளுப்பூட்டும் இந்த கவர்ச்சி நடனத்தை புலியூர் சரோஜா அமைத்தார்.

விரைவில் வெளிவர இருக்கும் இந்தப் படத்தில் ஜெமினி கணேசன், விஜயகுமாரி, பிரமீளா, எஸ். எஸ். சந்திரன், சங்கிலி முருகன், வெண்ணிற ஆடை மூர்த்தி, மாஸ்டர் மனோகர், பிந்து கோஷ் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

கதை திரைக்கதை, வசனத்தை எழுதி டைரக்ட் செய்கிறார் ராமநாராயணன், ஒளிப்பதிவை என். கே. விசுவநாதன் கவனிக்க இளையராஜா இசை அமைக்கிறார்.

(ம–10)



இந்திப் பட உலகில் காலடி எடுத்து வைத்ததுமே ஸ்ரீதேவியின் நாகரிகமும் உயர்ந்து விட்டதே! டென்னிஸ் விளையாட்டு உடலைக் கட்டோடு வைத்திருக்க உதவும் என்பது உண்மை தான்!

(ம–10)



ஊர்வசியின் மடி மெத்தை போல் மென்மையானதா என்று பரிசோதித்துப் பார்க்கிறாரோ விஜயசாரதி? "அனுக்கிரகம்" படத்தில் ஒரு கட்டம்.

(ம–10)

# ரசிகர்களிடம் சிக்கி சரிதா பரிதவிப்பு!

படப்பிடிப்பில் கலந்து கொண்ட நடிகை சரிதா ரசிகர்களிடம் சிக்கிப் பரிதவித்தார்.

பெங்களூரில் உள்ள குழந்தை ஏசு ஆலயம் பிரபலமானது. வியாழக்கிழமை தோறும் இங்கு நடைபெறும் ஆராதனையில் கலந்து கொள்ள பல ஆயிரம் பக்தர்கள் வருவார்கள்.

ஐ. ஜே. சி. புரொடக்சன்ஸ் தயாரிக்கும் குழந்தை ஏசு" என்ற படத்தின் சில காட்சிகள் இந்த ஆலயத்தில் நடந்தது.

இதில் கதாநாயகியாக நடிப்பவர் சரிதா. குழந்தை வரம் வேண்டி சரிதா உருக்கமாகப் பாடி நடிக்கும் காட்சி படமாகிய போது பக்தர்களுடன், ஏராளமான ரசிகர்களும் திரண்டனர்.

"செல்வமே தெய்வீக மலரே குழந்தை ஏசுவே மடி மீது விளையாட வா மலை இருள் நீக்கும் மாணிக்க விளக்கே..." என்ற பாடல் காட்சியில் சரிதா நடிக்கத் தொடங்கியதும் ரசிகர்கள் கூட்டம் அலைமோதியது. கூட்டத்தில் சிக்கித் தவித்தார், சரிதா.

இதனால் படப்பிடிப்பு ரத்துச் செய்யப்பட்டது. ரசிகர்களிடம் சிக்கிய சரிதாவை அங்கிருந்து அழைத்துச் செல்ல படாதபாடு பட்டனர் படப்பிடிப்புக் குழுவினர்.

சரிதாவின் கணவனாக ராஜேஷ் நடிக்கிறார். எம். ஆர். ஆர். வாசு, கவுண்டமணி, டைப்பிஸ்ட் கோபு, அம்ஜத்குமார், ஹாஜா ஷெரீப் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

ஷியாம் இசை அமைக்க, ஹேமச்சந்தர் ஒளிப்பதிவு செய்கிறார். மாரா வசனம் எழுத வி. ராஜன் கதை திரைக்கதை எழுதி டைரக்ட் செய்கிறார்.

(ம–10)

# "இளமை ஒரு இனிமை"

ஸ்ரீ ஒப்பிலியப்பன் கிரியேசன்ஸ் "இளமை ஒரு இனிமை" என்ற பெயரில் படம் தயாரிக்கிறது.

தேங்காய் சீனிவாசன், கவுண்டமணி, பி. ஆர். வரலட்சுமி மற்றும் புதுமுகங்கள் நடிக்கிறார்கள். சங்கர்–கணேஷ் இசை அமைக்க, டாக்டர் ஜெய்சுந்தர் கதை வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார்.

(ம–10)

# உஷ்... இது ரகசியம்

"... முடிச்சு" கதாநாயகி அடுத்து நடிக்கும் படத்தில் படப் பிடிப்பு. இந்த நடிகை "காமிரா" முன் நின்றதும் ஏதோ புதுப்பெண் போல கூச்சப்பட்டாராம். "எம்மா! உனக்கு என்னம்மா கூச்சம். நடிக்க வந்ததும் எல்லாம் தெளிந்து விடும் என்பது தெரியாதா? கூச்சப்படுவது போல் பட்டு காட்ட வேண்டாம்" என்று அந்தப் படத்தின் டைரக்டர் பிடித்து சொன்ன பின்பே நடித்தாராம். "இன்னும் நான் ஒரு சிறுசு" என்று சொல்லிக்கொள்கிறார் நடிகை.

★

[illegible] நடந்த ஒரு தமிழ் படப்பிடிப்பின் காட்சி சொல்ல வந்திருந்த அம்பிகை நடிகையின் பார்வையில் அந்த "மிஸ்" என்று வருகை தந்த இளம் கன்னட நடிகர் பரீஷ் என்பவர் பட்டாராம்.

அவ்வளவுதான் நடிகை வைப்போம் அந்த நடிகரை தொட்டு பிடித்து தமாஷாக விளையாட தொடங்கி விட்டாராம். நாலு பேர் கண் எதிரே நடந்த இந்த விளையாட்டை பார்த்து படப்பிடிப்பு குழுவினரே அசந்து விட்டனராம்.

★

[illegible] பிரபல [illegible] நடிகர் [illegible] நடிகை கிண்டல் செய்து பேசினாராம். இதை அறிந்து அந்த நடிகரின் உயர்ந்த உள்ளம் வேதனைப்படாமல் இருக்குமா? இதைக் கேள்விப்பட்ட நடிகை ஓடோடிச் சென்று நடிகரிடம் கண்ணீர் வடித்து மன்னிப்பு கேட்டதாகவும் கேள்வி!

(ஜ–10)



மரத்தின் விழுதைப் பற்றிக் கொண்டு தப்பி விட மோகன் முயற்சி செய்யும் போது அவரை விழுதுகள் போல் பற்றிக் கொண்டு விட்டார்களே இந்த அழகிகள்! "சரணாலயம்" படத்தின் இந்தக் காட்சி.

(ம–10)

# முருகன்–அம்மன் பேரருள் உணர்த்தும் இரு படங்கள்!

"யாமிருக்கப் பயமேன்" என்ற பெயரில் டி. எஸ். சேதுராமன், முருகனின் பக்திப் படம் ஒன்றை தயாரித்துக் கொண்டிருக்கிறார். கே. சங்கர் டைரக்ஷனில் வளரும் இந்தப் படம் தீபாவளி திருநாளில் திரைக்கு வருகிறது. இதன் கதை வசனம் ஆர். கே. சண்முகம்.

இத்துடன் ரேவதி கம்பைன்ஸ் சார்பாக டி. எஸ். சேதுராமன் "ஆயிரம் கண்ணுடையாள்" என்ற பக்தியுடன் கூடிய சமூகப் படம் ஒன்றையும் தயாரிக்கிறார்.

ஆயிரம் கண் படைத்த அம்மனின் சக்தியை விளக்கும் கதை இது. இந்தப் படத்தின் முழு படப்பிடிப்பும் மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து நாடுகளில் நடைபெறும். அங்கு உள்ள பிரசித்தி பெற்ற அம்மன் கோவில்களில் படப்பிடிப்பு நடக்கும். ஆயிரங்கண்ணுடையாளாக நடிக்கிறார். கே. ஆர் விஜயா.

சரிதா, விஜி, ராஜேஷ், தியாகராஜன், விஜயகுமார், தேங்காய் சீனிவாசன் மற்றும் பிரபல நடிகர்கள், நடிகைகள் நடிக்கிறார்கள்.

பேராசிரியர் ஏ. எல். பிரகாசம் கதை திரைக்கதை வசனம் எழுத எம். எஸ். விசுவநாதன் இசை அமைக்கிறார். டைரக்ஷன் கே. சங்கர், டி. டி. வி. ராஜாராம் ஒளிப்பதிவு செய்கிறார். தந்திரக் காட்சிகள் ஒளிப்பதிவு ரவிகாந்த்நிகாய்ச்.

இந்தப் படத்தை வருகிற ஜனவரி மாதம் தைப்பூச நல்நாளில் திரையிட திட்டமிட்டு உள்ளனர்.

(ம–10)

# "அபூர்வ சகோதரிகள்" பாடல் பம்பாயில் பதிவு

தேவர் பிலிம்ஸ் "அபூர்வ சகோதரிகள்" என்ற படத்தை தயாரிக்கிறது. இந்தப் படத்துக்காக பம்பாயில் 6 பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டன.

பிரபல இந்தி இசை அமைப்பாளர் பப்பி லஹரி இசை அமைக்கும் முதல் தமிழ்ப் படம் இது.

இந்தப் படத்தில் சுஹாசினி, ராதா, ஊர்வசி, கார்த்திக், ஜெய்சங்கர், சுரேஷ், விஜயகுமார், தேங்காய் சீனிவாசன், கே. ஆர் விஜயா நடிக்கிறார்கள். தூயவன் வசனம் எழுத வி. ராமமூர்த்தி ஒளிப்பதிவு செய்கிறார். டைரக்ஷன் ஆர். தியாகராஜன். சி. தண்டாயுதபாணி தயாரிக்க, எம். ஏ. மாரியப்பன் தயாரிப்பு மேற்பார்வை செய்கிறார்.

(ம–10)

## புதுமுகம் கதாநாயகி

எஸ். பி. சினி யூனிட் தயாரிக்கும் புதிய வண்ணப் படத்தை ஒளிப்பதிவு செய்து டைரக்ட் செய்கிறார் துர்கா பிரசாத்.

இதில் கதாநாயகியாக புதுமுகம் ஆர். டி. மகாலட்சுமி அறிமுகமாகிறார். ராஜபாளையத்தை அடுத்த தேவதானத்தில் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.

(ம–10)

# 'எல்லைக்கு அப்பால்' இளைஞர்களின் சாதனை!

ஆதிபராசக்தி ஆர்ட்ஸ் என்ற படக் கம்பெனியினர் "எல்லைக்கு அப்பால்" என்ற புதிய படத்தை தயாரிக்கின்றனர்.

இந்திய எல்லைக்கு அப்பால் வாழ்பவர்கள் படும் வேதனையை மையமாகக் கொண்டு இதன் கதை சித்திரிக்கப்பட்டுள்ளது. ஐந்து வீர இளைஞர்களின் சாகசச் செயல்கள் இதில் இடம்பெற இருக்கின்றன.

மிகுந்த பொருட் செலவில் இப்படம் நேபாளம், பூடான், காங்டாக், டார்ஜிலிங் முதலிய பனிமலை பிரதேசங்களிலும், புத்த ஆலயங்களிலும், ராணுவக் கூடாரங்களிலும் வளர இருக்கிறது.

விட்டல் படத்தொகுப்பையும், ஜூடோ ரத்தினம் சண்டைப் பயிற்சியையும் ரங்கா ஒளிப்பதிவையும், இளையராஜா இசையையும் கவனிக்கின்றனர்.

விரைவில் இதன் படப்பிடிப்பு தொடங்கும், இதை விமலா சந்திரசேகர், எம். பழனிவேல்தயன்டர் இருவரும் கூட்டாகத் தயாரிக்கின்றனர்.

கதை, திரைக்கதை, வசனம் எழுதும் ராஜசேகர் டைரக்ஷனில் படம் வளருகிறது.

(ஜ–10)

பலரசத் திரட்டு

# முத்தம் தந்த தொல்லை

பாகிஸ்தானில் டெலிவிஷன் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அதிர்ச்சியடைந்தார்கள், "ஐயையோ" என்று சிலர் அலறியும் விட்டார்கள்.

இந்தக் களேபரத்துக்குக் காரணம், டெலிவிஷனில் முத்தக் காட்சி ஒன்று இடம் பெற்றது தான்.

1964 ஆம் ஆண்டில் பாகிஸ்தானில் டெலிவிஷன் அறிமுகப் படுத்தப்பட்டது. அப்போது முதல் முத்தக் காட்சிகள் தடை செய்யப்பட்டு வந்தன. அவை இஸ்லாமிய பாரம்பரியத்துக்கு முரணானவை என்று காரணம் கூறப்பட்டது.

குறித்த தினத்தில் டெலிவிஷனில் காட்டப்பட்ட ஓர் அமெரிக்கப் படத்தில் தணிக்கையாளர்களின் கத்திரிக் கோலுக்கு அகப்படாமல் முத்தக் காட்சி ஒன்று எப்படியோ தப்பிக் கொண்டது.

அந்தக் காட்சி டெலிவிஷன் ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இப்படியொரு எதிர்பாராத காட்சி டெலிவிஷனில் இடம் பெற்றதற்காக டெலிவிஷன் நிலையத்தார் ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்.

அத்துடன் அந்தத் தவறுக்குக் காரணமானவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார்கள்.

பாகிஸ்தானில் டெலிவிஷனில்தான் முத்தக் காட்சிகள் இடம் பெறக் கூடாது. ஆனால் சினிமா தியேட்டர்களில் காட்டப்படும் திரைப்படங்களில் முத்தக் காட்சிகள் தடை இன்றி இடம் பெறலாம்.




அவன்: நான் உங்களை மனமார நேசிக்கிறன். உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை...?

அவள்: எனக்கு ஆட்சேபனை கிடையாது. ஆனால் எதுக்கும் என் கணவரை ஒரு வார்த்தை கேட்டுப் பாருங்களேன்......




பிச்சைக்காரன் 1: புனர்வாழ்வு நிதிக்காக நீ ஒன்றும் கொடுக்கலியா...?

பிச்சைக்காரன் 2: கொடுக்கிறேன். ஒரு நாள் முழுக்க உழைப்புக்குப் போகாம இருந்து என்ர உழைப்பை விட்டுக் கொடுக்கிறேன்...

## சிமெந்து 'ஸ்பிரிங்'குகள்



வீடுகள் பாலங்கள், அரங்குகள் போன்றவற்றைக் கட்டுவதற்கான சாதாரண சிமெந்தை சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கில கொத்தனார் ஒருவர் கண்டுபிடித்தார். இப்பொழுது உலகம் முழுவதும் கட்டுமான வேலைகளுக்கென ஒவ்வொரு ஆண்டும் 100 கோடி டொன்னுக்கும் அதிகமான சிமெந்து பயன்படுத்தப் படுகிறது.

அண்மையில் சிமெந்தின் தன்மை குறித்து ஆய்வு நடத்திய ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் டேவிட்டின் சாதாரண சிமெந்தில் குறைவான நீரும் ஒரு வகை பிளாஸ்டிக்கும் கலந்தால் அதை 10 மடங்கு வலு உடையதாகவும், வளையும் இயல்புடையதாகவும் தயாரிக்க முடியும் எனக் கண்டுபிடித்துள்ளார்.

இந்த சிமெந்தில் ஸ்பிரிங்குகளைக் கூட தயாரிக்க முடியுமாம். அத்தகைய ஸ்பிரிங்கு ஒன்றை டாக்டர் டேவிட் சோதிப்பதைப் படத்தில் காணலாம். இந்த பிளாஸ்டிக் சிமெந்தை பயன்படுத்தி மோட்டார் காரின் கூரை, உடல் பகுதி, கார் ஸ்பிரிங், ஜன்னல் தகடுகள், ஓடுகள் போன்றவற்றைத் தயாரிக்க முடியும். (ர)

## வெங்காயத்தின் மீது ஆணையாக...

பண்டைய எகிப்து நீதிமன்றங்களில் வழக்குகள் விசாரிக்கப்படும் போது வாதியும், பிரதிவாதியும் வெங்காயத்தின் மீது சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார்கள்.

எகிப்துதான் வெங்காயத்தின் தாயகம். உலகிலேயே முதன் முதலாக எகிப்து நாட்டு மக்கள் தான் வெங்காயத்தைப் பயன்படுத்தினர்.

மார்க்கெட்டில் வெங்காயம் வாங்கினால் வீடு திரும்பும் போது வந்த வழியே செல்லாமல் வேறு வழியாக வெளியேறுகிறார்கள் ஆங்கிலேயர்கள். வந்த வழியே திரும்பினால் உடல் நலம் கடுமையாகப் பாதிக்கும் என்று கருதுகிறார்கள்.

ஜாவா, சுமாத்ரா போன்ற தீவுகளில் வசிக்கும் மக்கள் இன்றும் கூட வெங்காயத்தை நோயாளிகள் படுத்திருக்கும் அறையில் நசுக்கிப் போட்டு வைக்கிறார்கள். இதனால் நச்சுக் கிருமிகள் அந்த அறையில் இருந்தால் அழித்து விட முடியும் என்று நம்புகிறார்கள்.

வெங்காயத்தில் கொழுப்புச் சத்து மிகமிகக் குறைவு. அதனால் உடல் பருமனைக் குறைத்துக் கொள்ள விரும்புவோர் உணவில் வெங்காயத்தை தாராளமாக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

நாடித் துடிப்பைச் சீராக வைத்து இருக்க உதவும் ஆற்றலும் வெங்காயத்துக்கு உண்டு. உஷ்ணம் அதிகரிக்கும் போது வெங்காயம் உடல் உஷ்ணத்தை சமனப்படுத்துகிறது. (ர)

## ஆண் குழந்தை பெற்றால் வரி

ஆண் குழந்தை பிறந்தால் 10 ரூபா வரி செலுத்த வேண்டும். பெண் குழந்தை என்றால் வரி இல்லை.

இந்தப் புதுமை வரி எங்கு அறவிடப்படுகிறது என்று கேட்கிறீர்களா? பாகிஸ்தானில்.

ஜாங் மாவட்டத்திலுள்ள பவானு பட்டினக் கமிட்டி இந்தப் புதுமையான வரியை அறவிடுகிறது.

இந்தப் பட்டின எல்லைக்குள் திருமணங்கள் நடைபெற்றால் "நிக்காஹ்" வரியாக 50 ரூபா செலுத்த வேண்டும். இந்த நிக்காஹ் வரி குறித்து உத்தியோக பூர்வ அறிவிப்பு அண்மையில் வெளியாகியது. (7)



## கடற்படையினரின் பயிற்சிக் கப்பல்

மேற்கு ஜெர்மனியில் கடற்படையினர் பயிற்சி பெறும் கப்பல்களில் இந்தப் பாய் மரக் கப்பலும் ஒன்று. 1958 ஆகஸ்ட் 23 ஆம் திகதி இந்தக் கப்பல் கடற்படையினரின் பயிற்சிச் சேவைக்கு விடப்பட்டது. இக்கப்பல் மொத்தம் 3 லட்சத்து 45,361 மைல் தூரம் பிரயாணம் செய்து இருக்கிறது. 195 துறைமுகங்களில் தரித்து நின்று உள்ளது. (ர)

## நீதிமன்றம் வந்த கழுதைகள்

பாகிஸ்தானில் கராச்சி நகரில் கட்டவிழ்த்து விடப்பட்ட கழுதைகள் கூட்டம் மக்களுக்குப் பெரும் தொல்லை கொடுத்து வருகின்றனவாம்.

மிருகங்கள் கட்டவிழ்த்து விடப்படுவது பாகிஸ்தானில் சட்ட விரோதமாகும்.

கடந்த வாரம் கராச்சியில் இவ்வாறு அங்கும் இங்கும் திரிந்து தொல்லை கொடுத்த நூறு கழுதைகளை கராச்சிப் பொலீஸார் பிடித்தனர்.

இவ்வாறு பிடிக்கப்பட்ட 100 கழுதைகளும் கராச்சி நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. கழுதைகளின் பொருட்டு வாதாட ஒரு சட்டத்தரணியே இல்லை. அந் நிலையில் அதே நீதிமன்றத்தின் குமாஸ்தா ஒருவர் அந்தக் கழுதைகளை விட்டு விடும் படியும் அவற்றுக்குத் தண்டனை வழங்க வேண்டாம் என்றும் ஒரு மனுவைத் தாக்கல் செய்தார்.

அதன் பேரில் அந்தக் கழுதைகள் யாவும் விடுதலை செய்யப்பட்டு நகரில் இருந்து அப்புறப் படுத்தப்பட்டன.



வெயிட்டர்களே இல்லாத ஹோட்டல்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. வாடிக்கையாளர்கள் தாங்களே சென்று தமக்குத் தேவையான உணவு வகைகளை எடுத்து வர வேண்டியதில்லை.

சாப்பாட்டு மேசையில் உள்ள பொத்தானை அழுத்தினால் போதும். அவசியமான உணவு வகைகளும், அவற்றுக்கான பில்லும் அந்த இடத்துக்கே வந்து சேர்ந்து விடும்.

இவ்வாறான சொகுசான ஹோட்டல் சேவை எங்குள்ளது என்று ஏங்குகிறீர்களா?

ஜப்பானில் தான் இத்தகைய ஹோட்டல்கள் இருக்கின்றன.

ஜப்பானிய விஞ்ஞானிகள் "உணவுத் தாங்கி" என்னும் ஓர் எலக்ரோனிக் கருவியை புதிதாக கண்டுபிடித்துள்ளனர்.

மேற்படி கருவியை சாப்பாட்டு மேசையில் பொருத்தி விடுகிறார்கள். அக்கருவியில் உள்ள பொத்தானை அழுத்தினால் உரிய உணவுப் பண்டங்கள் மேசைக்கே வந்திடுமாம். அந் நாட்டு ஹோட்டல்களுக்கு வெயிட்டர்மாரே தேவையில்லை. எல்லாம் இயந்திரமே செய்து விடும்.

இந்த நவீன கருவி இலங்கையிலும் அறிமுகமானால் இங்குள்ள ஹோட்டல் மனேஜர்களுக்கு இலகுவானதாகவும் அதிக தொழிலாளர் இன்றி ஹோட்டலை நடத்த வசதியாகவும் இருக்கும் அல்லவா? (ர—11)







சிநேகிதி: எங்க அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஞாபக சக்தியே இல்லாமப் போச்சுதடி...

மற்றவள்: ஏண்டி...?

சிநேகிதி: பின்ன என்ன! நானிருந்தி கல்யாண வயசில வீட்டுக்குள்ளேயே இருக்கிறன் என்ட ஞாபகமே இல்லாம இருக்கிறாங்க...

கணவன்: சினிமா பார்த்திட்டு வந்தேன்னு சொல்றியே, போகும் போது என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போகப்படாதா...?

மனைவி: நான் வெளிக்கிட்டுப் போகும் போது நீங்க வீட்டிலேயா இருந்தீங்க நான் சொல்லிட்டுப் போறதுக்கு...?

## மின்னல் தாக்குதலில் விநோதம்

மின்னலின் தாக்குதல்கள் பல விதங்களில் இருக்கும். அது சில சமயங்களில் ஒருவனுக்கு எந்த விதமான பயங்கரத் தாக்குதலையும் செய்யாமல், அவன் ஆடைகளை மாத்திரம் அப்புறப்படுத்தி விடும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். (ர)

## ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள்



ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் பெரும்பாலும் அதிக நாட்கள் உயிர்வாழ மாட்டா என்பார்கள். ஆனால் இவ்வாறு ஒட்டிப் பிறந்த இருவர் சுமார் 34 வருடங்களாக உயிர் வாழ்கிறார்கள் என்றால் ஆச்சரியமாயிருக்கிறதா?

ஆம்! உண்மையிலே இவ்வாறான இரு ஜீவன்கள் இன்றும் உயிர் வாழ்கின்றன என்று அரபு நாட்டுப் பத்திரிகை ஒன்று அறிவிக்கிறது.

1949 ஆம் ஆண்டு பிறந்த யாகூத், பாபிஸ் ஜோன்ஸ் என்ற பெயருடைய இந்த இரு குழந்தைகளினதும் தலைகள் பிறக்கும் போதே ஒன்றோடொன்று ஒட்டி இருந்தன.

இவர்களுடைய இரத்தவோட்ட நரம்புகளும் இணைந்திருப்பதால் வெவ்வேறாக பிரிப்பது கஷ்டமாக இருக்கிறதாம்.

நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புகள், சத்திரசிகிச்சைகள் போன்றவற்றின் மூலம் இவ்வாறான இணைப்பு பிரிக்க முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருந்த போதிலும் இவர்களது பிணைப்பை பிரிக்க முடியாத நிலையில் உள்ளது என வைத்திய நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

இதனால் இணைந்த நிலையிலேயே இவர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் இருவரும் இவ்வாறு இணைந்தவாறே அதிக காலம் வாழ்வார்கள் எனவும் டாக்டர்கள் உறுதியாகக் கூறுகிறார்கள்.

அதேவேளை இரத்த ஓட்ட நரம்புகள் ஒன்றோடொன்று இணைந்திருப்பதால் அவர்களில் ஒருவர் இறக்கும் போதே மற்றவரும் மரணித்து விடுவார் என்றும் பிரஸ்தாப டாக்டர்கள் தகவல் தருகிறார்கள்.

ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளான இவர்கள் ஒன்றாகவே இறப்பது பற்றி கவலைப்பட மாட்டார்கள் அல்லவா?

ஒட்டிப் பிறந்து ஒய்யாரமாக வாழும் அந்த அதிசய மனிதர்களைத்தான் மேலுள்ள படத்தில் காண்கிறீர்கள். (ர—11)

## நூற்றாண்டு கால தீப்பெட்டிகள்





இங்கு காணப்படும் விநோதமான பொருள்கள் எவை என்று உங்களுக்கு விளங்குகிறதா? இவை அனைத்தும் தீப்பெட்டிகளாகும்.

1820-ஆம் ஆண்டில்தான் தீக்குச்சி முதன் முதலில் கண்டு பிடிக்கப்பட்டது. கண்டு பிடிக்கப்பட்ட போது அது எளிதில் தீப் பிடிக்கும் தன்மை கொண்டதாக இருந்தது.

எனவே தீக்குச்சிகளை மிகவும் ஜாக்கிரதையாக எடுத்துச் செல்வதற்காக பாதுகாப்பான கலசங்கள் தேவைப்பட்டன. அவ்வாறு பாதுகாப்புக்காகத் தயாரிக்கப்பட்ட பெட்டிகளும், டப்பாக்களுமே இவை.

இவை பிளாஸ்டிக், மரம், பித்தளை, வெள்ளி ஆமையின் மேல் ஓடு ஆகியவற்றால் ஆனவையாகும். (ர-10)







## நான்கு கண் மீன்

ஆபிரிக்காவில் "நான்கு கண் மீன்" என்று ஒரு மீன் இனம் இருக்கிறது. உண்மையில் அதற்கு நான்கு கண்கள் கிடையாது. வால் பக்கம், பக்கத்திற்கு ஒவ்வொரு கண் போன்ற அமைப்பில் இரண்டு புள்ளிகள் இருக்கின்றன.

அவை உண்மையான கண்களை விடப் பெரியவையாக இருக்கும். அந்த மீனின் எதிரிகள், மீனின் பின் பக்கம் தான் என்று எண்ணி அதைப் பிடிக்க வரும். அப்போது அந்த மீன் எதிரிகளைக் கண்டு கொண்டு எளிதாகத் தப்பிப் போய் விடும். (ர)




வந்தவள்: காலையில எட்டு மணிக்கு வந்தனான், ஒரு மணியாச்சு. அடுத்த வீட்டுக்காறி [illegible] பற்றிய மிச்சக் கதையை நாளைக்கு வந்து சொல்லுறன்...

## சின்னஞ்சிறிய கார்



ஜப்பானில் இப்பொழுது 50 சி. சி. இயந்திரம் பொருத்தப்பட்ட மைக்ரோ கார்கள் அறிமுகமாகி இருக்கின்றன.

மைக்ரோ கார் சி. வி. 1. என்ற பெயரில் அழைக்கப்படும் இந்தக் கார்களை சுசுகி மோட்டார் கம்பெனி தயாரித்துள்ளது.

அடுத்த ஆண்டு அல்லது இன்னும் இரண்டு ஆண்டுகளில் இந்த கார் விற்பனைக்கு வர விருக்கிறது.

நான்கு சக்கரங்களைக் கொண்ட இந்த கார் 3 லட்சம் யென் விலைக்குக் கிடைக்கும். (1,200 அமெரிக்க டாலர்.)

ஆனால், இந்தக் கார்களை சாலையில் ஓட்டுவதற்கு அரசாங்கத்தின் அனுமதி கிடைக்கும் சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை.

இதனைப் பாடசாலைத் திடல்கள் தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் பயன்படுத்தலாம். இதற்கு லைசென்ஸ் தேவையில்லை.

இதன் மேல் தோற்றம் பிளாஸ்டிக்கினால் உருவாக்கப்பட்டுள்ளது.

மணிக்கு 30 கிலோ மீட்டர் வேகத்தில் பயணம் செய்யக் கூடிய இந்த மைக்ரோ சி வி 1 காரில் ஒரு லிட்டர் பெற்றோலுக்கு 50 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்யலாம். (அதாவது ஒரு கலன் எண்ணெய்க்கு 200 கிலோ மீட்டர்.) இந்தக் காரின் வலது பக்கம் உள்ள கதவு வழி உள்ளே அமரலாம்.

# ஆசி. மணவாளருக்கு ஆசிய மணப் பெண்கள்!

அமெரிக்கா, கனடா, ஐரோப்பா போன்ற நாடுகளில் நட்புக்கும் திருமணத்துக்கும் ஏற்ற நங்கையர்களாக பிலிப்பைன் பெண்கள் திகழ்கிறார்கள்.

இவர்கள் எப்பொழுதும் வசீகரமானவர்கள், வாடமாட்டார்கள்.

இவர்களை நாங்கள் உங்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் பெருமைப்படுகிறோம். இவர்கள் உங்களுடன் ஒத்துழைப்பர் என்பதற்கு உறுதி கூறுகிறோம்.

"இந்த அழகு இளம் நங்கையர் உங்களது வாழ்வில் வசீகரத்தை ஏற்படுத்துவர். உங்களது வாழ்வின் அனுகுமுறையும் புரிந்துணர்வும் இயல்பானதாக இருக்கும்.

ஆகவே நீங்கள் இன்னொரு நிமிடம் தாமதிக்காமல் உடனே தொடர்பு கொள்ளுங்கள்."

இப்படி வாசகங்களுடன் கலிபோர்னியாவில் இருந்து யாருக்கு கடிதங்கள் அனுப்பப்படுகின்றன?

பீட்டா ரோஸ் அண்ட் அசோசியேட்ஸ் ஆப் மவுண்டன் வீவ், கலிபோர்னியா என்னும் முகவரி கொண்ட ஒரு நிறுவனம் ஆசியப் பெண்களை ஆஸ்திரேலியர்களுக்கும் மேலை நாட்

— நந்தினி —

டவர்களுக்கும் திருமணம் செய்து கொடுக்கும் தரகர் நிலையமாக செயல்படுகிறது.

பிலிப்பைனில் இருந்து இதுவரை 29 ஆயிரம் பெண்கள் மேலைநாடுகளில் வாழ்க்கைப்பட்டு விட்டனர். இவர்களது எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

ஸ்பெயினை அடுத்து அமெரிக்க நாட்டின் காலனியாக சுமார் 450 ஆண்டுகளாக இருந்து வந்த பிலிப்பைனில், ஆண்களைக்காட்டிலும் பெண்களின் எண்ணிக்கை கூடுதலாகும்.

அதே நேரத்தில் ஆஸ்திரேலியாவில் பெண்களைவிட ஆண்களின் எண்ணிக்கை கூடுதலாக இருக்கிறது.

இந்த நிலையில் ஆஸ்திரேலியாவில் இருந்து பிலிப்பைனுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு அடிக்கடி பல குழுக்கள் வருகின்றன.

இக் குழுக்களில் இடம் பெறும் மாப்பிள்ளைகளுக்கு பிலிப்பைன் பெண்களிடம் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்று விளக்கப்படுகிறது.

முன்னாள் தொலைக்காட்சி படத் தயாரிப்பாளர் போப் ஹில் என்பவர் ஆசியப் பெண்கள் பலருடன் பேட்டி கண்ட வீடியோ டேப்புகளை ஆஸ்திரேலிய மாப்பிள்ளைகளுக்குப் போட்டுக் காட்டுகிறார்.

இந்த வகையில் ஒருவருக்கு ஒரு பெண்ணைப் பிடித்துவிடும் என்றால் அவருக்கு அந்த பெண்ணை அறிமுகப்படுத்துவதற்கு திரு. போப் ஹில் ஏற்பாடு செய்கிறார்.

மணப் பெண்கள் விற்பனை ஆஸ்திரேலியாவைப் பொறுத்தவரை இப்பொழுது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

ஆசிய நாட்டுப் பெண்கள் ஆஸ்திரேலியாவில் குடும்பம் நடத்த வருவது ஒரு தொழிலாகி விட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டோரஸ் கேமரோன் கூறியிருக்கிறார்.

அழகிய பிலிப்பைன் பெண்கள் என்ற தலைப்பில் ஒரு விளம்பரம்.

மலேசியா, இந்தோனேசியா, சிங்கப்பூரில் இருந்தும் பல பெண்கள் மேலை நாடுகளில் வாழ்க்கைப்பட அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

மேலை நாடுகளில் ஆசியப் பெண்கள் அழகானவர்கள், அடக்கமானவர்கள் என்பதாக ஒரு நம்பிக்கை நிலவுகிறது.

இந்தக் கலப்புத் திருமணங்களில் பல தோல்வி கண்டாலும் அரிதாக சில வெற்றி பெறுவதாகவும் கூறப்படுகிறது. (ஐ)

# இனக்கவர்ச்சி மட்டுமே இனிய இல்லறம் அன்று

திருமணம் என்பது வாழ்க்கையின் இறுதிப் புள்ளி அல்ல; அதுவே வாழ்வின் ஆரம்பம். வாழ்வின் பெரும் பகுதி திருமணத்திற்குப் பின்புதான் ஆரம்பமாகிறது என்பதை மறந்து விடக் கூடாது.

நம் வாழ்வு திருமணத்திற்குப் பின்பு இன்பகரமாய் இருக்க முடியும் என்று எப்படி உறுதியாகச் சொல்ல முடியும்? இன்பமான இல்வாழ்வு நடத்த முடியும் என்ற எண்ணத்துடன் திருமணம் செய்து கொண்டவர்களில் பலர், சில ஆண்டுகளுக்குள்ளாகவே "கணவன் மனைவி உறவில்" கசப்பு ஏற்பட்டு மனம் புழுங்குவதைப் பார்க்கிறோமல்லவா?

இதற்கு அடிப்படைக் காரணம் அவர்கள் "திருமணம் என்றால் என்ன?" என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாமல் இருப்பதே. இன்பமான இல்வாழ்விற்கு அடிப்படையாகத் திகழ்வது காதல். ஆண் பெண் இருவர்களுக்கிடையே எப்படியோ "காதல்" என்பது தோன்றினால் போதும்; பின்பு திருமணம் என்பது நிச்சயமான பொருளாக மாறிவிடும் என்று மக்கள் எண்ணுகிறார்கள். இது மிகவும் தவறான கருத்து.

இயற்கையாகவே ஏற்படும் "இனக் கவர்ச்சி" காரணமாகக் காதல் தோன்றுகிறது. ஆண், பெண்ணின் உடல் அழகையும் பெண் ஆணின் உடல் அழகையும் கண்டு கவர்ச்சியுற்று ஒருவரை ஒருவர் காதலிப்பது. இது இல்வாழ்விற்கு இன்றியமையாத ஒன்று. ஆனால் இருவர் பாலும் இந்த இனக் கவர்ச்சி நீடித்து நிற்குமென உறுதியாகக் கூற இயலாது.

ஏனெனில் இனக் கவர்ச்சி ஒன்று மட்டுமே மணவாழ்வை மகிழ்ச்சியுள்ளதாக்கி விட முடியாது.

கணவன் - மனைவிக்கிடையே உள்ள சில விருப்பு வெறுப்புகளில், எண்ணங்களில் மாறுபாடுகள் தோன்றலாம். ஆனால் அதைப் பற்றி அக்கறையில்லை.

இருவர்களுக்கிடையே மாறுபாடான கருத்துக்கள் எழும்போது யாரேனும் ஒருவரிடையே விட்டுக் கொடுக்கும் பண்பு தோன்ற வேண்டும்.

திருமணமாகு முன் தம்பதிகளிடையே இரண்டு முக்கிய கருத்துக்களில் மாறுபாடு தோன்றுகிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். (1) குழந்தைகள் வேண்டுமா வேண்டாமா என்பது. பொதுவாகத் திருமணம் செய்து கொண்டவர்கள் யாவரும் குழந்தைகளை விரும்புவார்கள். (2) இருவரும் வாழ்வில் அடைய விரும்பும் குறிக்கோள் என்ன? அதற்கு இருவரும் மதிப்புக் கொடுகிறார்கள்? என்பதில் மாறுபாடான கருத்துக்கள் தோன்றக் கூடாது.

மனைவி கணவனுடைய வாழ்வைச் சிறப்புறச் செய்வதில் மகிழ்ச்சி அடைவதும்; கணவன், மனைவியின் வாழ்வை மகிழ்ச்சி உள்ளதாக்குவதில் பெருமைப்படுவதுமே தன்னலமற்ற சேவையாகும்.

ஆகவே உங்களுடைய இல்வாழ்வு இன்பகரமாக இருக்க வேண்டும் என்றால் தன்னலமற்ற சேவையில் கணவன் - மனைவி இருவருமே ஒன்றிணைந்து ஈடுபட வேண்டும். (ந)

## காரிகையரைப் பற்றி காண்டேகர் கூறுவது என்ன?

— ஜோதி —

★ பொய் சொல்லுவதில் யார் வல்லவர் என்று ஒரு பந்தயம் நடத்தினால் பெண்களுக்குத்தான் அதில் முதல் பரிசு கிடைக்கும்.

★ இளம் பெண்ணின் முதல் ஸ்பரிசத்தில் அமுதம் இருக்கிறது என்று கூறும் கவிகள் பைத்தியக்காரர்கள். அந்த ஸ்பரிசத்தில் கொடுமையான விஷம் இருக்கிறது.

★ பெண்ணின் தலையில் எழுதியிருப்பது என்ன? சிறு வயதில் பொம்மை விளையாட்டு, பிறகு திருமண அட்சதை — அதற்கு அப்புறம் அடுப்பங் கரையும் குழந்தையும்!

★ பெண்கள் பேரீச்சம் பழத்தைப் போன்றவர்கள். கொஞ்சம் கொஞ்சமாகச் சுவைக்க வேண்டும். நறுக்கென்று கடித்தால், கொட்டை பல்லை உடைத்து விடும்.

★ பெண்ணின் இரண்டு சொட்டுக் கண்ணீர், நூறு சொற்பொழிவை விட வலியது.

## தையல் அலங்காரம்



## முகத்துக்கேற்ற முடி அலங்காரம்

தலை முடியைப் பாதுகாப்பது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் தங்களது முகத் தோற்றத்துக்கு ஏற்ப கூந்தலை அழகு படுத்துவது.

பத்தாண்டுகளுக்கு முன் சீனப்பெண்கள் தங்கள் கூந்தலை மிக நீளமாக வளர்த்து சடை பின்னிக் கொண்டிருந்தனர். அது இப்போது கிட்டத்தட்ட அடியோடு மாறிவிட்டது.

மலேசிய இந்தியப் பெண்களைப் பொறுத்த வரை பெரும் பாலோர் முடியை நீளமாக வளர்க்கின்றனர் பின்னல் போடுகின்றனர் அல்லது கொண்டை போடுகின்றனர்.

இளவட்டப் பெண்களுக்கு இரட்டை சடை மீது இருந்த மோகம் இன்று இல்லை.

அந்த அழகு பள்ளிச் சிறுமிகளிடையே மட்டுமே காண முடிகிறது.

ஒற்றைப் பின்னலிட்டு முதுகந்தண்டு மறையவிட்டுக் கொள்வது அவர்கள் பால் ஆண்களின் கூர்மையான பார்வையைத் தவிர்க்கும் என்பது ஒரு மூட நம்பிக்கை.

கொண்டை போட்டுக் கொள்வதும் முடியை வெட்டி "பாப்" செய்து கொள்வதும் ஏறக்குறைய ஒரே மாதிரியான தலை அலங்காரமாகவே தெரிகிறது.

எந்தவித கூந்தல் அலங்கார முறைக்கும், முடி வெட்டப்பட்டுள்ள விதம் முக்கியமானது;

திறமையான முடி திருத்துபவரைக் கொண்டு தலைமயிரை வெட்டுங்கள். புதிதாக ஒரு அலங்கார முறையை கடைப்பிடிக்க முற்படுகையில் முடியை வெட்டுவதில் முக்கிய கவனம் செலுத்துங்கள்.

உங்கள் முகத்தின் எப்பகுதி தெளிவாகத் தெரிய வேண்டுமோ, அதனைத் தெளிவாகக் காண்பிக்கவும், எப்பகுதி அதிகம் காண்பிக்கப்படக் கூடாதோ அதனை மறைக்கவும் கேசம் உதவும்.

வட்ட முகம் நீளமாகத் தெரிவதற்கும், சதுர முகம் வட்டமாகத் தெரிவதற்கும், கோணல் மாணலான பகுதிகள் நேர்த்தியாகத் தெரிவதற்கும் உதவக் கூடியது நீங்கள் தெரிவு செய்யும் தலை அலங்காரமே.

உங்கள் தலை அலங்காரத்தைத் தெரிவு செய்வதற்கு நீங்கள் கவனிக்க வேண்டிய வழிமுறைகள் சில உண்டு.

உங்கள் கேசத்தை முழுதாகப் பின்புறமாக வாரி விட்டு உங்கள் முழு அமைப்பைக் கவனித்துப் பாருங்கள். அதன் பின்னர் உங்கள் முக அமைப்புக்கு ஏற்றதான தலை அலங்காரம் பற்றி முடிவு செய்யலாம்.

### நீள்வட்ட அல்லது நீள்முகம்

நீள்வட்ட முகத்திற்கு எல்லா தலை அலங்காரங்களும் பொருந்தும். இவர்களுக்கு நெற்றி உயரமாக அல்லது நாடி நீளமாக இருப்பின் கன்னங்களையும், நாடியையும் சுற்றி மயிர் தளரவிடப் படுவது வனப்பைத் தரும்.

சுருளான கேசத்தை நாடி மட்டத்திற்கு விழவிடாமல், அல்லது நடு உச்சி எடுத்து இரண்டு பாகமாக கேசத்தை இருபுறமும் விழச் செய்யலாம்.

### இருதய உருவிலான முகம்

மேற்புறமாகச் சீவப்பட்டு நெற்றிக்கு மேலாக உயரமாகக் கேசத்தை அழகுபடுத்தினால் இத்தகைய உருவம் முகத்துக்குப் பொருத்தமாக இருக்கும்.

காதுகளுக்குப் பின் புறமாகக் கேசத்தை ஒதுக்கி விடுவது முகத்தின் தோற்றத்தை எடுப்பாக்கும். தலையின் மேற்புறத்தில் இருந்து அல்லது நடு வகிட்டில் இருந்து இரு பக்கமாக கேசத்தை விழவிடுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

### சதுரமான முகம்

இந்த முகத்திற்கு பக்கவாட்டில் கேசம் தெரிவது வனப்பூட்டும். சதுர முகத்தை ஒடுக்கிக் காண்பிக்க இது உதவும். நீளமான தலைமயிர் சதுர முகத்திற்கு அழகூட்டும். சிறிது சுருள்களாக அல்லது அலை அலையாக கேசத்தை முகத்தின் மேல் விழக் கூடியதாக அலங்காரம் செய்யலாம்.

காதுகளுக்குப் பின்புறமாக இறுகி வாரி விடுவதை அல்லது முகத்தை மறைக்காது வாருவதைத் தவிர்க்கவும்.

நாடிப் பகுதியை மேலும் கூராகக் காண்பிக்கும் அலங்கார முறைகளைத் தவிர்ப்பது அவசியம்.

### வட்ட முகம்

தலையின் மேற்புறம் சற்று உயரமாகத் தெரியும்படி ஒரு அலங்கார முறையைத் தெரிவு செய்யவும்.

தலைக்கு மேலாக மயிர் உயர்ந்திருப்பின் உங்கள் முகம் சிறிது நீளமாகத் தெரியும். கேசம் இரண்டு பக்கங்களிலும் தொங்கிக் கொண்டிருந்தால் அல்லது முகத்தைச் சுற்றி 3 பக்கங்களிலும் விளிம்பு போல் கேசத்தை தளர விடுவது வட்டமுகம் உள்ளவர்களுக்கு வனப்பைத் தரும்.

காதுகளை மூடி கேசத்தை தளரவிட்டால் அதுவும் முகத்தை மெலிந்ததாக காண்பிக்கும். கட்டையான மயிரை வெட்டி விடுவதாயின் காதுகளின் அரை வாசிக்குக் கேசம் இருக்கும்படியாக வெட்டினாலும் அழகாக இருக்கும். (ந)

## ரயில் ஓட்டும் பெண்!

பெண்களும் இப்போது ரயில் ஓட்டத் தொடங்கி விட்டார்கள்.

ரயில்வேயின் 175 வருட கால வரலாற்றில் ஒரு பெண்மணி முதல் தடவையாக அண்மையில் பிரிட்டிஷ் ரயில் ஒன்றை ஓட்டினார்.

அனு வின்டர் என்பது இந்தப் பெண்ணின் பெயர். 23 வயது.

3 வருட காலப் பயிற்சிக்குப் பின் தராதரமுடைய ரயில் சாரதியாக இவர் வெளியேறினார்.

முன்னாள் மிருக வைத்திய தாதியான அனு, "ஒரு நாள் ரயில்கள் மேலும், கீழும் ஓடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். என்னால் இந்தக் காரியத்தைச் செய்ய முடியாதா என்று அப்போது எண்ணினேன். அதன் விளைவு இப்போது ஒரு சாரதியாகி விட்டேன்" என்றார். (ஐ)

## நவீன ஆடைகளில் மலேஷிய மாதர்!



## தொப்பை விழுவதைத் தடுக்க சுலபமான வழி

ஆண்களைப் போலவே பெண்களில் சிலருக்கும் தொப்பை உண்டாகிறது. பெரும்பாலும் இது பிரசவமான பெண்களுக்குத்தான் அதிகம் காணப்படுகிறது.

குழந்தை பெற்ற பெண்ணுக்கு பிரசவம் முடிந்தவுடனேயே அடி வயிற்றில் துணி



தால்தான் தொப்பை விழுகிறது என்று சில பாட்டிமார்கள் அச்சுறுத்துகிறார்கள்.

இவ்வாறு சொல்வது சரியானதா? என்று மருத்துவ நிபுணரிடம் கேட்ட போது அவர் சொல்கிறார்:

"கர்ப்பிணியாக இருக்கும் போது வளருகின்ற கருவைத் தாங்க அடி வயிற்றிலுள்ள தசைகளும் விரிந்து இடம் கொடுக்கின்றன.

குழந்தை பிறந்தவுடனேயே அத் தசைகள் பழைய கெட்டு குறைந்து தளர்வுற்று விடுவதால் தொப்பை போடலாம்.

அதனை அடிவயிற்றில் துணி கொண்டு இறுக்கிக் கட்டுவதால் மட்டும் தவிர்த்துவிட முடியாது. அவ்வாறு கட்டுவது கெடுதியேயன்றி நன்மை எதுவும் பயப்பதில்லை.

பிரசவித்த பெண் எவ்வளவுக்கெவ்வளவு விரைவாக எழுந்து நடமாடி தனது தினசரி வீட்டு வேலைகளில் ஈடுபடுகின்றார்களோ அவ்வளவுக்கு அவள் தசைகள் வலுவடையும்.

வயிற்றைப் போதுமான அளவு சுருங்கச் செய்வதற்கு சில எளிய உடற் பயிற்சிகள் உள்ளன.

குழந்தை பிறந்த மூன்றும் நாளிலிருந்து தினமும் உடற் பயிற்சி செய்வதுதான் தொப்பையைக் குறைக்கும் ஒரே வழி.

மேல் நோக்கிப் பார்த்தபடி படுக்கையில் சமமாகப் படுத்துக் கொள்ள வேண்டும். படத்தில் (1) காட்டியபடி தலையைச் சற்றே தூக்கி, இடது முழங்



காலை மடித்து, முகத்தைத் தொடும்படி கொண்டு வர வேண்டும். இப்படியே மூன்று அல்லது நான்கு விநாடிகள் வைத்திருந்தபடி காலை பழைய நிலைக்குக் கொண்டு வரவேண்டும்.

இப்போது வலது காலை (2) மடக்கி முகத்தைத் தொடும்படி கொண்டு வரவேண்டும். சில விநாடிகள் அப்படியே இருக்க விட்டு விட்டு பின் பழைய நிலைக்குக் கொண்டு வரவேண்டும். சில விநாடிகள் அப்படியே விட்டு விட்டுப் பின் பழைய நிலைக்குக் கொண்டு வர வேண்டும்.



அடுத்து (3) இரண்டு கால்களையும் ஒரே சமயத்தில் மடக்கி முகம் நோக்கிக் கொண்டு வர வேண்டும். கையை உடலோடு சேர்த்து வைத்து எவ்வித அசைவும் கொடுக்கலாகாது.

இப்பயிற்சி தளர்வுற்ற வயிற்றின் பாகத்தை இறுகச் செய்து தொப்பையைக் குறைக்கிறது. முதலில் ஐந்து தடவைகள் செய்து பின்னர் நாள்தோறும் அதிகமாக்கிக் கொண்டே போக வேண்டும்.

இப்படிக் கூறுகிறார் அந்த மருத்துவ நிபுணர். (ஐ)

## மனைவிக்கு ஆபத்து

புகை பிடிப்பவர்கள் வெளிவிடும் புகையை சுவாசிப்பதால் ஏனையோரின் உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

அமெரிக்க ஆய்வு ஒன்று இவ்வாறு அச்சுறுத்துகிறது.

குறிப்பாக புகைப்பவர்களின் மனைவியர்களே நுரையீரல் புற்று நோயால் பாதிக்கப்படும் அபாயம் ஏற்படும் என்றும் மேற்படி ஆய்வில் தெளிவாகப் புலப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே பெண்கள் தமது கணவன்மாரின் புகை பிடிக்கும் பழக்கத்தை நிறுத்த முழு முயற்சி எடுக்க வேண்டும். இல்லையேல் புகை பிடிக்கும் கணவனிடமிருந்து மனைவி விலகி இருக்க வேண்டும். (ஐ)

# மாதர் மஞ்சரி

தயாரிப்பு: சுந்தரி


## "மந்திரயோகி" வசிய, மாந்திரீக, வைத்தியம்

அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம் C433

அன்பர்களே! சூனியம், வசியமருந்திடு, பேய் பிசாசுக் கோளாறுகள், கண்ணூறு, நாவூறு, ஆண் பெண் இரகசிய பாலியல் நோய்கள், தடைப்பட்ட மாதவிடாய்க் கோளாறுகள், தீராத நோய்கள், பிரச்சினைகளை அனுமான் அஞ்சன மை வெளிச்ச மூலமாகவும், மாந்திரீகக் குறி மூலமாகவும் அறிந்து, மருந்து, அக்குப்பஞ்சர் ஹிப்நாட்டிச மனோவசிய யோக சிகிச்சை மூலமாகவும், தெய்வத் துணை கொண்டு மாந்திரீக சக்தியினாலும் தீர்த்துக்கொள்ள, குடியை மறக்க, எதிரியை அடக்க, விரும்பியவர்களை வசியமாக்க, பரீட்சையில் சித்தியடைய, நேர்முகப் பரீட்சையில் ஈடுபட, தொழில் கிடைக்க, வியாபார விருத்தி அடைய, சனிப் அதிர்ஷ்டம் கிடைக்க, வழக்கு வெல்ல, வீடு, வளவு, உடலைக் காவல்பண்ண, மட்டக்களப்பு நான்காவது பரம்பரை வைத்தியர், மலையாளத்திலேயும், மாந்திரீக சித்தர் என அழைக்கப்படும், மாந்திரீகக் கலாநிதி சித்த மருத்துவ பண்டிட் மனோதத்துவ டாக்டர் "மந்திரயோகி" M.B.B.S. (H) S.M.P. (இந்தியா) D.Ac (இலங்கை)யுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ஆண், பெண் (காதலன் - காதலி) வசியம்:— நீங்கள் விரும்பும் பெண் அல்லது ஆணை வசியமாக்கி எல்லோருடைய சம்மதத்துடனும் திருமணம் செய்ய முதல் கடிதத்திலேயே முழு விபரமும் இருவரின் பெயர்களும், தெரிந்தால் தாய் தந்தையர்களின் பெயர்களும், ஏமாற்ற மாட்டேன் சத்தியமாகத் திருமணம் செய்வேன் என்றும், பெண்ணைக் காப்பாற்றும் தகுதி அறிய தொழில் வருவாய் பற்றிய விபரமும் எழுத வேண்டும். நேரில் வர முடியாதவர்களுக்கு மருந்து மந்திரிப்பு செய்து பார்சலில் அனுப்பப்படும். 3 ரூபா 50 சத முத்திரையும் 50 சத முத்திரை ஒட்டிய கவரும் அனுப்புபவர்களின் விடயங்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும். 10 ரூபாவிற்கு மணியோடர் அனுப்புபவர்களின் விடயங்கள் உடன் கவனிக்கப்படும்.



டாக்டர் "மந்திரயோகி"

இந்தியன் வைத்தியசாலை

கல்லடி மட்டக்களப்பு

BATTICALOA

சிந்தாமணி
சிந்தாமணி தின வெளியீடு "தினபதி" சிந்தாமணி ஞாயிறு வெளியீடு CHINTAMANI

# பாலியல் தவறிழைக்கும் பாவையருக்கு ஒரு கல்லூரி

## திருந்தி வாழ வழி காட்டும் பயிற்சிகளும் உண்டு

பதினேழு வயதுப் பருவப் பெண் அவள். இளமையின் செழுமைகள் கோலம் போட்ட சுந்தரத் தோற்றம். சாலோ பொய்ஸின் என்பது அவள் பெயர்.

இந்தச் சீர்திருத்த கல்லூரிக்கு அவள் எப்படி வந்தாள்?

பருவ தாகத்தைத் தணிப்பதற்காக அவள் செய்தத் துணிந்த பாலியல் குற்றம்தான் அவளை அங்கு அனுப்பி வைத்தது.

சீனாவில் ஷங்காய் நகரில் இருக்கிறது அந்த சீர்திருத்தக் கல்லூரி.

பலவிதமான குற்றங்களைச் செய்த இளம் பெண்களும், இளம் ஆண்களும் அங்கு இருக்கிறார்கள். பெண்களில் 40 சதவீதமானோர் பாலியல் குற்றங்களுக்காக அங்கு சென்றவர்கள் ஆவர்.

ஆண்களுக்கென்று அந்தக் கல்லூரியில் தனியான பிரிவு உண்டு.

சாலோவுக்கு ஒரு வாலிபனுடன் தொடர்பு ஏற்பட்டது. அதன் விளைவாக அவள் கருத்தரித்தாள்.

வெள்ளம் தலைக்கு மேல் போன பின்தான் விஷயம் பெற்றோருக்குத் தெரிய வந்தது.

கருச் சிதைவு செய்வித்து மகளை சீர்திருத்தக் கல்லூரிக்கு அனுப்பி வைத்தார்கள்.

— கர்ணன் —

முறை தவறிய பாலியல் தொடர்புகள் சீனாவில் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றங்கள் அல்ல.

ஆனால் அவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்கள் ஒரு வருடம் பாடசாலையிலிருந்து அல்லது கல்லூரியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள். அது மாத்திரமல்ல,

சீர்திருத்தக் கல்லூரிக்கும் அவர்கள் அனுப்பப்படுவார்கள். சீர்திருத்தக் கல்லூரி ஏறத்தாழ ஒரு சிறைக் கூடத்தைப் போலவே இருக்கும். ஜன்னல்களுக்கு கம்பி போடப்பட்டிருக்கும். கல்லூரியைச் சுற்றி உயர்ந்த மதில் சுவர்கள் எழுப்பப்பட்டிருக்கும்.

அங்கு நிர்வாகிகள் கடுமையாக நடந்து கொள்வதாகவும், சீனாவில் இளம் வயதினரின் பாலியல் சம்பந்தமான அணுகுமுறை மிகவும் பழமை வாய்ந்தது என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

ஆனால் கல்லூரி அதிபர் திரு சாவோ[...]ரின் இந்தக் குற்றச் சாட்டுதலை மறுத்தார்.

சீனாவின் பாலியல் அணுகுமுறை, மேற்கத்திய நாடுகளின் அணுகுமுறை போன்றதல்ல. நாங்கள் பாடசாலைகளில் பாலியலை விலத்தியே வைக்கிறோம். அப்போதுதான் மாணவர்கள் ஆரோக்கியமாக வளர்வார்கள் என்று அவர் சொல்கிறார்.

மேற்படி சீர்திருத்தக் கல்லூரியில் சேர்க்கப்படும் யுவதிகள், அல்லது வாலிபர்கள் முதல் இரண்டு மாதங்களுக்குத் தம்கள் குற்றங்களை காகிதத்தில் எழுத வேண்டும். அந்தக் காலத்தில் அவர்கள் பாடசாலை மைதானங்களை விட்டு வெளியேற அனுமதிக்க மாட்டார்கள்.

அதனால் இந்த இரு மாதங்களில் வாலிபர்கள் பெரும் ஆத்திரத்துடன்தான் நடந்து கொள்வார்கள்.

இரு மாதங்களுக்குப் பிறகு ஒவ்வொருவருடைய நடத்தையைப் பொறுத்து வார இறுதியில் சொந்த வீடுகளுக்குச் சென்று வர அனுமதிக்கப்படுவார்கள்.

அவர்களுக்கு பாடங்கள் நடத்தப்படும், பரீட்சைகளும் நடத்தப்படும். சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஆனால் சீர்திருத்தக் கல்லூரியில் தங்கி வெளியேறிய ஆண் அல்லது பெண்களுக்கு வேலை வாய்ப்பு பாதிப்புறுகிறது என்று சொல்லப்படுகிறது.

எனினும் கல்லூரி அதிபரின் தகவலின்படி 1979இல் இந்தக் கல்லூரியிலிருந்து வெளியேறிய 280 மேலேஜ் ஆண், பெண்களில் 70 பேருக்கு ஏற்கனவே வேலை கிடைத்து விட்டது. 120 பேர் வேலைவாய்ப்பை எதிர்நோக்கி இருக்கிறார்கள்.

(வேலை இல்லாதவர்களை அவர்கள் இப்படித்தான் குறிப்பிடுவார்கள்.) மற்றவர்கள் தங்கள் கல்லூரிகளில் மீண்டும் சேர்ந்து படிக்கிறார்கள்.

சீர்திருத்தக் கல்லூரியிலிருந்து வெளியேறியவர்களில் 70 சத வீதமானோர் "நல்ல பிள்ளை"களாக மாறி விட்டார்கள். 15 சத வீதமானோர் எப்போதாவது சிறு தவறுகளைச் செய்வார்கள். எஞ்சிய 15 சத வீதமானோர் திருந்தவே இல்லை. தொடர்ந்து பாரதூரமான தவறுகளைச் செய்து வருகிறார்கள்.



# விண்வெளிப் பயணத்தால் மண்வெளியில் நன்மைகள்







நிலவு மற்றும் அதுபோன்ற விண்வெளியைப் பற்றி அமெரிக்கா தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறது அல்லவா? அந்த ஆராய்ச்சிகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட சில உண்மைகளும் விண்வீரர்கள் பயன்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட சில கருவிகளும் இன்று வேறு பல பணிகளுக்குப் பயன்படுகின்றன.

விண்வெளியில் பறக்கும் போது தக்க பாதுகாப்பிற்காக விண்வெளி வீரர்கள் அணிந்து கொண்ட உடை, இப்போது தீயணைப்பு வீரர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த உடைகளை அணிந்து கொண்டால் நெருப்போ, நெருப்பின் வெப்பமோ நம்மைத் தாக்காது.

விண்வெளி வீரர்கள் இலகுவாகப் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்ட சில கருவிகளும், துணைப் பான்களும் இன்று பல ஆபரேஷன்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறதாம்.

விண்வெளியில் விண்வெளிக் கலம் பறந்த போது அது பூமியை பல்வேறு கோணங்களில் படம் எடுத்தது. அவ்வாறு அது எடுத்த ஒரு புகைப்படத்தில் நிலத்திற்கு கீழே ஓடுகின்ற நதிகளைத் தெளிவாகக் காட்டியதாம்.

எகிப்தின் ஜீவநதியான நைல் நதியைப் போல் சகாரா பாலைவனப் பரப்பில் ஐந்து கிலோமீட்டர் கீழே ஓர் நதி ஓடுவதை இப்படம் காட்டுகிறது. நிலத்தடியில் ஓடும் ஆறுகளையும், நீண்ட நதிகளையும் கண்டுபிடிக்க விண்வெளிக் கலன்களைப் பயன்படுத்தும் நாள் வெகு தொலைவில் இல்லை.

(ஏ—10)

## சாலினி வெளி...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"மதன், நீ போய் ஜானகிராமனை அவருடைய வீட்டில் பார்த்துட்டு வா. ஒரு வாரமாக அவருக்கு உடம்பு சரியில்லையாம்... தேவையான பணத்தை உடன் கொடுத்து விட்டு வா —" என்றார்.

மதனுக்கு எரிச்சலாக இருந்தாலும் அப்பா சொல்லைத் தட்ட மாட்டாமல் காரை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

ஏழெட்டு குடித்தனங்கள் இருந்த அந்த வீட்டில் ஜானகிராமன் குடியிருந்தார். அந்த சந்துக்குள் கார் போய் விட்டுத் திரும்ப முடியாது என்பதால் மதன் காரை தூரத்திலேயே நிறுத்திவிட்டு நடந்து வந்தான்.

வெளி நோட்டில் ஒட்டிய போர்ஷன் ஜானகிராமனுடையது. உள்ளே நுழைந்த மதன், தொலைவில் நின்றான். உள்ளே பேச்சுக் குரல் கேட்டது.

"நல்லா யோசித்துப் பாருங்க ஜானகிராம். இந்தப் பையில் பத்தாயிரம் ரூபா இருக்கு. உங்க கம்பெனியில் தயாரிக்கும் அந்த டானிக்கை எப்படி தயாரிக்கிறீர்கள். அந்த ரகசிய பார்முலாவை மட்டும் சொல்லுங்க, போதும்... அது உங்களுக்கும் பேசாமலாலுக்கும் தான் தெரியும்."

"சே, இன்னும் லட்சம் லட்சமாய் கொடுத்தாலும், நான் அந்த கம்பெனியின் அந்த பார்முலாவை சொல்லமாட்டேன். பேசாமலாலின் உப்பைத் தின்று வளர்ந்தவன். ஒரு நாளும் துரோகம் செய்ய மாட்டேன்."

"என்ன ஜானகிராம், இந்தக் காலத்தில் ஒவ்வொருத்தன் என்னென்னவோ செய்கிறான். நீங்கள் இன்னும் பழைய பத்தாம் பசலியாகவே பேசிக்கிட்டிருக்கீங்களே......!?"

"வெளியே போங்க... என் மனசை மாற்றிக்க மாட்டேன்......"

ஜானகிராமனின் குரலில் கண்டிப்பு தெரிந்தது. இதற்கு மேலும் அவர் இணங்கமாட்டார் என்றதும் வெளியே கிளம்பினார் வந்தவர்.

மதன் வெளியே வரும் அந்த மனிதரைப் பார்த்தான். நஷ்டத்தில் நடந்து கொண்டிருந்த இன்னொரு மருந்துக் கம்பெனியின் மானேஜர் அவர்.

மதன் மனம் உருகிவிட்டது. ஜானகிராமன் அந்த அழுக்கு சட்டையும், பொடி டப்பாவும், வெற்றிலை காவியேறிய பற்களும் அவரை எப்போதும் எரிச்சலடைய வைக்கும்... ஆனால், இப்போது அவர் உத்தம புருஷராகத் தோன்றினார். வெளியிலே அழுக்காகத் தோன்றினாலும், மனதிலே அவர் ரொம்ப தூய்மையானவர்.

மதன் தன் வீட்டுக்கே வந்து உடல் நலம் பற்றி விசாரித்து விட்டு, ஆயிரம் ரூபாய் பணமும், கொடுத்ததைப் பார்த்து ஜானகிராமன் ரொம்ப நெகிழ்ந்து போனார்.

மதன் காரில் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தான், தாகமாக இருக்கவே, அருகிலிருந்த ஒரு பெரிய ஹோட்டலின் முன் காரை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தான்.

நல்ல கூட்டம் — எங்கும் இடமில்லை. சாலினி மும் அருகே மூலையில் ஒரே ஒரு நாற்காலி காலியாக இருக்க, அங்கே போய் உட்கார்ந்தான் மதன்.

"சாலினி... என்ன சொல்றே...?"

"எங்க ரேட் குளுகோஸ் டின்ட், நார்மல் சலைன், குளுகோஸ் சலைன் – ஒவ்வொரு பாட்டிலும் ரூ. 5.70... நீங்க ரூ. 5.69 போட்டு அனுப்புங்க..." சாலினியின் குரல் தெளிவாக இருந்தது.

மதனுக்கு குப்பென்று வியர்த்தது.

எவ்வளவு ரகசியமான விஷயம். மூன்று லட்சம் போத்தல்கள் தேவைப்படும் அந்த மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிக்கும் மற்ற அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கும் இந்த டெண்டரை நம்பித் தான் மதன் ரொம்ப குறைந்த ரேட் ரூ. 5.70 போட்டு டைப் செய்து அரக்கு சீல் வைத்து அனுப்பி இருந்தான். அந்த ரகசியமான ரேட், சாலினிக்கும் மதனுக்கும் தான் தெரியும். அதை சாலினி – மதன் கம்பெனியின் எதிரிக்கு சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

"ரொம்ப நன்றி சாலினி. இப்ப இந்தக் கவரை வச்சுக்க. இதில் பத்தாயிரம் ரூபாய் இருக்கு... பிறகு ஆர்டர் கிடைச்ச பிறகு எங்க கம்பெனி சார்பிலே ஒரு வைர நெக்லெஸ் பரிசு கொடுக்கிறேன்..." சுரேஷ் குமாரின் குரல் அது. சுரேஷ் குமார் – அவரும் ஒரு மருந்துக் கம்பெனியின் மானேஜர்.

மதனுக்கு உடம்பு பற்றி எரிந்தது போல தகித்தது. மதன் கம்பெனிக்கு எதிரியாகக் கிளம்பி பல வாய்ப்புகளை, லாபங்களைப் பறித்தது அந்தக் கம்பெனி.

மதன் ரூ. 30.10 பைசா ரேட் கொடுத்தால், அவர்கள் 30.08 பைசா என்று ரேட் கொடுத்திருப்பார்கள். எப்படி அவர்களால் இப்படி போட்டியிட முடிந்தது. இந்த ரகசியம் மதனுக்கு இப்போதுதான் புரிந்தது. எல்லாம் இந்த சாலினியின் வேலையா? அடித் துரோகி!...

மறுநாள் காலையில் வந்ததும் சாலினி அப்படியே அவளைத் தழுவி விடுவது போல் ஒட்டியவாறு இறைந்தான். மதன் அமைதியாக —

"ஒரு டிஸ்மிஸ் ஆர்டர் டைப் பண்ணணும் மிஸ் சாலினி..." என்றான்.

"எஸ் பாஸ்... அந்த ஓல்டு ஜானகிராமனுக்குத் தானே?" ரொம்ப நிம்மதியாகக் கேட்டாள்.

"நோ... உனக்குத்தான்"! மதன் கண்டிப்பாகச் சொன்னான்.

சாலினி தடுமாறிப் போனாள்.

"ஒன்று இல் கோல்டு..."

மதன் மனசுக்குள் சொல்லிக் கொண்டான். ஜானகிராமன் உடம்பு நலமாகி வேலைக்கு வந்து விட்டார். இனிமேல் அவர் தான் மதனுக்கு அந்த [...]

இந்த பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு - 12. (இலங்கை) தபால் பெட்டி 1618. வெளியிட்ட திகதி 25 செப்டம்பர் 1983.

